மாணிக்கக்குறள் தெளிவுரை

புலவர்

இரா. இளங்குமரன்

மணிவாசகர் பதிப்பகம்

மாணிக்கக் குறள்

தெளிவுரை

புலவர்

இரா. இளங்குமரன்

மணிவாசகர் பதிப்பகம்

55, லிங்கித்தெரு, சென்னை-600001.

முதல் பதிப்பு: 1992, ஜூன், 28
மூலம் உரிமை: வ.சுப. மா. ஏகம்மை ஆச்சி
உரை உரிமை: இரா. இளங்குமரன்

பதிப்பாசிரியர்:
டாக்டர் ச. மெய்யப்பன்

விலை ரூ.12-00

பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பனார்
மணிவிழா ஆண்டு வெளியீடு

பதிப்புச் செம்மல்

டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணைப்பேராசிரியர்; திருக்குறள்இயக்கம், திருமுறைஇயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; புலவர் குழு உறுப்பினர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். இவர், தமிழ்நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பன்னிரண்டு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய தாகூர் நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர் துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களை வெளியிடுவதை தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். பதிப்புச்செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம்:

மணிவாசகர் நூலகம்

சிதம்பரம், சென்னை, மதுரை, திருச்சி, கோயமுத்தூர்.

Printed by: SRI YESES PRINT HOUSE, MADRAS-5
Phone: 833231

மீண்டும் ஒரு தமிழியக்கம்

பதிப்புச் செம்மல்

பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் "வாழ்க்கை ஆயிரம்" "தமிழ் ஆயிரம்" எனத் திட்டமிட்டு குறள் யாப்பில் அந்தாதி அமைப்பில் அறநூல் இயற்ற நினைத்தார்கள். 506 குறள்கள் எழுதி முடித்தார்கள்; தமிழ்த்தாய்த் திருவடி சேர்ந்தார்கள். மீதமுள்ள குறள்கள் உருவாகாமை தமிழரின் தவக்குறைவே.

செறிவான நடையில் அமைந்துள்ள இச் செந்தமிழ் இலக்கியத் திற்குப் பேராசிரியர் முனைவர் இரா. சாரங்கபாணி அவர்கள் சிறந்த முன்னுரை வழங்கியுள்ளார்கள். தமிழ் கற்ற எல்லோருக்கும் நூற்பொருள் விளக்கப் பெறல் வேண்டும் என்னும் நன்னோக்கில் இந்தத் தெளிவுரையை வெளியிடுகிறோம். மூலத்தில் புதைந்து கிடக்கும் நுண்ணிய கருத்து நலங்கள் சொல்லழகு, தொடரழகு, யாப்பு நுட்பங்களை இந்த உரை தெளிவுரை என்னும் பெயருக் கேற்பத் தெளிவாக விளக்குகிறது.

உரையாசிரியர் இளங்குமரன் பழந்தமிழ் நூற் பயிற்சி மிக்கவர். பல் நூல்களுக்கு உரை கண்டு-பதிப்பித்தவர். சொல்லும் பொருளும் உணர்ந்த சொல்லேறுழவர். வேர்ச்சொல் ஆராய்ச்சி வித்தகர். சொல்லாய்வுக் கலைஞர். இலக்கியப் பெரும் புலவர். மூதறிஞர் வ.சுப.மா.வின் உள்ளமும் உயிர் மூச்சும் வாழ்வும் வாக்கும் நன்குணர்ந்த பெற்றியர். அவர்கள் எழுதிய இந்நூலுரை இந்நூலைக் கற்பார்க்கு ஒரு கைவிளக்கு. தமிழ் நலமும் மூதறிஞர் புலமை நலமும் அறிய உற்ற துணை. தெளிவுற அறிந்து தெளிவுற மொழிந்திடுதலில் வல்ல இளங்குமரன் முழுதும் பழுதறக்கற்று உணர்ந்து முழுப்பார்வை பார்த்து இந்நூலின் உயிர்ப்பை, நூலின் உள்ளார்ந்த உண்மைகளை அங்கை நெல்லியென விளக்குகிற திறம் நம்மையெல்லாம் மகிழச் செய்கிறது.

1941–இல் பாவேந்தர் பாரதிதாசன் தமிழியக்கங் கண்டார். அத்திரு நூல் செய்த புரட்சிகள் பல; உருவாக்கிய அமைப்புகள் பல; எழுச்சிகள் பல. அந்நூலின் பாதிப்பு, செல்வாக்கு படராத தமிழியக்க நூல்களே இல்லை. கடந்த 50 ஆண்டுகளாகத் தாழ்ந்தும் தேய்ந்தும் தமிழ் நிலைகுலைந்துள்ளது.

மீண்டும் ஒரு தமிழியக்கம் இன்றைய கட்டாயத் தேவை

வாழ்நாளெல்லாம் தமிழுக்காக வாழ்ந்த கொள்கைக் குரிசில். மாணிக்கனார் இயற்றிய மாணிக்கக் குறள் 91–இல் வெளிவந்து மீண்டும் ஒரு தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திடுகிறது; விழுது விடுகிறது; வழிகாட்டுகிறது. தமிழ்ப் பெருமைகள், தமிழ்ப் பெரியார் சாதனைகள், முத்தமிழ்ப் புகழ், தமிழின் பன்முக நலங்கள், தமிழர் வாழ்வு மேம்பாடு, வளமான வாழ்வு ஆகிய எல்லாவற்றையும் புகழ்ந்து போற்றிப் பாராட்டுகிறார் மூதறிஞர்.

மறைவாக நமக்குள்ளே பழம்பெருமைகள் பேசுவதோடு அமையாது இன்றைய இழிநிலையை, தமிழ்மொழி படும் பாட்டினை, புறக்கணிக்கப்படும் தமிழர் நலங்களை அதிரடித் தாக்குதலாக வசையாடுகிறார். தீ உமிழும் எரியீட்டிகளாக, சில குறள்கள் உள; கூர்மை மிக்க வேல்களாகச் சில உள; தமிழ்ப்பகை வீழ்த்தும் வாள்களாகச் சில உள.

தமிழ்க் கல்வி, தமிழ்வழிக் கல்வி பற்றிப் பேராசிரியர் போல் நீள நினைந்து தெளிந்து சிந்தித்தவர் இந்தத் தலைமுறையில் எவருமிலர். அவர்தம் தெளிவான கல்விக் கொள்கை, மொழிக் கொள்கைகளுக்கு மாணிக்கக் குறள் ஒரு ஆவணமாகத் திகழ்கிறது.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தைப் பேசுவதோடு நிகழ்காலத்தின் இழிநிலையை, பழிநிலையை நினைந்து நினைந்து வருந்தித் திருந்தும் வழி வகைகளை நிரம்பவே கூறியுள்ளார்கள். எதிர்காலத்தில் தமிழ் பெறப் போகும், பெற வேண்டிய பேறுகளைப் பெரிதும் எண்ணி விரிவாக உரைத்துள்ளார்கள்.

தமிழர்கள் செய்யத்தக்கது இது, தகாதது இது; ஏற்கத்தக்கது எது புறக்கணிக்க வேண்டியவை எது, போற்றி வாழ்வு நெறியாகக் கொள்ளத்தக்கவை எவை என்பனவற்றை அழுத்தமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார்கள். இதனைக் கற்றுணர்ந்து வளம் பெறுவது தமிழர் கடமையாகும். வீறார்ந்த தமிழ் மரபுகள், வழிவழி வரும் பண்பாட்டுச் செல்வங்கள், வளமான வரலாற்று உண்மைகள் வேரோடி மீண்டும் ஒரு தமிழியக்கம் தோன்ற வழி வகுக்கத்தக்க அடிப்படைக்கூறுகள் இந்நூலில் பல்கிக் கிடக்கின்றன. பள்ளி மாணவர்கட்கு திருக்குறள் கட்டாயமாகப் பாடநூலில் பாடமாக சேர்க்கப்பெற்றது போல் இனி வருங்காலத்தில் மாணிக்கக் குறள் பாடநூல்களில் பெரிதும் இடம் பெறுவது உறுதி.

தமிழ் வளர்க்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பாடத் திட்டத்தில் மாணிக்கக் குறள்கள் பல இடம் பெற்றுள்ளன. தமிழ் வழங்கும் பல்கலைக் கழகங்களும் மாணிக்கக் குறளின் பண்பினை உணர்ந்து பாடத்திட்டத்தில் பெரிதும் இடம்பெறச் செய்யுமானால் வீறுமிக்க தமிழியக்கம் அமையும் நன்னாள் வெகுவிரைவில் அமையும். இது உண்மை. வெறும் கூற்றன்று.

தமிழியக்கக் கருத்துக்களைப் பரப்பும் நோக்கில் மாணிக்கக் குறள் மூலப்பதிப்பு, பையடக்கப் பதிப்பு, உரைப்பதிப்பு, செம்பதிப்பு என பல்வகைப் பதிப்புகளை வெளியிட்டு மணிவாசகர் பதிப்பகம் தன் தமிழ்க் கடமையை நிறைவேற்றி மகிழ்கிறது.

இந்நூலின் மெய்ப்பு திருத்த உதவிய மூதறிஞரின் உற்ற தோழர் திருமிகு செல்வத்தாண்டவன் பணி சிறப்பானது. நூல் செம்மைக்கு பலவாற்றாலும் துணைநின்று வாழும் வ.சுப.மாவாகிய பேராசிரியர் முனைவர் இரா. சாரங்கபாணி அவர்களுக்கும் தமிழ் உணர்வு உடைய தமிழ்மக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். மாணிக்கக் குறளினைக் கற்போம்; மாண்புகள் பல பெறுவோம்.

மதிப்புரை

முனைவர் இரா. சாரங்கபாணி

சிறப்புநிலைப் பேராசிரியர்

மூதறிஞர், செம்மல் வ.சுப. மாணிக்கனார் வள்ளுவம், தமிழ்க் காதல் என்னும் சீரிய திறனாய்வு நூல்களையும் நெல்லிக்கனி, ஒரு நொடியில் முதலிய நாடகப் படைப்பிலக்கியங்களையும் உருவாக்கிய பெருமகனார். அவர்தம் செய்யுள் இலக்கியமாக வள்ளல் அழகப்பர் மீது பாடிய கொடைவிளக்கும் பல்வேறு நிலையில் பாடிய ஆயிரம் குறள் வெண்பாவில் அந்தாதியாகத் தமிழெனத் தொடங்கித் தமிழென முடித்துத் 'தமிழாயிரம்' என்னும் நூலியற்றத் திட்டமிட்டிருந்தார். இன்னும் பல இலக்கியங்கள் படைத்துத் தமிழன்னைக்கு அணி செய்ய வேண்டும்; மக்கள் நிலையை உயர்த்த வேண்டும் என்பது அவர்தம் திண்ணிய எண்ணம். ஆனால், காலன் அவரது வாழ்நாள் இடையிலேயே காலம் பார்த்துவிட்டான். அக்காலனின் கொடுவினை யால் இலக்கியப் பணிகள் தடைப்பட்டன. தமிழாயிரமும் முற்றுப் பெறாமல் ஐந்நூற்றாறு குறள் அளவில் நின்று விட்டது. அக்குறள் நூலே இப்பொழுது 'மாணிக்கக் குறள்' என்னும் பெயரில் வெளிவருகிறது.

தமிழ்ச் சிறப்பு:

இந்நூல் முதற்கண் தமிழின் சிறப்பு, தமிழின் பெருமை முதலியவற்றை இயம்பும். தமிழிற் சிறந்த மொழி உலகில் எங்கணும் இல்லை. அதுவே முதல் தாய் மொழி. இதற்கு அரப்பா முதலிய அகழ்வாராய்ச்சி சான்று பகரும். அது பொதியிற் பிறந்த மலைத்தமிழ். அது முத்தமிழாக வளர்ந்தது. மன்னரும் புலவரும் சங்கங்கள் கண்டு தமிழைக் காத்தோம்பினர். சப்பான் மொழியிலும் தமிழ்ச் சொற்கள் மலிந்து காணப்பெறும். பாலி மொழியில் வாலி போன்ற தமிழ்ச் சொல் உண்டு. மறைந்த குமரிக் கண்டத்தும் பண்டு தமிழ்மொழியே வழங்கியது. பேச்சு மொழியுள்ளும் மூச்சுடைய மொழியாக இன்றும் இயங்குவது தமிழே. அம்மொழி பெருஞ் சமயக் காப்பியங்களை யெல்லாம் பெற்ற அருஞ்சிறப்பினை (116). தமிழன்னை பிறந்த நாளில் அனைத்துலக மண்ணில் எவளும் பிறந்ததில்லை (117). அடியார்க்கு நல்லார் உரையால் முதற்காலத்தே பலதுறை நூல்கள் இருந்தமை அறிகிறோம். அவையெல்லாம் தமிழரது விழிப்பின்மையால் தீயாலும் கறையா னாலும் அழிந்தொழிந்தன (22, 23).

தமிழ்க் காவலர்கள்

தமிழ்ச் சொத்துக்குத் துணையாயிருந்து பதிப்பித்துக்காத்த மூதறிஞர் உ.வே.சா. (35) பதிப்புக் காவலர்கள் ஆறுமுக நாவலர் (36) சி.வை. தாமோதரனார் (37) பவானந்தர் (39) நற்றிணைக்கு உரைகண்ட பின்னத்தூர் நாராயணசாமியார், திரு.வி.க. (85) யாழ்நூல் படைத்த விபுலானந்தர் (256) வடமொழிச் சகுந்தலை நாடகத்தைத்

தமிழ்ப்படுத்திய மறைமலையடிகளார் (349) அங்ஙனமே அருத்த சாத்திரத்தைத் தந்த பண்டிதமணி கதிரேசனார் (350) தமிழ்க் கீதை அருளிய சித்பவானந்தர் (351) சிங்கப்பூரில் தமிழ்ப் பணியாற்றிய சாரங்கபாணியார்; மறைந்த தமிழ் நூல்கள் இயற்றிய மயிலை சீனி. வேங்கடசாமி (437) மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் (3) முதலியோரின் தமிழ்த் தொண்டினை நினைந்து நன்றியுடன் போற்றுவர். வேற்று நாட்டிலிருந்து வந்து தமிழ்ப்பணி புரிந்து கல்லறையில் தமிழ் மகன் எனப்பொறிக்கச் செய்த போப்பையர் (155) கால்டுவெல் ஐயர் (138) போன்றோரையும் நினைவு கூர்வர். பாரதி கூறியாங்குப் பிறநாட்டுக் கலைகளைக் கொணர்ந்து மொழியை வளப்படுத்தாது அவர் படத்தை மட்டும் தொழுது நூற்றாண்டு விழாக் கொண்டாடுதலை இகழ்வர் (50, 51) 'புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்' என்னும் வள்ளுவத்தை அன்னார் கடைப்பிடிக்கவில்லையே என்பது அவரது ஏக்கம்.

வள்ளல்கள்

கொடி வருத்தங் கண்டு கொடித்தேரை நிறுத்தி வழி நடந்து சென்ற வள்ளல் பாரியையும் (199) செத்தும் கொடுத்த சீரிய கொடைஞர் சீதக்காதியையும் (200) தமக்கென்று உடைமை ஒன்றையும் கொள்ளாது அனைத்தையும் கல்விக்கு அளித்த அழகப்பரையும் (201) தனித்தொரு பல்கலைக்கழகம் கண்டும் தமிழுக்கும் தமிழிசைக்கும் நிலைத்த தொண்டாற்றி நீள் புகழ் எய்திய அரசர் அண்ணாமலையாரையும் (202, 257) மன்னிய அறத்தினால் மாண்புகழ் கொண்ட பச்சையப்பரையும் (203) பல்கலைக் கழகங்கட்கு அறக்கட்டளை நல்கி அருந்தமிழ் போற்றிய அறிஞர் பெருமகனார், சொல்லின் செல்வர் சேது அவர்களையும் (204) நினைந்து பாடுவர்.

நாட்டுத் தலைவர்கள்

நாடு நலம்பெற மக்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட பெருந்தகையர் அண்ணல் காந்தி, பெரியார் ஈ.வே.ரா., பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா ஆகியோரை அரசியல் வேறுபாடு கருதாமல் அவர்தம் பண்பு நலங்களையும் செயற்றிறங்களையும் மதித்துப் பாராட்டுவர். 'ஒளிமிக்க காந்திசொல் ஓம்பு' (84) என்றும் 'பெரியார் கொதிப்புறு தன்மானம் கொள்' (319) 'ஏழை நிலையறிந்தார் எந்தை பெரியாரை, ஊழை மறுத்தாரை ஒப்பு' (332) என்றும் 'துணிந்து பெருந் தலைவன் சொற்றமிழ் ஒன்றால், திணிந்த புகழ்பெற்றான் தெம்பு' (139) என்றும் 'தொலை நோக்கு வேண்டும் சொலல்வல்ல அண்ணா, நிலை நோக்கு வேண்டும் நிமிர்ந்து' (69) என்றும் வரும் பகுதிகள் சான்றாகும்.

கற்பவை கற்க

நகை, அழுகை முதலிய மெய்ப்பாடுகள் குறித்துக் கூறும் முதல் நூலாகிய தொல்காப்பியத்தைப் போற்றுக என்றும் வாழ்வியல் நுலான அதனை முழுவதும் படித்தல் முறை என்றும் அந்நூலை முறையொடு கற்பின் நெஞ்சம் நிறைவோடு நேர்படும் என்றும் உரைப்பர்.

வாழ்க்கையைத் துய்க்கம் நெறி கூறும் தொல்காப்பிய அகத்திணை நுட்பங்களை உணர்ந்து உள்ள நலமும் உடல் நலமும் எய்தலாம் (182, 183). 'பழம் போலும் சங்கப் பனுவலைக் கற்றால் கிழம் போகும், கீழ்மையும் போம்' (461) 'கீழ்க்கணக்கு நூலைக் கிளர்வொடு கற்றக் கால், ஊழ்க்கணக்கு நன்றாம் உயர்ந்து' (462) என்பது பதினெண் மேற்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய அவர்தம் கணிப்பாகும். தில்லையில் திருவாசகம் பாடாமை கண்டு உள் வேர்த்து 'நினைவினிய வாசகம் நேரொலியாக் கோயில், கனவிலும் தோன்றா கதிர்த்து' (126) என்று பாடுவர். 'ஆழ்வார் தமிழிலும் ஆண்டாள் தமிழிலும் வீழ்வார்க் குளதோ விதி' (299) என்னும் குறள் அவருக்கு நாலாயிரப் பாசுரங்களில் உள்ள ஈடுபாட்டினைப் புலப்படுத்தும்.

திருக்குறள்

உலகச் சான்றோர் எல்லாம் வாய்மை இசைத்த திருக்குறளின் சீர்மை கண்டு அதனைத் தமது தமது என்று ஏற்பர். முறைதமிழ் போற்றி முழுமடங் கொன்று குறள் மறையை மதித்துக் கற்க (47). வள்ளுவம் தோன்றிய தாய்மொழியிலேயே அதனைக் கற்கும் விதியில்லாதவன் விலங்காவான் (48). குறள் முழுதும் மனப்பாடம் செய்து கற்போம்; கற்று ஒழுக்கமெனும் அணியைப் பூண்போம் (283). வாழ்வு ஒளிபெற வேண்டின் ஒரு குறளையேனும் தெளியக் கற்றுச் செயற்படுக (285). திருக்குறள் கற்பவர் திறமையுடையவர்; குறைமை குறைவர். வள்ளுவர் கோட்டத்தைப் போற்றிக் குறள் கற்க (398). குறளை உணராக் கொடுந்தமிழன் தெருவின் சரளைப் பொடிக்குச் சமம் (399). சமம் என்று கூறுதலும் ஒவ்வாது; ஏனெனின், சரளை தெருவமைப்புக்கு ஏற்றதாகும் (400). இங்ஙனம் கூறிக் குறள் கல்லாதான் சரளைக் கல்லினும் இழிந்தவன் எனக் குறிப்பிற் சாடுவர்.

கற்கும் முறை

எடுத்த இப்பிறப்பில் சங்க நூல்களுள் ஒன்றையேனும் நன்றாகக் கற்றல் வேண்டும். பண்டிதமணி போல் ஆர்வத்தோடு நூலினைப் பயின்று நயங் காண்க. வரி வரியாக நூலைக் கற்றால் அதனை மனவுடைமை ஆக்கிக் கொள்ளலாம். சில நூல்களையேனும் முழுமை யாக, செம்மையாகக் கற்றால் தமிழின் பெரும்பயனை ஒருவன் எய்தக் கூடும். ஔவையருளிய நூல்களைப் பன்முறை கற்பின் நம் ஆற்றல் விரிந்து பயன்மிகும். வெள்ளோட்டமாகச் சிறுநூல்களைப் போற்றின் தமிழ்த்திறன் விரியும். பெரும்புகழ் வாய்ந்த நூல்களைக்கூடப் போற்றிப் படிப்பின், அவை அரியன ஆகாமல் காற்றில் மிதக்கும் கலம்போல எளியவாகும். தமிழ் கடுமையானது எனக் கலங்கல் வேண்டா. கடுமை எனக் கருதப் பெறும் சங்கப் பாடல்களுள் முடிந்த அளவு சில பாட்டுக்களையேனும் படிக்க. பாடல்களைப் பிரித்துப் படிக்காமல் சொற்களைப் புணர்த்துப் படித்தால் கவிஞனின் உள்ளோட்டத்தைப் புரிந்து கொள்ளளாம். யாப்பு நலங்கொண்டு கவிஞன் உள்ளத்திற் பதியவைக்கும் கருத்தை உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும். பலதுறைக் கல்விகளையும் தமிழ் நூல் வாயிலாகவே கற்றல்

முறையாகும். முறை வைத்து மாணவர்கள் பாடஞ்சொல்லும் பழைய நெறியே கல்வி நிறைவைத் தருவது. அயல் நெறிகளையும் போற்றிப் படிக்க. அங்ஙனம் செய்யுங்கால் மூட வெறிச் செயல்களை விலக்குக. அயல்நாட்டாரின் அறிவு நூல்களை விலக்கி ஒதுக்காமல் ஆய்வு நோக்கோடு உளங்கொளக் கற்க. அயலாரின் விரிந்த நூல்களை ஒப்பீடு செய்து பயின்றால் ஆய்வு வளங்கள் பெருகும். மாணைக் கொடி, தூங்கும் யானையைத் துறுகல் எனக் கொண்டு படரச் செல்வது போல அறிவுச்சுடர் விளங்க அயலார் நூல்களை வளமுடை நூல்களென எண்ணி விழைந்து கற்றல் வேண்டும். வரிவரியாகப் பார்த்து எழுதிப் படித்தால் பிழைகள் வாராமற் காத்துக் கொள்ளலாம். இவ்வாறு படிக்கும் முறைகளைச் சில குறள்கள் விளக்கும்.

தாய்மொழிக் கல்வி

அயல்மொழி கற்க முயலுமுன் உன் தாய்மொழித் தமிழை முதலில் கற்பாயாக (45). அங்ஙனம் முதன் முதலாகத் தாய்மொழியைக் கற்பின் அறிவுக் கூர்மையை முதன்மையாகப் பெற்று மேன்மையுறலாம் (46). என்று தொடக்கப் பள்ளியெல்லாம் தமிழில்லம் போல் மாறுமோ அன்றுதான் அறிவு பிறக்கும். அறிவு வளர்ச்சிக்கு அயல்மொழிகள் போடும் தடைகளை மறியல் செய்து தடுக்க வேண்டும். இளங்குழந்தைகட்கு வேற்று மொழி கற்பித்தல் வீணாகும். வேற்றுமொழி கொண்டு அக்குழந்தையின் இளமைக் காலத்தை அழித்தல் அறிவுடைமை ஆகாது. தமிழ்ப்பயிர் வளராத இளமையில் கற்கும் பள்ளிப் படிப்பு மயிர் வளராத கன்னிமை போன்றது (266) என்பர்.

தமிழ் வளர்ச்சிக்கு வழி

வருவாய்க்குரிய வளர் தமிழாக விரிவாய்ப் புதுக்க விரும்புக. விரும்புந் துறையெலாம் தமிழிலே கற்குமாறு ஆவன செய்க. ஆக்க அறிவனைத்தும் தமிழ்மொழி வழியே பயிலப் பல நிறுவனங்களைத் தொடங்குக. எல்லாக் கலைகளையும் செந்தமிழிலேயே காண முடியும். அங்ஙனம் கண்டு காவாவிடின் நாம் தாழ்ந்தவர்களாவோம். வளமற்ற மொழியெலாம் கல்விமொழியாகி உயர்ச்சி பெறும் போது தமிழன் ஓய்ந்திருத்தல் தகாது. இந்தி ஒழிக எனக் கத்துதலால் இந்தியும் ஒழியாது; தமிழும் வளராது. தமிழைப் பலவகையிலும் உயர்த்துக. ஊர்ப் பள்ளிதோறும் தமிழைக் கற்கச் செய்து அயல்மொழியை அகற்ற வேண்டும். தூர்ந்த மொழிகள் துளிர்க்கும் நிலைகண்டும் நீ சோர்ந்து நிற்றல் கூடாது. அரசும், எங்கும் தமிழ் வழியே அரசியல் நடத்த வேண்டும். உயர்ந்த நூல்களை இயற்றல் வேண்டும். அயல்மொழி நீக்கித் தமிழ்ச்சொல் பயிலப் பலதுறை நூல்கள் வேண்டும்.

குழந்தையின் வேண்டுகோள்

தமிழ்ப் பற்றின்றி அயல்மொழி மோகம் கொண்டு பெற்றோர் பலரும் ஆங்கிலப் பள்ளியில் தம் குழந்தைகளைச் சேர்க்கின்றனர். இதனைக் கண்டு குழந்தை தந்தையை நோக்கி என்னைத் தமிழ்ப் பள்ளியிற் சேர்க்க என வேண்டிக்கொள்வதாக ஆசிரியர் பாடியிருப்பது இக்கால நிலை உணர்த்தி அறங்கூறுவதாகும்.

கனிமிக்க அப்பா கடமை தமிழின்
தெளிமிக்க பள்ளிக்கண் சேர். (71)

இக்குறள் குழந்தை தந்தைக்குக் கடமை யுணர்த்துவது காட்டும். ஆசிரியர் குழந்தைக்குப் பிறமொழித் திணிப்பினை வெறுக்குமாறும் அறிவுரை கூறுவர்.

இனிப்பு விரும்பும இதழ்மழலாய் மற்றைத்
திணிப்பு மறுப்பாய் சினந்து. (93)

மொழிக் கலப்பு

தமிழ் வளர்ச்சிக்கு, 'களைக அயலொலி காண்க தமிழ்ச்சொல், அளைக பொருள்வளம் ஆர்ந்து' (167) எனக் கூறி வழிகாட்டுவர். கேட்கும் ஒளியெல்லாம் தாய்மொழிக்கு வேண்டும் என்று தமிழ்மொழியில் வேண்டாத ஒலிகளைச் சேர்த்து எழுதினால் மொழிக் கேடு உண்டாகும். ஒலியும் வரம்பின்றிப் போம். ஒலி வரம்பு போற்றி நூல் இயற்ற வேண்டும். தூய தமிழில் எழுதப் பெறும் இதழ்களே தமிழுக்கு விளக்கு. வேற்றுமொழிகள் விளக்குகின்ற பொடியாகும் (222 – 224). நாடு உரிமையடைந்தும் நம் மொழி, மொழிக் கலப்பினால் சிறுமைப்படுகிறது. மொழிக் கலப்பால் நாட்டெல்லை சுருங்கியது (302). அயலொலியால், மொழிக் கலப்பால் வேங்கடத்தை இழந்ததையும் மலையாளம் பிரிந்ததையும் குறள்கள் (367, 368) சுட்டும்.

ஓர்ந்தார் ஒளிக்கார் உயர்தமிழ்க் கேடெல்லாம்
சேர்ந்த கலப்பால் தெளி (380)

பிறமொழி மோகம்

ஆங்கில மோகங் கொண்ட மூடரிடத்துத் தமிழுக்கு அரணாக உயிரும் மெய்யுமாக முப்பதெழுத்து இருந்தும் பயனில்லை. தாய்மொழி வாடக் களிக்கும் மகனே, மூடருள் மூடன் எனப்படுவான் (55). தமிழ்த் தாயை அசல் என்று கருதாது நகல் என்று கருதும் தசைப் பிண்டத்தை மகவென்பேனோ, மண்ணெண்பேனோ, மக்கென்பேனோ, தமிழ்ப்பால் பருகாது தசை பெருக்கி வாழ்ந்து பயனென்? அவர்கட்கு உணவு ஒரு கொள்கையா, 'சிச்சீ உடையின் கணம் ஒரு கொள்கையா' என்று கேட்டு உணவும் உடையும் வீணென்பர். 'அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்முடைய குற்றம் மறையா வழி' என்னும் குறட்சாயலை மேலைக் கருத்திற் காணலாம்.

எழுத்துச் சீர்திருத்தம்

எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரால் எழுத்துக்களைக் குறைப்பதும் மாற்றுவதும் ஆசிரியருக்குப் பிடிக்காத ஒன்று. ஆதலால் 'எழுத்துத் திருத்தம் இயல்போ தமிழைக் கழித்துச் சுழிக்குங் கதை' (156) 'ஒலி கூட்ட வேண்டா' (217) என்று குறிப்பிடுவர்.

பலவகை அறம்

தமிழ் மொழியைப் புரப்போர்க்குச் சில அறிவுரைகள் கூறப் பெறுகின்றன.

மகனாக வாழ்க வளர்தமிழ்க் கன்னிக்கு
எமனாக வாழ்தல் இழிவு. (144)

இழிவை இனியேனுஞ் செய்யற்க; செய்யின்
அழிவை இனத்தொடும் அட்டு. (145)

பொருள் செய்வார் வேண்டின் பொதியத் தமிழை
இருள்செய்வார் தம்மை யிகழ். (280)

இல்லறம் மேற்கொள்வார்க்குச் சொல்லும் அறங்கள் சில. திருவள்ளுவர் 'மடி செய்து மானங் கருதக் கெடும்' என்று கூறியதை ஒட்டிச் சில குறள்கள் அமைந்துள.

மானம் நயந்தார்க்கு மாண்புடை இல்லறம்
கானம் பயந்து விடும். (180)

விடுக குடிமானம் விட்டதன் பின்பே
தொடுக திருமணத் துய்ப்பு. (181)

வணிகர்க்கு அறம்

மெய்யென்று செய்யற்க மெய்யல் கரும்பணம்
தய்யென்று கைப்பூண் தரும். (230)

எழுத்தாளர்க்கு அறம்

கண்ட படியெழுதும் கைவண்ணம் கொள்ளற்க
மண்டு தமிழ்கெடுக்கும் மை. (293)

புகைப்போர்க்கு அறம்

மறந்தொழிக வெண்சுருள் வாய்நாற்றம்; நோய்தான்
பறந்தொழிக நெஞ்சிற் பரிந்து. (237)

புற்று வளர்க்கும் புகைப்பிடிப்பு விட்டக்கால்
வற்றுமே நெஞ்சு வலி. (449)

வலியென்று அறிந்திருந்தும் வாயூதிக் கற்கும்
எலியர் தமக்கே எமன். (450)

குடிப்போர்க்கு அறம்

போரிற் புரண்டால் புகழுண்டு; சாராய
நீரிற் புரண்டால் நினை. (446)

உடலே சிறந்த உடைமை மதுவின்
குடமாதல் அன்புக் கொலை. (453)

சீர்திருத்தம்

பார்க்காதே சாதிமதம்; பார்வைக் குறிதப்பித்
தூர்க்காதே அன்புத் துளை. (20)

வாழ்வுக் குகவா வறட்டு மரபுகள்
பாழ்வுக் கிணற்றின் படி. (336)

தொட்டக்கால் தீட்டெனும் தொல்வேத நாகரிகம்
பட்டக்கால் அன்றோ பழம். (378)

'பாடல் படிப்பவர்க்கு உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் எழுப்ப வேண்டும் எனின், ஆற்றொழுக்குப் போன்ற அணிநடைச் செய்யுட்கள் சாலா. வெள்ளம் நிகர்க்கும் வேகப்பா வேண்டும். சுறுசுறுப்பும் விறுவிறுப்பும் சொல்லிலும் சொற்றொடரிலும் சொன் முறையிலும் வேண்டும். கருத்தில் ஆழம் மட்டும் போதாது; சுழிப்பாடும் வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து என்பதனைத் தமிழ்க்கடல் இராய.சொ. இயற்றிய காந்திக் கவிதைக்கு அவரளித்த மதிப்புரையால் அறியலாம். இந் நடைப் போக்கினைத் திருவள்ளுவர் போன்ற புலமைச் செல்வர்களிடமிருந்து அவர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது. 'அழுக்காறென ஒரு பாவி' என்றும் 'ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர் தோற்றம் நிலக்குப் பொறை' என்றும் 'செவியிற் சுவையுணரா மாக்கள் அவியினும் வாழினும் என் என்றும் கூறும் குறள் நடை ஆசிரிர் வசைநடை பாடக் காரணம் என்னலாம்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் எழுந்த நூல்களை எல்லாம் சிலர் பொறுப்பின்றி இப்பொழுது படிக்கச் சொல்கிறார்களே? அவை இக்காலத்திற்குப் பயன்படுமா? அது காலக் கொலையன்றோ? எனச் சிலர் மேதையெனக் கருதிக் கொண்டு பேதைமை தோன்ற வினவுவர். இவ்வினாவின் கடுமையையும் கொடுமையையும் குணமென்னும் குன்றேறி நின்ற செம்மலுக்கும் தாங்க வியலவில்லை. தமிழின் முதல் நூலை, தொல்காப்பியத்தைப் பயனிலா நூல் எனக் கூறுவதா? அட பாவி, அவ்விழுமிய நூலையூா இகழ்கிறாய். நின் அறிவு நன்னிலையில் இருந்தால் இங்ஙனம் கூறாய். நீ அறிவு திரிந்த பித்தனாதல் வேண்டும். ஆதலின், உன் உன்மத்தம் தீரக் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு வா; அதுவே உனக்கேற்ற இடம் எனக் கொதித்துப் பாடுவர். தொல்காப்பியம் தொட்டுத் தொழுது கற்க வேண்டிய தெய்வத் தன்மை சான்ற நூல்; அதைக் கல்லாது காலங் கழிப்பது வீண் என்பது அவர்தம் தலையாய கொள்கை. எனவே, அவர் அந்நூலை எள்ளி நகையாடுவானை,

பயனிலை என்பானோர் பாவிக்கு மூளை
வயமிலை கீழ்ப்பாக்கம் வா. (405)

என்று வசை பாடுகிறார்.

தமிழ்மொழி வாடப் பிறமொழி ஓம்பி மகிழ்வானையும் பிறமொழி கற்று வயிறு வளர்ப்பவனையும் தமிழைக் குறைசொல்லி இகழ்பவனை யும் ஆசிரியர் இகழ்ந்து வைவர்.

மூடருள் மூடன் எனப்படுவான் தாய்மொழி
வாடக் களிக்கும் மகன். (55)

வயிறு கழுவுவான் வாழ்வார்க்குத் தூக்குக்
கயிறே நலஞ்சால் கலன். (58)

சிறுமை தமிழெனச் செப்புவர் வீந்து
மறுமையை எய்தாரோ மற்று. (340)

திருவள்ளுவர் ஈயாத கஞ்சனை இரக்க வேண்டா என இரவலர்களை வேண்டுவர்.

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று

இந்நடையை மேற்கொண்டு இந்நூலாசிரியர் தமிழர்களையும் குடியர்களையும் வாக்காளர்களையும் வேண்டிக் குறள் யாத்துள்ளார்.

இரப்பேன் தமிழரை இன்றேனும் தாயைப்
புரப்பீர், புரப்பீர் புரிந்து. (79)

எனைத்தானும் காக்க இருக்கின்ற நூல்கள்
உனைத்தானும் வேண்டுவன் ஒன்று. (104)

பரிந்திரப்பன் சாராயப் பாலைப் பருகி
எரிந்திறக்க வேண்டாமே என்று. (238)

நினைமறித்து வேண்டுவன் நின்வாக்கைக் கள்ளின்
நனவிலக்கும் கட்சிக்கு நல்கு. (447)

அழகு முதலியவற்றால் செருக்கித் திருபவரைச் சிறுபஞ்சமூலம் (20) 'இருகால் எருது' என இகழும். அந்நடையை ஒட்டி,

பொருதுதான் என்பயன் புல்லடிமை மாக்கள்
எருதுதான் என்றே இரங்கு. (78)

என்று பாடுவர்.

தன்னா யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே

என வெற்றி வேற்கை கூறும். இதனைக் கருத்திற் கொண்டு,

கொடியார் எவரெனிற் கோல்தமிழைப் பள்ளி
படியார் பிறப்பிற் பதர். (87)

என்று பாடுதல் காணலாம்.

தேவாரம் பாடுபவர் 'வானிடை வாழ்வார் மண்மிசைப் பிறவார்' எனவும் நாலாயிரம் பயில்வார் 'மாகவைகுந்தத்து மகிழ்வெய்துவர் வைகலுமே' எனவும் நாயனாரும் ஆழ்வாரும் பயன் காட்டிக் கூறுவது போல, இந் நூலாசிரியரும் தமிழ்ப் பயன் காட்டுதல் நோக்குக.

உறையுள் உணவுடை யெல்லாம் தமிழால்
நிறையக் கிடைக்கும் நினை. (100)

நினைவு தமிழாயின், நீள்நிலை வாழ்க்கை
புனைவிலை பொற்றாலிப் பொன். (101)

நம் கடமை கல்வி முழுதும் தமிழுக்கு உரிமையாக்குதலே யாம் (160). அரசாணை வரும் என நம்பினால் யாதும் நடவாது. சூடற்ற ஆட்சிக் கொள்கை, படை பொறுப்பற்றுப் போர் செய்தல் ஒக்கும். (161)

போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத்
தேரோட்டம் இல்லை தெளிவு. (163)

எனத் தமிழ்க் கிளர்ச்சிக்கு வித்திடுவர்.

மழலையர் பள்ளி முதல் பல்கலைக் கழகக் கல்விவரை எல்லாத் துறைகளிலும் தமிழ்வழிக் கல்வி வேண்டும். மொழிக் கலப்புச் செய்தல் அறவே கூடாது. கற்பன கற்று நன்னெறியில் ஒழுகுதல் வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கப் பணிகள் புரிதல் வேண்டும் என்பன செம்மல் வ.சுப.மா. அவர்களின் உயிரிக் கொள்கைகள். அவற்றைத் தமிழ் மக்களின் உள்ளத்தில் விதைப்பதே இந்நூலின் நோக்கம். விதை முளைத்துச் செழித்துப் பயன் விளைப்பதாகுக!

தமிழிற் சிறந்ததோர் தாய்மொழி இல்லை
இமிழ்கடல் ஞாலத் தெமக்கு. 1

பொருள்: எமக்கு, ஒலிக்கும் கடல் சூழ்ந்த இந்த உலகத்தில், தமிழைக் காட்டிலும் சிறந்ததாகிய தாய்மொழி வேறொன்றும் இல்லை.

விளக்கம்: உலக மொழிகளுக்கெல்லாம் மூல முதல்மொழி தமிழே ஆகலின் தம் தாய்மொழி, உலக மொழிகளின் தாய் என்னும் பெருமிதத்தால் 'எமக்கு' என்றார்.

எமக்கென்ப தென்னோ எனைமொழி யாளர்
தமக்கும் பழந்தாய் தமிழ். 2

(பொ) தமிழ் எமக்குத் தாய்மொழி என்று கூறுவது என்ன தெரியாத்தனம். அத்தமிழ், உலகத்துள்ள (வழங்கு மொழிகள், வழங்கா மொழிகள், திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள், எழுத்து மொழிகள், எழுத்திலா மொழிகள் எனப்படும்) எல்லா மொழியினர்க்கும் மூத்த முதல் தாய்மொழியாகும்.

(வி) தமிழர்க்குத் தமிழ், தாய்மொழி என்றால், பிற மொழியாளர் மொழியைத் தந்த மொழி தமிழாகலின் 'பழந்தாய்' என்றார்.

தமிழ்முதற் றாயென்ற பாவாணர் தஞ்சொல்
அகழ்விலும் சான்றாம் அறி. 3

(பொ) 'முதல் தாய்மொழி அல்லது தமிழாக்க விளக்கம் ' என்னும் நூலை இயற்றியும், அக்கொள்கையை நிலைநாட்டியும் சென்ற மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் முடிபுகள், அகழ்வு ஆய்வுகள் வழியே கிடைத்த சான்றுகளாலும் மெய்ப்பிக்கப்பட்டிருத்தல் அறிக.

(வி) காத்து எலியத்து, எக்கேல் என்பார் எழுத்துகளும், 'மாக்கடல் மர்மங்கள்' முதலிய நூல்களும் அகழ்வாய்வு வழிப்பட்ட சான்றுகள். அடுத்து வருவது அதன் சான்று.

அறியார் எவர்கொல் அரப்பா நகரும்
வளமார் தமிழே வழக்கு. 4

(பொ) இந்நாளில் தென்னகப் பகுதித் தமிழாக வழங்கும் இது, சிந்துவெளி மொகஞ்சதாரோ, அரப்பாப் பகுதிகளில் வளமாக அமைந்திருந்ததையும் அரிய வழக்காக இருந்ததையும் எவரே அறியார்?

(வி) நடுநிலையுடைய அகழ்வு ஆய்வாளர் எவரும் அறிவர் என்றபடி. மொகஞ்சதாரோவை இணைத்தமை தொடர்புடைமையால். அது 397ஆம் குறளால் விளங்கும்.

வழக்காட வேண்டா; வடமொழிக்குச் செப்பம்
தழக்காடத் தந்த தமிழ். 5

(பொ) வழக்காடி நிலைநாட்ட வேண்டுவது ஒன்று இல்லை; வடமொழியின் நெடுங்கணக்குச் செப்பமும் ஒலிச் சீர்மையும் விளங்கத் தந்தது தமிழ்மொழியேயாம்.

(வி) சமற்கிருதம் என்பதன் பொருள் செப்பம் செய்யப்பட்டது என்பதே. அச்செப்பம் தமிழ்மொழியொடு தொடர்பு கொண்டமையால் நேரிட்டது என்னும் மொழி வரலாற்றை உரைத்தார். தழக்காட - ஒலிக்க.

தமிழின் அகலமென் சப்பான் மொழியும்
மகிழும் தமிழ்ச்சொல் மலிந்து. 6

(பொ) தமிழின் விரிபரப்பை என்னென்று இயம்புவேன்! அப்பாலுக்கு அப்பாலாம் சப்பானிய மொழியும், தன்னிடத்துத் தமிழ்ச் சொற்களை மிகக் கொண்டு பொலிந்திருத்தல் கண்கூடாகும்.

(வி) சப்பானிய மொழியின் அடிச் சொற்கள் பலவும் தமிழாக இருத்தலை அம்மொழி வல்லாரே ஆய்ந்து எழுதியிருத்தல் அறியத்தக்கது.

மலிந்த சரக்கன்று மாந்தன் முதல்வாய்ப்
பொலிந்த தமிழெனப் போற்று. 7

(பொ) தமிழ் எளிதாகக் கிடைத்த இந்நாட் பொருளன்று; அது, முதன் மாந்தன் முதன் முதலாகத் தன் வாயைத் திறந்து மொழிந்த பழம் பெருமையது என்பதை உணர்ந்து பேணுவாயாக.

(வி) மலிவு - மிகுதிப் பொருளதாகாமல் எளிமைப் பொருள் தந்து நின்றது. மிகுதியாம் போது கேட்பாரற்று எளிதாகிவிடல் இயற்கை.

போற்றுதல் செய்வோம்; புகழறியார் நெஞ்சினை
மாற்றுதல் செய்வோம் மதித்து. 8

(பொ) தமிழைப் பேணி வளர்க்கும் கடமைகளை முறையாகச் செய்வோம்; அதேபொழுதில் அத்தமிழின் சிறப்பறியாமல் ஒதுக்குவார் உள்ளத்தை உரிய வகையால் மதித்துத் திருத்தி அமைக்கவும் செயலாற்றுவோம்.

(வி) தாய்மொழித் தொண்டில் தலைப்படுவார் அதன் வளர்ச்சிக்காகும் பணிகளைச் செய்வதுடன், அதனைப் புறக்கணிப்பாரை வழிப்படுத்திக் கொள்ளுதலையும் கடனாகக் கொள்ள வேண்டும் என்கிறார்.

மதிப்போம் தமிழை மலைப்பிறப் பென்று
குதிப்போம் முருகியற் கூத்து. *9*

(பொ) முல்லை முதலிய நிலங்கள் தோன்றாத குறிஞ்சிக் காலத்தே தோன்றிய மொழி தமிழ் என்று போற்றுவோம்; அதனால், அழகு தவழும் வெற்றிக் கூத்தினை ஆடுவோம்.

(வி) ''கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு, முன்தோன்றி மூத்த குடி'' என்பது தமிழின் மலைப் பிறப்பைக் காட்டும் (பு.வெ.கரந்.14). 'பொதியத் தமிழ்' என ஆசிரியர் சுட்டுதலும் கருதத்தக்கது (280).

கூத்தும் இயலும் குழல்யாழ் இசைமூன்றும்
ஏத்தும் மொழியே எமது. *10*

(பொ) நாடகம், இயல், குழல் யாழ் முதலாம் இசை என்னும் மூன்று கூறுகளாலும் சிறந்து விளங்கும் மொழியே, எம் தமிழ் மொழியாகும்.

(வி) இயல், இசை, கூத்து பிற மொழிகட்கும் உண்டேனும், தனித்தனிக் கூறாக இலக்கிய இலக்கணம் கண்டு, முத்தமிழ் என்னும் பெயர் விளங்க நிற்பது தமிழேயாகலின் அச்சிறப்பு விளங்க எடுத்துரைத்தார்.

எமதென்பர் வாய்மை இசைத்த குறளைத்
தமதென்பர் சான்றோர் தகைத்து. *11*

(பொ) 'வாய்மையின் நல்ல பிற இல்லை' என்று இனிதுறக் கூறிய திருக்குறளை, எவரும் 'எம்முடையது' என்பர்; எனினும், அவருள்ளும் சான்றோரோ தம்மதே என்று பெருமையுறக் கூறுவர்.

(வி) ''யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற'' என்னும் குறளும், ''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு'' என்னும் குறளும் கருதியது இது.

தகைப்பால் அகத்தமிழ் தாமுணரார் காதல்
நகைப்பாம் இளமை நடிப்பு. *12*

(பொ) பண்பாடு அமைந்த தமிழ் அகப்பொருள் நூல்களைக் கற்று உணராதவரின் காதல் நடை, நகைப்புக்கு உரியதாகும்; அன்றியும், அஃது இளமைப் பருவத்தின் கோளாறும் ஆகும்.

(வி) தகை-தகுதி; பண்பாடு; பருவ இயல், பதினகவை (Teen age)க் கோளாறு என்பதாம். அகவிலக்கண இலக்கியம் கற்றாரின் காதல் மெய்க்காதல் என்பதாம்.

நடிப்புக்கோர் தெய்வ நடவரசன் ஞாலத்
துடிப்புக்கோர் கூத்தன் துடி. 13

(பொ) கூத்துக்கலைக்கு ஒப்பிலா ஒரு சான்று இறைவன் நடவரசனின் ஆடல் தோற்றமாகும்; அக்கூத்தரசனின் கையிலுள்ள துடி என்னும் பறை உலகத் தோற்றத்தின் குறியாகும்.

(வி) கூத்தரசனின் ஓயா நடம் உலக இயக்கக் குறியாதலையும், துடி அதன் தோற்றமாதலையும் குறித்து இது. "தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில் சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய், ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்னும் வெண்பா ஐந்தொழில் விளக்கம்.

துடியிடைப் பெண்குரல் தொல்லிசை கேட்டுக்
கடியிடைத் தூங்கும் களிறு. 14

(பொ) உடுக்கின் நடுவிடம் போலும் இடுப்பையுடைய கொடிச்சியின் குறிஞ்சிப் பண்ணிசையைக் கேட்டு, காடழித்து உண்ணலை மறந்து அங்கே கண்ணுறங்கும் களிற்றுயானை (அத்தகு நயத்தது தமிழிசை).

(வி) "கொடிச்சி, பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக், குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது, படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென, மறம்புகல் மழகளிறு உறங்கும்" என்பது அகநானூறு, (102).

களிறு பிடியொடு கையுறிஞ்சிக் காதல்
பிளிறும் மலையகத்துப் பீடு. 15

(பொ) மலைநாட்டுப் பெருமித வாழ்வு, ஆண்யானை பெண் யானையின் கையை வருடிக் காதல் மிகுதலால் பிளிறி ஒலிக்கின்ற பெற்றியினது. (இது குறிஞ்சிக் காதல் சிறப்பும் காவல் சிறப்பும் கூறியது.)

(வி) "கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி, வலிக்கு வரம்பாகிய கணவன் ஓம்பலின், ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு, நெடுவரை இயம்பும் இடியுமிழ் தழங்கு குரல்" என்பது மலைபடுகடாம் (307-310).

பீடு நடவாய் தமிழா பெருஞ்சங்க
ஏடு நமதுடைமை என்று. 16

(பொ) தமிழனே, அரசே தலைப்பட்டு நடத்திய பெருமைக்குரிய சங்கத் தமிழ்நூல்கள், நாம் பெறுதற்கு அரிய தொல்பழமையான உடைமைகளாம் என்னும் உரிமை

உணர்வால், அதற்குத்தக்க பெருமித நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவாயாக!

(வி) உடைமைக்கு உரிமையாளன் ஆவது அவ்வுடைமையைப் போற்றி ஒழுகும் வகையிலேயே உள்ளது என்பது குறித்து உரைத்தது.

என்றுமுள தென்றமிழ் என்றான் இசைக்கம்பன்
இன்றுமுள நூல்செய்தான் ஏன். *17*

(பொ) 'கல்வியில் பெரியவன் கம்பன்' என்னும் புகழ்வாய்ந்த அக்கம்பன், தமிழை என்றும் உள்ளதாம் இனிய தமிழ் என்று கூறினான்; அவன் இன்றும் கொண்டாடக் கூடிய இராமகாதையைச் செய்தான்; ஏன் செய்தான் எனின், என்றும் உளதாம் வழி இனிய தமிழ் வாழ்வாதலே எனக் கண்டான் ஆகலின்.

(வி) ''என்றுமுள தென்றமிழ் இயம்பியிசை கொண்டான்'' எனக் கம்பன், அகத்தியனைக் குறிப்பிடுதல்; இராமாயண -ஆரணிய காண்டத்து அகத்தியப் படலத்து 164ஆம் பாடல்.

ஏனோ தமிழினம் ஏமாந்தும் பேமாந்தும்
தானோ எனக்கிடக்குஞ் சாய்வு. *18*

(பொ) மேம்பட்ட தமிழினம் இந்நாளில் பிறரிடத்து ஏமாறியும் அச்சமுற்றும் ஏனோ தானோ என்று சாய்ந்து கிடக்கும் வீழ்ச்சி நிலை எதனாலோ? உணர்ந்து வாழ்ச்சி பெற வேண்டுமே யன்றோ?

(வி) ஏனோ தானோ என்பது ஓர் இணைச்சொல். என்னுடையதோ தன்னுடையதோ என்று கருதாமல் அக்கறையோ பொறுப்போ அற்றுக் கிடக்கும் நிலை.

சாயும் நிலைவேண்டா; சாய்க்க வருவாரைப்
பாயும் நிலைவேண்டும் பார்த்து. *19*

(பொ) அக்கறையற்றுக் குடைசாயும் நிலை தமிழனுக்கு ஆகாது; அவ்வாறு சாய்க்க வருவாரை இனங்கண்டு, மோதி வெல்லும் நிலையும் வேண்டும்.

(வி) பாயும் நிலை என்பது, ''பாதகம் செய்பவரைக் கண்டால்-நாம், பயங்கொள்ள லாகாது பாப்பா; மோதி மிதித்து விடு பாப்பா - அவர், முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா'' என்னும் பாரதியாரின் பாப்பாப் பாட்டுப் போல்வது.

பார்க்காதே சாதிமதம் பார்வைக் குறிதப்பித்
தூர்க்காதே அன்புத் துளை. *20*

(பொ) தமிழனே, ஒப்புரிமைப் பிறப்பினனாகிய நீ, சாதியையும்

மதத்தையும் எண்ணாதே; பார்க்க வுரிய குறிக்கோட் பார்வை தவறி அன்பு என்னும் ஊற்றுக்கண்ணை மூடி அடைத்து விடாதே.

(வி) ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்னும் குறளும் (972), ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் திருமந்திரமும் (2104) பிறந்த மண்பேறாகக் கொண்டவன், பிளந்து பார்க்கலாமா? என்கிறார்.

துளைதுளையா ஏடுகளைத் தொட்டு வணங்கி
உளையுளையா விட்டகதை யொன்று. **21**

(பொ) துளையிடும் பூச்சிகளும் துளையாமல் காக்கப்பட்ட ஏடுகளையும் தேர்பூட்டி வணங்கி வைத்துச் சேறும் நீருமாக வரும் பதினெட்டாம் பெருக்கென்னும் வெள்ளத்தில் விட்ட மூடத்தனம் ஏடழிக்கப்பட்ட வகையுள் ஒன்றாகும்.

(வி) துளை துளையா - துளைக்கும் பூச்சிகளும் துளையாத; உளை உளையா - (உளை-சேறு) சேறும் நீருமாய்ச் செங்கல் மங்கலாக வரும் வெள்ளப் பெருக்கின் உள்ளே (உளையா - உள்ளேயாக). உ.வே.சா. 'என்சரிதம்' காண்க.

ஒன்றாக ஏடுகளை ஊர்கறையான் உண்கவென
நன்றாக விட்டகதை நாடு. **22**

(பொ) கட்டுக்கட்டாக இருந்த ஏடுகளை, ஒருமொத்தமாக ஊர்ந்து துளைத்து அழிக்கின்ற கறையான் நன்றாக உண்பதாக என அறிவு ஏழைமை வளமை ஏழைமைகளால் அழியவிட்ட நிகழ்ச்சிகளையும் ஆராய்க. ஏனெனில் எஞ்சியுள்ளவையேனும் காக்கப்பட வேண்டுமே.

(வி) ஊர் கறையான் - ஒழிவின்றி ஊர்தலையுடைய கறையான்; அதனால் 'செல்' என்பது அதன் பெயராயிற்று. மாமன்னர் மாளிகைக் கறையான் உண்டழித்து எஞ்சக் கண்டதுதானே தேவாரம்.

நாடாதும் நாணாதும் நாத்தீப் பருகவெனச்
சூடாக விட்டகதை சொல். **23**

(பொ) ஆராயும் அறிவு இல்லாமலும், 'ஆக்கப் பயனை அழிக்கும் அழிசெயல் செய்கிறோமே' என்னும் நாணம் இல்லாமலும், ஆகுதி செய்கிறோம் என்னும் பெயரால் தீயின் நாக்குத் தின்றழிக்குமாறு - நாம் நொந்து வெதும்புமாறு - நம் முன்னோர் செய்த கேட்டை இளந் தலைமுறையினர்க்குச் சொல்லி வை; என்னெனில் அவரேனும் அத்தீச் செயலை நாடுதல் ஆகாதே.

(வி) நாடுதல் - ஆராய்தல். நாத்தீ, தீநா என்பது முன்பின் மோனை கருதி நின்றது.

சொல்லத் தொலையுமோ சூடுண்ட மாடுபோல்
புல்லத் தொலையுமோ புண். 24

(பொ) நற்றமிழ் ஏடுகள் அழிந்துபட்ட கொடுமையைச் சொல்லத்தான் முடிவதாகுமோ? அதனால் ஏற்பட்டுள்ள புண்பாடு வெண்ணிற மாட்டுக்கு இடப்பட்ட சூட்டுத் தழும்பே போல் தோன்றுமே அல்லாமல் மறைந்து விடுவதாகுமோ? இயலாவாம்.

(வி) புண்-துயர். புல்லல்-பொருந்தல். ''கருநரைமேற் சூடேபோல் தோன்றும்'' என்பது நாலடி (186). கருநரை என்பது பெரிய வெண்ணிற மாடு.

புண்பெருக்க மன்றிப் பொதுவுடைமை காக்கின்ற
எண்பெருக்க முண்டோ இழவு. 25

(பொ) பொதுப் பொருள், பொதுநலம் என்பவற்றை எல்லாம் இழந்து வருகின்ற இந்த நாட்டுக்கு, துன்பத் துடிப்புகள் பெருகுவதையன்றி இன்பப் பொது நலத்தைக் காக்கின்ற எண்ணப் பெருக்கம் தானும் உண்டோ? இல்லையே! வரவேண்டும் அன்றோ!

(வி) 'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்' (214)என்னும் ஒப்புரவு கண்ட வள்ளுவ நாட்டில் பொதுநலப் பாலிப்பு இல்லையே என இரங்கி வினவியது இது.

இழந்தோம்; இழிந்தோம்; இழிக்கவும் பட்டோம்;
உழந்தோம்; இருக்கா உணர்வு. 26

(பொ) பொதுநலம் போற்றாமையால் உரிமைகளை இழந்தோம்; நிலையில் தாழ்ந்தோம்; தாழ்த்தவும் பட்டோம்; வேண்டாத் துன்பங்களும் அடைந்தோம்; இவ்வளவு ஆன பின்னரும், நல்லுணர்வு நமக்கு உண்டு என்று கூற முடியுமா?

(வி) இழிதல் - நின்ற நிலையில் தாழ்தல்; எ-டு: 'தலையின் இழிந்த'. இருக்கிறதா என்பது 'இருக்கா' என வழக்கு வழிப்பட்டு நின்றது.

உணர்ச்சிக்கும் பஞ்சமிலை; ஓம்பறைபோற் கத்தும்
புணர்ச்சிக்கும் பஞ்சமிலை; பொய். 27

(பொ) உணர்ச்சியை வெளிப்படுத்துவதிலும் குறைச்சல் இல்லை; ஆம் ஆம் என்று பறை முழக்குவதுபோல் கூடிக் கும்மாளம் போடுவதிலும் குறைச்சல் இல்லை; இவை பொய்ந் நடிப்பாம்.

(வி) ஓம்பறை - ஒத்துக் கொள்வதாக முழக்கும் முழக்கம்; கைதட்டல்; ''ஆமோ ஆம்'' என்று ஒத்துப்பாடும் பின்பாட்டுப் போல்வது. பொய் - உள்ளீடு இல்லாதது. ''வாய்ச்சொல் வீரர்'' என்றபடி.

பொய்யோ அடிநல்லார் போற்றிய நூலெல்லாம்
அய்யோ எவணோ அவை. **28**

(பொ) சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தம் உரையில் குறிப்பிடும் முத்தமிழ் நூல்களெல்லாம் புனைந்துரைப்பனவோ? மெய்யே யல்லவோ? அந்நூல்கள் எல்லாம் ஐயகோ எங்கே ஒழிந்து போயினவோ?

(வி) போற்றிய - மேற்கோளாக எடுத்துக்காட்டிய; எவணோ- எவ்விடத்தனவோ; இல்லாமல் ஒழிந்தனவே என்னும் இரங்கல் குறிப்பு; இங்கில்லையே என்னும் ஏக்கத்தின் வழியது.

அவைமூன்று கண்ட அருந்தமிழ்கள் எல்லாம்
பகைமூன்றாற் போயின பட்டு. **29**

(பொ) தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் முச்சங்கங்களும் கண்ட அரிய தமிழ் நூல்களில் பெரும்பாலானவையும் வெள்ளம், கறையான், தீ என்னும் முப்பகைக்கும் ஆட்பட்டு அழிந்து போயினவே! இரங்கத்தக்கது ஆகும்.

(வி) அவை-சங்கம்; கழகம்; தமிழ்கள் - தமிழ் நூல்கள்; பகை மூன்று 21,22,23 ஆம் குறள்களில் கூறப்பட்டவை.

பட்டப் பகலில் பதியீழ நூலகம்
சுட்ட பகையைத் தொழு. **30**

(பொ) இரவிலே கரவாக அயலார் புகுந்து அழித்தனர் என்பது இல்லாமல், தந்நாட்டுச் சிங்களரே பட்டப்பகல் பொழுதில் பகை நாட்டார் போல் புகுந்து ஈழநாட்டுத் தமிழ் யாழ்ப்பாணப் பெருநகர் நூலகத்தைச் சுட்டெரித்தனர்! அப்பகையைத் தொழுது கிடத்தலும் வேண்டும் போலும்!

(வி) தொழு என்னும் ஏவல், தொழுது கிடக்க வேண்டுவதுதானோ என்னும் குறிப்பினது; விளங்கறிவு நூல்களை வெறியால் அழித்தமைக்கு நொந்தது.

தொழுவாய் விழுவாய் சொரணை இழப்பாய்
எழுவாய் இரைவிரும்பி ஏன். **31**

(பொ) தமிழனே, நீ வயிற்றுப்பாட்டையே விரும்பிக் கூழைக் கும்பிடு போடுவாய்; விழுந்து பணிந்து கிடப்பாய்; மானம் மதிப்புகளை இழப்பாய்; வேண்டா இடத்து வெகுண்டு எழுவாய்; இவையெல்லாம் எதற்காகவோ உனக்கு?

(வி) இரைவிரும்பி என்றது 'கழிபேரிரையான்' என்னும் வள்ளுவத்தை நினைவூட்டுவது. ஒருப்படாச் செய்கையைக் குறித்துப் பல்வினை பயில உரைத்தார். 'இரை விரும்பி' பெயருமாம்.

ஏனென்று துள்ளாரே எங்கே தமிழிறலின்
தேனென்று கொட்டாரே சேர்ந்து. 32

(பொ) நாடு, மொழி, இன அறக்கேடுகள் நிகழுங்கால் துணிவுடன் 'ஏன்' என்று நிமிர்ந்து கேட்க மாட்டார்; 'எங்கே தமிழ்த்தேன் கூட்டின் தேன்' என்று ஒன்று சேர்ந்து துய்த்து மெச்சுக் கொட்ட மாட்டார்! என்னே இவர்தம் நிலை?

(வி) துள்ளல் - நிமிர்ந்து நின்று கேட்டல்; துடிப்புடன் கேட்டல். இறல் - இறால் = தேன்கூடு; தேன் சப்புக் கொட்டுதல்; இது, மெச்சுக் கொட்டுதல்.

சேர்ந்து சுவடிகளைச் செல்லரிக்க விட்டமடம்
பேர்த்துந் தொலையலையே பித்து. 33

(பொ) இனிய தமிழ்ச் சுவடிகள் எல்லாம் ஒருசேரச் செல்லரிக்கவிட்ட மடமை (அறிவில்லாமை)யின் விளைவை அறிந்த பின்னரும், அம்மடப் பற்றுமை மீண்டும் அப்படியே அழியாமல் உள்ளதே! எவ்வளவு இரங்கத்தக்க நிலை!

(வி) செல்-கறையான். மடம் - மடத்தன்மை; மடம் என்னும் இடம் குறித்ததன்று; அவை சுவடிகள் காத்ததுண்டு. 'மடப்பித்து பேர்த்தும் தொலையலையே' என இணைக்க. தொலையலையே வழக்குச் சொல்.

பித்துத் தமிழர் பெருக்கெடுக்கும் இஞ்ஞான்று
சொத்துத் தமிழ்க்கார் துணை. 34

(பொ) சாதி, சமய, கட்சி வெறித் தமிழர் பெருகிவரும் இந்நாளில், வழிவழிப் பழம்பெருஞ் சொத்தாக உள்ள தமிழுக்கு எவரே துணையாக உள்ளார்?

(வி) சாதி மதச் சழக்குகளை 323 முதல் 328 முடியவுள்ள குறள்களில் காண்க. தமிழ் சொத்து என்பதை, ''பத்துப் பாட்டும் பாட்டல்ல, பண்டைப் பாட்டர் பேரர்க்கு, வைத்த சொத்தாய் எண்ணுவாய்'' என்பதால் அறிக. தமிழ்க்குத் துணை யார் என்பதை யுரைப்பவை மேல்வரும் குறள்கள் 35-39.

துணையாகிக் காத்தான் துயர்சாமி நாதன்
புணையாகி நின்றானைப் போற்று. 35

(பொ) ஏடு தொகுத்தல், ஆய்தல், பதிப்பித்தல் ஆகியவற்றில் விரும்பித் துயரைத் தன்மேல் அள்ளிப் போட்டுக் கொண்டு பாடுபட்ட உ.வே. சாமிநாதன் அரும்பெரும் துணையாய் அமைந்து தமிழ் காத்தான்; கால வெள்ளத்தில் ஆழாமல் மிதவையாய் அமைந்து கரைசேர்த்து நிலைபெற்ற அவனை நினைந்து போற்றுவாயாக.

(வி) 'துயர்' என்பதும், 'புணை' என்பதும் விரிக்க விரியும் சுருக்கச் சொற்கள். அவர்தம் துயரும் காத்தலும், 'என்சரிதம்' காண்க.

போற்றற் குரித்து புகழ்நா வலர்பெருமான்
தேற்றப் பதிப்பின் திறம். 36

(பொ) தமிழுக்கும் சிவனியத்திற்கு மென ஈழம் தந்த புகழ்மிக்க ஆறுமுக நாவலர் என்னும் பெருமகனாரின் பிழையென்பது இல்லாத தெளிந்த பதிப்புத் திறம் போற்றத்தக்கதாகும்.

(வி) பழந்தமிழ்ப் பதிப்பின் முதல்வர் இந்நாவலர் பெருமான். ''ஒரோ ஒரு பிழைதானும் காணவியலாத பதிப்பு அவர் பதிப்பே'' என்பது தமிழுலகு தந்த சான்று.

திறமிக்க தாமோதர் செம்மைப் பதிப்பும்
அறமிக்க தொண்டென் றறி. 37

(பொ) பொருணிலைக் கணக்கராகவும் முறைமன்ற நடுவராகவும் திறமிக்கோங்கிய ஈழத்துச் சி.வை. தாமோதரனார் செய்த செவ்விய தமிழ்ப் பதிப்புகளும், 'மனத்துக்கண் மாசில்லா' அறத்தொண்டு என்று அறிந்து போற்றுவாயாக.

(வி) பழந்தமிழ்ப் பதிப்பு முறையில் இம்மூவரையும் ''பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால் கொண்டவர் ஆறுமுக நாவலர்; சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர்'' என்பார் திரு.வி.க. (வாழ்க்கைக் குறிப்பு. பக்.160)

அறியார் உளரோ அகநாற் றிணையை
நெறியாய் உரைத்தான் நிலை. 38

(பொ) அகப்பொருட் களஞ்சியமாம் நற்றிணைக்குத் தமிழ்நெறி மாறாமல் உரைகண்டு பதிப்பித்த நற்பெருஞ்சான்றோன் பின்னத்தூர் நாராயணசாமியின் பெருந்தக்க நிலையை அறியார் தமிழறிஞர் உலகில் உளரோ? இல்லை.

(வி) அகமும் நற்றிணையும் எனக் கொள்ளல் ஆகாது; ஆகின், திணையும் எண்ணும் மயங்கிப்போம். அகநானூற்றை வெளியிட்டோர் அறிஞர் இரா. இராகவரும், கம்பர் விலாசம் வே. இராசகோபாலரும் ஆவர்.

நிலைநூல்கள் காத்தான் நெடும்பவா னந்தன்
சிலைநடற் குற்ற சிறப்பு. 39

(பொ) நிலைபெறத் தக்க அரிய தமிழ் நூல்கள் சிலவற்றைச் சிறப்பாகப் பதிப்பித்துக் காத்த தமிழ்க் காவலன் புகழ்மிக்க சரவண பவானந்தன் என்பான்; அவன் தமிழரால் சிலை நட்டுப் போற்றுதற்குரிய சிறப்பினன் ஆவன்.

(வி) சரவண பவானந்தர் சென்னை மாநகர் காவல்துறை ஆணையராக விளங்கியவர். யாப்பருங்கல விருத்தியை முதற்கண் வெளியிட்டவர். அரிய பெரிய நூலகம் அமைத்தவர்.

சிறப்பழிக்க வந்தீரோ மாக்காள் தமிழின்
பிறப்பழிக்க லாமோ பிறந்து. **40**

(பொ) ஆறறிவுடைய மக்களாகத் தமிழ்ப் பிறப்புப் பிறந்தும் மாக்களாக இருப்பவர்களே, நீங்கள் தமிழின் சிறப்பினை அழிக்கத்தான் பிறந்தீரோ? அன்றித் தமிழ்ப் பிறப்புப் பிறந்ததாம் பேற்றைத்தான் நீங்கள் பிறந்து அழிக்கலாமோ?
(வி) தமிழ்ப் பிறப்பு என்பதற்குத் தகவான அடையாளம் வேண்டும் என்று வலியுறுத்தியது இது. மாக்கள்-ஐயறிவுடைய விலங்கு பறவையாம் உயிரிகள். ''மாவும் மாக்களும் ஐயறி வினவே'' - தொல். மரபு.32.

பிறந்தார் உலகப் பெருந்தமிழ்த் தாயை
மறந்தார் கெடுக மறைந்து. **41**

(பொ) உலகின் முதற்பெரியளாம் தமிழ்த் தாய்க்கு மகவாகப் பிறந்தும் அத்தாயை மறந்தார் வாழ்வென்ன வாழ்வு? அவர் தம் பிறவிப்பேறு மறைந்து கெடுவாராக.
(வி) தாய்க்குப் பிறந்தார், அத்தாயை மறந்தார் எனின் பிறந்த பேற்றுக்கு உரியவர் ஆகாரே என்பது குறிப்பு.

மறைக்க முடியுமோ கன்னி மறத்தைக்
குறைக்க முடியுமோ கூறு. **42**

(பொ) கன்னி நங்கை ஒருத்திக்கு ஒரு கயமையோன் செய்துவிட்ட பாவச் செயலை மறைத்துவிட முடியுமோ? அன்றி அளவால் குறைத்து விடவேனும் முடியுமோ கூறுவாயாக.
(வி) கன்னியாம் தமிழுக்கும் இக்கயமையோர் செய்துவரும் கேடுகள் மறைக்கவோ குறைக்கவோ முடியாதனவாம் என்னும் பிறிது மொழிதல் அணி நடைப்பட்டது இது.

கூறுடைக் கோட்டுக் குமரித்தொல் கண்டத்தும்
பேறுடைச் செந்தமிழே பேச்சு. **43**

(பொ) ஏழேழு நாடுகள் எனவும் பன்மலை நாடு, பஃறுளியாறு, குமரிக்கோடு எனவும் அகன்று விரிந்த குமரிக்கண்டம் என்னும் பெயரிய தொல்பழ நிலப்பரப்பிலும், பல்வளங்களும் பெற்றோங்கிய செவ்விய தமிழே வழங்குமொழியாக இருந்தது.

(வி) பேச்சு - வாய்ப்பேச்சும், எழுத்துப் பேச்சுமாம். கூறு - பகுப்பு; கோடு - மலை; கரை. 49 நாடுகளும் பிறவும் சிலம்பில் காண்க (11:19-20).

பேச்சு மொழியுள் பெருந்தமிழே இற்றைக்கும்
மூச்சோடு வாழும் மொழி. 44

(பொ) தொல் பழமொழிகளுள் பேச்சு மொழியாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஒரு மொழி பெருமைக்குரிய தமிழேயாம். அது பேச்சோடு மட்டும் நிற்கும் மொழியோ? இல்லை; மூச்சோடு மூச்சாக வாழ்ந்து கொண்டிருக்கும் மொழியும் ஆகும்.

(வி) அதனை மூச்சாகக் கொள்ளார்தம் மூச்சு, மூச்சன்று என்று கழிவிரக்கம் கொண்டது இது.

மொழியயல் கற்க முயலுமுன் உன்தாய்
மொழிதமிழ் கற்பாய் முதல். 45

(பொ) அயல்மொழி எதனையும் கற்கும் முயற்சியை மேற்கொள்ளுதற்கு முன்னாக, உலக முதல் மொழியும் உன் தாய்மொழியு மாகிய தமிழைக் கற்பாயாக.

(வி) 'முன்' என்றும் 'முதல்' என்றும் வருதலால் 'முதல்' என்பது உலக முதலாயது. மொழியயல் - அயல்மொழி. முதலாகத் தாய்மொழி கற்று அயல்மொழி கற்பது வைப்பு முதல்போல் பயன்படும் என்னும் குறிப்புடையதுமாம்.

முதலாகக் கற்பின் முழுக்கூர்மை. பெற்று
முதலாவாய் கல்வி முறை. 46

(பொ) தாய்மொழியை முதலாகவும் முதன்மையாகவும் கொண்டு கற்றால் முழுமையான சிறந்த தேர்ச்சி பெற்று, கற்கும் இயற்கையான ஒழுங்கு முறையால் கல்வித் துறைகளில் நீ முதன்மையாளனாய் விளங்குவாய்.

(வி) உன் தாய்மொழி தமிழ் என்னும் முற்குறளின் தொடர் கூட்டியுரைக்கப்பட்டது. உள்ளது சிறக்கும் கல்விமுறை ஈதென உரைத்தது.

முறைதமிழ் போற்றி முழுமடங் கொன்று
மறைகுறள் கற்க மதி. 47

(பொ) பாட்டு, தொகை, கணக்கு, காப்பியம் என முறை செய்யப்பட்ட தமிழ்நூல் மரபுகளைக் கற்றறிந்து, வழிவழியாக ஏறியுள்ள கண்மூடி வழக்கம், அறியாமை ஆகியவற்றை அகற்றி, அப்பழந்தமிழ் நூல் மரபில் மறைந்து கிடக்கும் திருக்குறள் நெறிகளைக் கற்றுக் கொள்வதை ஏற்றுப் போற்றுவாயாக.

(வி) திருமுறை என்பது போன்ற ஆட்சி முறைதமிழ்; மறைகுறள் என்பது மறைந்து கிடக்கும் குறள் மரபு.

மதியிலி தன்மொழியில் வள்ளுவம் கற்கும்
விதியிலி மற்றோர் விலங்கு. ***48***

(பொ) வள்ளுவம் பிறந்ததும் தன் தாய்மொழியுமாகிய தமிழ்வழியே வள்ளுவத்தைக் கற்கும் மதியில்லாத பிறப்பு, நற்பேறற்ற பிறப்பேயாகும்; அப்பிறப்பு, இயல்பான விலங்குப் பிறப்பொடு சேரத்தக்க மற்றொரு விலங்குப் பிறப்பேயாகும்.

(வி) அயன்மொழியாளரும் அவாவிக் கற்கும் வள்ளுவத்தைத் தான் பிறந்த மொழியில் பிறந்திருந்தும் கல்லானை வெறுத்துப் பழித்தது இது.

விலங்கும் பிறகுரல் விள்ளா; இனத்தின்
இலங்கு குரலே எழும். ***49***

(பொ) தமிழ்ப் பிறப்பியாக இருந்தும் தமிழ்க்குறள் கல்லாப் பிறப்பை விலங்கு என்பதும் பிழையாம்; என்னெனின், விலங்குப் பிறப்பும் தன்னினத்துக்குரிய குரலை எழுப்புமே யன்றிப் பிறவினத்துக் குரிய குரலை எழுப்பாவே; ஆதலால் விலங்கெனல் கூடாதாம்.

(வி) விள்ளுதல் - வெளிப்படுத்தல். அதன் இனத்துக் குரல் ஆகலின் அக்குரல் இலங்கு குரல் எனப்பட்டதாம். அக்குரல் இயல்பாக எழுவதாகலின் எழுப்பும் என்னாது எழும் என்றார்.

எழுகென்றான் பாரதி என்செய்தோம் புல்லீர்
தொழுகின்றோம் அவ்வுருவைச் சூழ்ந்து. **50**

(பொ) புன்மையீர், நம்மை நோக்கிப் பாரதி எழுக! பறக்க! மேலே மேலே! என்று சொன்னான். ஆனால் நாம் என்ன செய்தோம்? அதனைக் கைவிட்டு அவன் சிலையையும் உருவப்படத்தையும் சூழ்ந்து நின்று கும்பிட்ட அளவில் கடமையை முடித்துக் கொண்டோம். இதனால் பயன் என்ன?

(வி) எழுக என்றது பாரதி கூறிய எழுச்சிமிக்க கருத்துகளை எல்லாம் தொகுத்துரைத்த சுட்டு.

சூழ்ந்தவன் நூற்றாண்டு சுற்றிக்கொண் டாடுகின்றோம்
வீழ்ந்தவன் கண்விழியான் என்று. ***51***

(பொ) முன்னேற்ற வழிகளை ஆராய்ந்து கூறிய அப்பாரதி இயற்கை எய்தினான்; இனித் தன் கண்ணைத் திறந்து பாரான் என்னும் உறுதியால் அவன் நூற்றாண்டு விழாவை ஊர்வலமும் முழக்குமாய்க் கொண்டாடுகின்றோம்.

(வி) அவன் எழுந்து வருவான் என்றாலும் விழித்துக் கொள்வான் என்றாலும் கொண்டாட மாட்டோம் என்பது குறிப்பு. கொள்கை இல்லாக் கொண்டாட்டம் கொள்ளை மறைப்பு என்றது இது.

'என்றென் வசைதீரும் என்றிருப்பாள்' என்றான்தன்
'கொன்றனைய சொல்'லைக் குறி. 52

(பொ) "அறிவியல் நுட்பம் தமிழினுக்கில்லை என்றொரு பேதை கொல்வது போன்ற சொல்லை உரைத்தான்; எனக்குரிய அப்பழி என்று தீரும் என்று கலை வல்லாரை எதிர்பார்த்திருப்பாள் தமிழ் அன்னை" -என்ற பாரதியின் சொல்லைத் தமிழனே, நின் நெஞ்சிலே குறித்துக் கொள்வாயாக. நீ கொள்ள வேண்டிய குறியும் நெறியும் அதுவேயாம்.

(வி) தமிழ்த்தாய் என்னும் பாடலில் "இன்றொரு சொல்லினைக் கேட்டேன்... கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்பது முடியவுள்ள செய்திகளை உள்ளடக்கியது இது.

குறில்கள் நெடில்கள் குரல்வகை மெய்கள்
அறுதிசால் முப்ப தரண். 53

(பொ) குற்றெழுத்து எனவும் நெட்டெழுத்து எனவும் ஒலிவகையால் எழும் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியன மெய்யெழுத்து எனவும் வரம்பு கட்டப்பட்ட நிரம்பிய முப்பது எனப்படும் தமிழ் எழுத்து அளவே காப்பு அரண் போன்றவையாகும்.

(வி) குறில்கள் -5: நெடில்கள்-7; மெய்கள் 18; இம்முப்பதுமே தமிழ் அரண்; 'நெடுங்கணக்கில் அடங்காப் பிற எழுத்துக்களைச் சேர்த்தலும் செறித்தலும் அரண் அழிப்பு' என்று கட்டளை உரைத்தது இது. "எழுத்தெனப்படுப அகரமுதல னகர இறுவாய் முப்பஃதென்ப" என்ற மூலவன் ஆணையை எடுத்து மொழிந்ததுமாம்.

அரண்சிறந்தும் என்பயன் ஆங்கில மோகம்
முரண்வளர்ந்த மூட ரிடத்து. 54

(பொ) முன்னே கூறியவாறு தமிழில் எழுத்தரண் முதலாம் அரண்கள் சிறப்பாக அமைந்திருந்தாலும், ஆங்கிலமே எல்லாமாம் என்னும் மதிமயக்க முரண்பாடு வளர்ந்துள்ள, 'கொண்டதே கொள்கை' என்னும் மூடரிடத்து, என்ன பயனை எதிர்பார்க்க முடியும்?

(வி) ஆங்கிலமே உலகில் தோன்றா நாளில் உலகில் அறிவே இருந்திலதோ? ஆங்கில மொழி அறியா மண், அறிவியல் 'பொருளியல் சீர்களில் உயர்ந்திலதோ? என்று எண்ணின் இவ்வாறு முரண்மூடமாகார் என்றது இது.

மூடருள் மூடன் எனப்படுவான் தாய்மொழி
வாடக் களிக்கும் மகன். 55

(பொ) தன் தாய்மொழி தன் உரிமையும் தன் தகைமையும் இழந்து ஒடுங்குவதைக் கண்டு களிப்புறுவான் எத்தகு அறிவன் எனினும் வளவன் எனினும் நிலையன் எனினும் அவன் அறிவுப் பிறப்பியாம் மகனல்லன்; மூடருள் எல்லாம் தலையாய மூடன் என்று சொல்லப்படுவான் அவனேயாம்.

(வி) தாய்மொழியைக் காத்து வளர்க்கப் பிறந்த பிறப்பு, அது தளரக் கண்டு களிக்கும் பிறப்பாயின் என் சொல்வது என்று சொல்லியது இது.

மகவென்கோ மண்ணெனன்கோ மக்கென்கோ தாயை
நகலென்பான் பிண்டத் தசை. 56

(பொ) பெற்ற தாயினும் சிறந்த தாய்மொழியை இகழ்ந்து அது முதலன்று; நகல் (வழியது) என்பான் கொழுப்பேறியாவன். அவன் பிறப்பை மாந்த உருவு கொண்டு மகவு என்று கூறுவேனோ? மண்ணால் செய்யப்பட்ட உருவு என்று கூறுவேனோ? மண்ணோடு மண்ணாக மட்கிப் போனது என்று கூறுவேனோ? யாது கூறுவேன்?

(வி) தசை - தசையுடையான்; தமிழ்நலம் கருதான் பிறப்பை ஐயுற்றுரைத்தது இது. ஐயவணி.

தசைபெருத் தென்பயன் தாய்தமிழ் உண்ணா
வசைபெருத்துச் சாயும் வயிறு. 57

(பொ) தாய் தந்த தமிழமுதை உண்ணாமல் பழியால் பெருத்துச் சரியும் வயிற்றாளன், தன் தசையால் பெருத்துத் திரிதலால் தமிழ் மண்ணுக்கோ தமிழ் மொழிக்கோ தமிழ் இனத்திற்கோ என்ன பயன்?

(வி) வயிற்றைத் தமிழ் மண்ணுக்கு வைப்பாக்கி, நெஞ்சை அயல் மண்ணுக்கு வைத்த அப்பிறப்பால் என்ன பயன் என்றது இது.

வயிறு கழுவுவான் வாழ்வார்க்குத் தூக்குக்
கயிறே நலஞ்சால் கலன். 58

(பொ) உண்பதும் கழிப்பதுமே வாழ்வாகிய 'அவியுணவின் ஆன்றோர்க்குப்' பொன்னும் மணியுமாம் அணிகலம் எதற்காகவோ? தூக்குக் கயிறே பழியிலா நலமிகுந்த அணிகலன் ஆகும்.

(வி) செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு ஈய ஏவுவது வள்ளுவம் (412). இப்பிறவியரோ, வயிறே வாழ்வாகியவர். ஆகலின், இவர் வாழ்தலினும் சாதல் நலஞ்செய்யும் என்றதாம். அவியுணவின் ஆன்றோர் - தேடித்தேடி வயிறோம்புவார்.

கலனும் புலனும் கலையும் நிலையும்
வலனும் தமிழால் வரும். 59

(பொ) அணிகலன் வேண்டுமா? புலமை நலம் வேண்டுமா? கலைவளம் வேண்டுமா? நிலைபேறு வேண்டுமா? வெற்றிமை வேண்டுமா? இவ்வெல்லாமும் பிற நல்ல எல்லாமும் தமிழால் வருதல் உறுதியாம்.

(வி) மூதறிஞர் செம்மல் வ.சுப.மா. தம் வாழ்வியல் பேற்றின் பிழிவாக உரைத்த பெற்றியது இது. இதன் விரிபொருள் வ,சுப.மா. வாழ்வே.

வருவாய்க் குரிய வளர்தமி ழாக
விரிவாய்ப் புதுக்க விரும்பு. 60

(பொ) பல்வகை நலங்களும் அமைந்த தமிழை விரிந்த அளவால் வருவாய் பெருகுதற்கும் ஈட்டுதற்கும் உரிய வகையில் அறிவியல் பொறியியல் கலையியல் ஆட்சியியல் முதலியவை வளர்ந்த தமிழாகவும் செய்வதற்குப் புத்தம் புது முயற்சிகளை விரும்பி மேற்கொள்வாயாக.

(வி) 'வருவாய்க்கு உதவாத மொழி வரவேற்புப் பெறாது' என்பது கொண்டு, அந்நிலை தமிழ்க்கு வாராமல் இருக்க, அரசையும் அறிஞரையும் கருதி உரைத்தது இது.

விரும்பு துறையெலாம் வெண்தமிழிற் கற்க
அரும்பு தொகுதிகளை ஆக்கு. 61

(பொ) ஒவ்வொருவரும் விரும்புகின்ற கலைத்துறை தொழில் துறைகளுக் கெல்லாமும் வெளிப்படையான இயற்றமிழில் கற்பதற்காகப் புத்தம் புதிதாகத் தோன்றும் நூல் வரிசைகளை ஆக்குவாயாக.

(வி) நூல் செயவல்லார்க்கும், பதிப்பக வாணர்க்கும் உரைத்தது இது. வெண்தமிழ் - வெளிப்படையாய்ப் பொருள் விளங்கும் எளிய தமிழ். கருந்தமிழ் என்பது கடுந்தமிழெனக் குறியீடு பெறுதல் இதனை விளக்கும்.

ஆக்க அறிவனைத்தும் அன்னை வழிபயிலக்
காக்கும் நிறுவனங்கள் காண். 62

(பொ) நூலாக்கினால் மட்டும் போதுமோ? நூலாக்கம் பெறும் அறிவுத் துறைகள் அனைத்தும் தாய்மொழி வழியே கற்கத் தக்க மொழிக்காவல் நிலையங்களாம் கல்வி நிறுவனங்களையும் தோற்றுவிப்பாயாக.

(வி) அன்னைவழி - அன்னை மொழி வழி; தாய்மொழி வழி கற்பிக்கும் நிறுவனங்களே காக்கும் நிறுவனங்கள்; மற்றவை போக்கும் நிறுவனங்கள் என்றது இது.

காண முடியும் கலைமுழுதும் செந்தமிழிற்
பேண முடியும் பெரிது. 63

(பொ) கலைகளை எல்லாம் செந்தமிழில் காணமுடியுமோ என எவரும் ஐயுற வேண்டா; நன்றாகக் காணவும் முடியும்; அம்மட்டோ மிகச் சிறப்பாகவும் விரிவாகவும் பேணிக் காக்கவும் முடியும்.

(வி) தமிழில் கலை நூல்கள் காணவும் பேணவும் முடியுமோ என ஐயுறுவார் ஐயம் அகற்றிய ஆணை மொழி இது.

பெரிய தமிழெனினும் பேணத் தவறின்
கரிய இனமாவோம் காய்ந்து. 64

(பொ) பெருமைக்குரியதாகவும் விரிவுடையதாகவும் அமைந்தது தமிழ்மொழி என்றாலும், அதனைப் பேணி வளர்க்கத் தவறினால் அம் மொழிக்குரிய நாம் வெப்பாலும் வெதுப்பாலும் காய்ந்து கரிந்துபோன காட்டுமரக் கூட்டம் அன்னவரே ஆவோம்.

(வி) காய்ந்து கரிய இனம் என்றது வழக்கழிந்து போகும் இனம் என்னும் குறிப்பினது.

காய்ந்த மொழியெலாம் கல்வி மொழியாக
ஒய்ந்துநீ நிற்றல் ஒழி. 65

(பொ) மொழி நலமும் சொல் வளமும் இல்லாத மொழிகளெல்லாமும் கூட எல்லா நிலைகளிலும் கல்வி மொழியாகிக் கொண்டு வருதலைக் கண்டும், நீ அம்முயற்சியில் தலைப்படாது ஒதுங்கியும் தளர்ந்தும் நிற்கும் நிலையை ஒழிப்பாயாக.

(வி) இது தமிழ்ப் பிறப்பிகள் அனைவருக்கும் உரைத்தது; இந்திய மண்ணிலேயே எத்துணைப் புதிய வளங்குறைந்த மொழிகள் எல்லாம் பயிற்று மொழியாக உள என்பதை எண்ணத் தூண்டித் துணிக என்றதாம்.

ஒழிகெனக் கத்துதற்கோ இந்தி யொழியும்;
ஒழியும் தமிழை உயர்த்து. 66

(பொ) ஒழிக என்று நாம் ஓங்கி ஓங்கிக் கத்துவதற்காகவோ இந்திமொழி உள்ளது. ஒழிக என்பதனால் ஒழியாமல் ஓங்குதலைக் கண்டாவது, ஒழிந்துவரும் உன் தாய்த் தமிழை உயர்த்துவதற்குரிய வழிவகைகளை உடனே பார்ப்பாயாக.

(வி) வேண்டுவது தமிழ்க்காவலும் வளர்ப்புமே யன்றி, இந்தி ஒழிப்பு அன்று என்பது இது.

உயர்த்துவோம் நந்தமிழை ஊர்ப்பள்ளி தோறும்
தூரத்துவோம் அல்மொழியைத் தூர்த்து. 67

(பொ) நாம் உடனடியாக நம் நம் ஊர்ப் பள்ளிகளிலெல்லாம் நம் தமிழ் மொழியே ஆட்சி கொள்ளுமாறு செய்து வளர்ப்போமாக; அதே பொழுதில் அவ்விடங்களில் இதுகால் ஆட்சி நடத்திவரும் நம்மது அல்லாத அயல்மொழியை அகற்றி அப்பாற்படுத்துவோமாக.

(வி) அல்மொழி - நமது அல்லாத மொழி; அயல்மொழி. தூர்த்தல் - மூடுதல்; இவண் இல்லாது செய்தல்.

தூர்ந்த மொழிகள் துளிர்க்கு நிலைகண்டும்
சோர்ந்துநீ நிற்றல் தொலை. 68

(பொ) வழக்கொழிந்த மொழிகள் எல்லாம் வழக்குற்று வரிசைபெற நிற்கும் நிலைமையைக் கண்ணேரில் கண்ட பின்னராவது, அக்காட்சி அறிவால் நீ தொய்ந்து கிடக்கும் நிலையை ஒழித்து, நிமிர்ந்து நின்று உன் தாய்மொழிக் கடனாற்றுவாயாக.

(வி) தூர்தல் - காலத்தால் மறைந்து வழக்கழிந்து போதல். ''ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழியாச் சீரிளமை'' எனப் பேராசிரியர் சுந்தரனார் உரைப்பது ஒரு சான்று.

தொலைநோக்கு வேண்டும் சொலல்வல்ல அண்ணா
நிலைநோக்கு வேண்டும் நிமிர்ந்து. 69

(பொ) ஆட்சியாளர்க்கும் அறிவு வல்லார்க்கும் எதிர்வரும் தொலைநோக்குப் பார்வை வேண்டும்; அதனோடே சொலல்வல்ல அறிஞர் அண்ணாவைப் போலும் துணிந்து செயல்படும் நிலைபேறாம் நோக்குகளும் வேண்டும்.

(வி) தொலைநோக்கில்லா அற்றைத் திட்டங்களே அரசியலாகி விட்டமை எண்ணித் திருத்தம் வேண்டியுரைத்தது இது. அண்ணாவின் நிலை நோக்குக்கு, உலகத் தமிழ் மாநாட்டின் மேடையிலேயே முப் பல்கலைக்கழகங்களிலும் முப்பால் அறக்கட்டளைகள் ஏற்படுத்தியமை சான்றாம்.

நிமிர்ந்து பறப்பாய் குழந்தாய் தமிழைக்
கவர்ந்து படிப்பாய் களித்து. 70

(பொ) குழந்தையே, வளர்ந்துள்ள இற்றை உணர்விலா மாந்தரைப் போல் கூனிக் குறுகி நில்லாமல் மேனிமிர்ந்து எழுவாயாக; தடுப்பினும் கூட நின் தாய்த் தமிழைப் பற்றாகப் பற்றிக் கொண்டு மகிழ்ந்து படிப்பாயாக.

(வி) வளர்ந்தோர் நிலையை எண்ணி இரங்கி, வளரும் குழந்தைக்கேனும் உணர்வு வருகவென உரைத்தது இது. வளர்ந்தோர் மறைத்து வைப்பதால் குழந்தைக்குக் கவர்ந்து படித்தல் கட்டளை ஆயிற்று.

களிமிக்க அப்பா கடமை தமிழின்
தெளிமிக்க பள்ளிக்கண் சேர். 71

(பொ) பள்ளிக்கு அனுப்புகிறோம் என்னும் மகிழ்வுமிக்க அப்பாவே, உன்கடமை தமிழ் அறிவு மிகுந்துள்ள பள்ளியிலே பயில்வதற்கு என்னைச் சேர்ப்பாயாக.

(வி) கற்பித்தல் தம் கடமை என்று உணர்ந்த தந்தை, தம் மகவைப் பள்ளிக்கு விரும்பி அனுப்புதலால் 'களிமிக்க அப்பா' என்று விளிப்பு ஆயிற்று. எப்பள்ளியில் சேர்த்தல் கடன் என்று எண்ணியும் சேர்க்க வேண்டும் என்றது இது.

சேர விரும்பும் திருமகவே நாடாளும்
வீர அரசினை வேண்டு. 72

(பொ) தமிழ்ப் பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்பும் நல்ல குழந்தையே, அத்தமிழ்ப் பள்ளிக் கூடங்களை அமைத்துத் தர வேண்டும் என்று நாட்டை ஆண்டு வருகின்ற பெருகிய வாக்குகளைப் பெற்ற அரசினை வேண்டுவாயாக.

(வி) கல்வி கற்கும் குழந்தைகளும் தம் எதிர்கால நலம் கருதி இவ்வாறு வேண்டிக் கொள்ளல் கடமை என்றது இது.

வேண்டுக அன்னாய் விடுதலை பெற்றது
யாண்டும் தமிழ்வைக்க என்று. **73**

(பொ) ஊணொடும் தாய்த் தமிழை ஊட்டிய தாயே, அயலார் ஆட்சியைப் போராடி வெற்றி கொண்டு விடுதலை பெற்ற நோக்கமே கல்வி, ஆட்சி முதலிய எல்லா இடங்களிலும் தமிழே ஆட்சி செய்ய வேண்டும் என்பதற்குத்தானே என அரசை வேண்டிக் கொள்வாயாக.

(வி) தமிழ்வழிக் கல்விக்குத் தந்தையும் மக்களும் தாயும் ஆகிய மூவரும் வலியுறுத்த வேண்டும் என்றவை இந்த மூன்று பாடல்களும்.

என்று முதற்பள்ளி எந்தமிழ் இல்லாமோ
அன்று பிறக்கும் அறிவு. **74**

(பொ) எந்த நாள் முதல் பள்ளிகள் எல்லாமும் எமது தாய் மொழியாகிய தமிழ் விளங்குகின்ற நிலையமாக விளங்குமோ அந்த நாள் முதற்கொண்டுதான் கற்பவர்க்கு முறையான சரியான அறிவு உண்டாகும்.

(வி) அயன்மொழிக் கல்வி கடிய உழைப்பும் சிறிய பயனும் உடையது என்றும் இயல்பான எளிதான அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழியே தக்க கருவி என்றும் கருதிக் கூறியது இது.

அறிவு வளர்ச்சிக் கயல்மொழிகள் வைக்கும்
குறியை மறிப்போம் குறி. **75**

(பொ) அறிவு வளம் பெறுதற்கென அயல்மொழிகள் சேர்த்து வைக்கின்ற நூல்கள், கலைச் சொற்கள் ஆகியவற்றைத் தமிழ் மொழியில் மீளுருவாக்கம் செய்வோம். இதனைக் குறிக்கோளாகக் கொள்வாயாக.

(வி) குறி என்பது எழுத்து; நூல்; ஒரு ''குறிகேட்டபோன்'' என்னும் நன்னூலும் ''குறி எழுதுமுன்'' என்னும் கந்தபுராணமும் கருதுக. அறிவு நூலாக்கமும் கலைச் சொல்லாக்கமும் செய்வோம் என்றது இது. மறித்தல் - மீளுருவாக்கம் செய்தல்.

குறிக்கோள் அரசெங்கும் கொள்ளுக என்றும்
அறிக்கோள் தமிழ்வழியே யாம். **76**

(பொ) தமிழ்மொழி ஆட்சி என்னும் குறிக்கோளைக் கொண்ட அரசு, தன் ஆட்சிப் பகுதி, பரப்பு ஆகிய எங்கும் எந்நாளும் அறிவைக் கொள்ளும் வாயில் தமிழேயாம் என்பதைக் கொள்வதாக.

(வி) அறிக்கோள் - அறிவைக் கொள்ளுதல். 'எங்கும் தமிழ்; எல்லாம் தமிழ்; என்றும் தமிழ்' என்றது இது.

ஆமெனச் செய்குவோம் அன்றேல் பதவியைப்
போவெனக் காண்போம் பொருது. 77

(பொ) கூறப்பட்ட கொள்கையை ஒப்புக் கொண்டு நடைமுறைப்படுத்துமாறு அரசைச் செய்வோம்; அதனைச் செய்ய அரசு ஒப்பவில்லை என்றால் மக்களாட்சி முறையில் அறப்போரிட்டு அவ்வரசின் பதவியைப் பறித்துக் கொண்டு அப்பாற் போக வழிகாண்போம்.

(வி) 'ஆம்' என்றது முந்தைச் செய்தித் தொடர்பு. பொருது — போரிட்டு. குறிக்கொண்ட அரசு, அதன்படி கடனாற்றவில்லை என்றால் 'அழகுக்காக வீற்றிருப்பதோ அது?' என்றது இது.

பொருதுதான் என்பயன் புல்லடிமை மாக்கள்
எருதுதான் என்றே இரங்கு. 78

(பொ) தமிழ்வழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தாத அரசொடு போரிட்டும்தான் என்ன பயனாகும்? நாட்டு மக்கள் மீளா அடிமைப்பட்டு வண்டியிலும் ஏரிலும் பூட்டப்பட்ட மாடுபோல் உள்ளனரே என்று எண்ணி வருந்தவே வேண்டியுள்ளது.

(வி) மக்களிடம் விழிப்புணர்வு இல்லாக்கால் அரசு மட்டுமே எதனையும் நிறைவேற்றி விட முடியாது என்று சிந்திக்க வைப்பது இது.

இரப்பேன் தமிழரை இன்றேனும் தாயைப்
புரப்பீர் புரப்பீர் புரிந்து. 79

(பொ) தமிழ் மக்கள் அனைவரையும் மன்றாடி வேண்டிக் கொள்கிறேன்; இதுகாறும் புறக்கணித்திருந்தாலும் இன்று தொட்டேனும் தமிழ்த் தாயை உரிய வழிகளில் எல்லாம் பேணி வளர்ப்பீராக; அதுவே, நீங்கள் புரிந்து கொண்டு காக்கும் காவலர் என்னும் தகுதியைத் தரும்.

(வி) இரத்தல் இவண் மன்றாடிக் கேட்டலாம்; இவ்விரப்பு பொதுநலம் கருதுதலாலும் தாய்மொழி பேணுதல் மக்கள் கடமையாதல் உணர்த்துதலாலும் தமக்கென இரக்கும் இரப்பு ஆகாது. 'இரப்பன் இரப்பாரை எல்லாம்' என்னும் வள்ளுவ நடையது இது (1067).

புரியவே இல்லை புறநாட்டுப் போக்கு
தெரியவே இல்லை திமிர். 80

(பொ) நம்நாட்டில் மேட்டுக்குடி என்றும் மேற்பதவி என்றும் இருப்பார்க்கும், அயல்நாடுகள் மேற்கொள்ளும் முன்னேற்றத் திட்டங்கள் எவையும் விளங்கவே இல்லை; அம்மட்டோ? தாம் கொண்டிருக்கும் வீண் செருக்கும் தெரிய இல்லை.

(வி) பலநாடுகளையும் கண்டவரேனும் அந்நாடுகள் முன்னேறும் வகைகளைக் கண்டு திட்டங்கள் வகுக்காது, கொண்டதே கோலமாக இருப்பது குறித்து வருந்தி உரைத்தது இது.

திமிராக வாழலீர் தீந்தமிழைக் கற்று
நிமிராக வாழ்வீர் நிலைத்து. 81

(பொ) தமிழீர், நீவிர் அறியாமை வழிப்பட்ட திமிருடன் (செருக்குடன்) வாழாதீர்; இனிய தமிழியல் ஈதெனக் கற்றுத் தெளிந்து நிமிர்ந்து பெருமிதத்துடன் நிலைபெற வாழ்வீராக.

(வி) நிமிர்தல் - பெருமிதமாகக் கடமை புரிதல்; ''வாழலீர் வாழ்வீர்'' திமிர் வேண்டா; நிமிர்வே வேண்டும் என்றது இது.

நிலம்வாழ் மொழியே நெறிகல்வி வாயில்
பலம்வாழ் அரசுகளைப் பார். 82

(பொ) முறையான கல்வி கற்கும் வழி, அவரவர் பிறந்து வாழும் மண்ணில் வழங்கும் மொழியேயாம். வலிமை வாய்ந்த அரசுகள் எல்லாம் எவ்வாறு மொழிநலக் கடமைகள் புரிகின்றன என்பதை எண்ணிப் பார்ப்பாயாக.

(வி) வாழ்மொழி - வாழ்வார் வழங்கும் மொழி; நெறிகல்வி - பல்துறைப்பட்ட பல நிலைப்பட்ட கல்வி. பலம் வாழ் அரசு - வல்லரசு.

பாரடா சப்பான் படிமொழி யாதென்று
தேரடா உண்மை தெளி. 83

(பொ) அறிவியலில் ஓங்கி உயர்ந்து விளங்கும் சப்பானிய நாட்டின் கல்விமொழி எது என்று பார்ப்பாயாக; உண்மையை ஆராய்வாயாக; அவரவர் தாய்மொழியே கல்வி மொழி என்பதைத் தெளிவாயாக.

(வி) அடா- இளையோரை அன்பால் விளிக்கும் (அழைத்துக் கூறும்) விளி. படிமொழி - கல்வி மொழி; பயிற்று மொழி; தேர்தல், தெளிதல் என்பன ''தேரான் தெளிவும் தெளிந்தான் கண்'' (510) என்னும் திருக்குறளாட்சி.

தெளிமிக்க பாரதி தேசுபுகழ் தாகூர்
ஒளிமிக்க காந்திசொல் ஓம்பு. *84*

(பொ) எம்மொழி கல்வி மொழியாக இருக்க வேண்டும் என்பதில் தெளிவு மிகுந்த பாரதியாரும், நாடெல்லாம் புகழ்ந்து பாராட்டுகின்ற இரவீந்திரநாத தாகூரும், உலகுக்கு ஒளியாக ஓங்கிய காந்தியடிகளும் பயிற்சிமொழி குறித்துக் கூறியவற்றை யெல்லாம் அறிந்து பேணிக் கொள்வாயாக.

(வி) இம் முப்பெரு மக்களும் அவரவர் தாய் மொழியின்மேல் தணியாத பற்றுக் கொண்டிருந்தவர்கள். அவரவர் தாய் மொழியே கல்வி மொழியாக இருக்க வேண்டும் என்னும் கொள்கை உடையவர்கள்.

ஓம்பும் திரு.வி.க. ஒண்சொல் மறைமலை
நாம்புகழ் தாசனை நம்பு. *85*

(பொ) பயிற்று மொழி தமிழாகவே இருக்கவேண்டும் என்பதைக் காத்துநின்ற தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனாரும், தனித்தமிழ்ச் சொல் மலையாக விளங்கிய தவத்திரு மறைமலையடிகளாரும், நம் புகழுரைக்கெல்லாம் இடமாகி விளங்கிய பாவேந்தர் பாரதிதாசனாரும் கொண்ட பயிற்சி மொழி வழியை நம்பிச் செயல்படுவாயாக.

(வி) இம்மூவரும் தாய்மொழியாம் தமிழே எங்கும் எல்லா நிலைகளிலும் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று பாடுபட்டவர்கள் ஆவர்.

நம்பற் குரியது நந்தமிழே அல்லவை
கொம்பிற் சுழலும் கொடி. *86*

(பொ) நம் தாய்மொழியாம் தமிழே என்றும் நம்மைவிட்டு அகலாதது என்று நம்புதற்குரிய மொழியாகும். மற்றை அயல்மொழிகள் என்பவை, கொடி மரத்தில் கட்டப்பட்ட கொடியின் சுழற்சிபோல் மாறிப் போவன ஆகும்.

(வி) தாய்மொழி என்றும் நிலைபெற்றது; மற்றை ஆட்சி மொழிகள் ஆள்வோர் மாற மாற மாறிப் போகின்றனவாம்; நிலைபே றற்றவையாம். பன்மொழி கற்ற ஒருவர் தம் இறுதிக்காலத்தில் எல்லாம் மறந்து போயின. ஆனால் என் தாய்மொழியே இன்றும் என்னைக் கைவிடவில்லை என்றது நினைவுறத்தக்கது.

கொடியார் எவரெனிற் கோல்தமிழைப் பள்ளி
படியார் பிறப்பிற் பதர். 87

(பொ) ஆட்சிமொழி தமிழ் என ஆணை கொண்டிருந்தும் அதனைக் கல்வித் துறையில் நடைமுறையாகச் செய்யாதவரே கொடியவர் ஆவர்; அவர்கள் தமிழ்ப்பிறப்பியாக இருப்பினும் மணியில்லாத நெற்பதர் போன்ற பிறப்பியே ஆவர்; மக்கட் பதராவர்.

(வி) கோல் தமிழ் - ஆட்சியுரிமையுடைய தமிழ். பள்ளி படியார் - பள்ளியில் படியச் செய்யாதவர். பதர் - உள்ளீடு இல்லாதது.

பதரும் படாமற் பரமொழியாற் பள்ளி
புதரும் படாமற் புதுக்கு. 88

(பொ) பிறந்த பிறப்புப் பதர் என்று பட்டுப் போகாமலும், அயல்மொழிகளால் கல்வி நிலையங்கள் முள்ளும் முடலும் சூழ்ந்த புதர்க்காடு என்று ஆதல் இல்லாமலும், நலம் பெறுமாறு தாய்மொழிக் கல்விக்குப் புதுப்பொலிவு உண்டாக்குவாயாக.

(வி) பரமொழி - அயல்மொழி. புதுக்குதல் - களைவன களைந்து புதிது ஆகச் செய்தல்.

புதுக்குதல் யார்கடன் போர்செய் பகையைச்
செதுக்குதல் யார்கடன் செப்பு. 89

(பொ) தம்நாட்டு மொழிக்கு வேண்டிய நலங்களை யெல்லாம் செய்து காலத்துக்குத் தகப் புத்தம் புதிதாக்கி வளர்த்தல் எவர் கடமை? களை வெட்டிப் பயிரைக் காப்பது போல் தாக்கவரும் பகையைக் களைந்து நாட்டைக் காத்தல் எவர் கடமை? ஆள்வோர் கடமையே என்பதைச் சொல்லி வலியுறுத்துவாயாக.

(வி) பகையழிக்கும் கடன் எதற்கு உண்டோ அதற்கே புதுக்கும் கடனும் உண்டு என்றது இது. செதுக்குதல் என்பது களைவெட்டுதல். இவண் பகையழித்தல்.

செப்புதும் யாமே திராவிடப் பற்றினர்
ஒப்புயர் ஆட்சிக்கே உண்டு. 90

(பொ) மொழிக்கு ஆக்கமாகப் புதுப்பிக்கும் கடமைகள், தமிழ்ப் பற்றில் தளிர்க்கும் திராவிடப் பெயர்க் கட்சிகளின் ஒப்பற்ற ஆட்சிகளுக்கே உண்டு. இதனை யாம் உரத்துக் கூறுகிறோம்.

(வி) மொழிப்பற்றுக் கொண்டிருத்தலும் மாநிலப் பற்றெனக் குறுக நோக்கும் தேசியத்தினர், கட்சிக் கட்டுப்பாடு நோக்கித் தெரிந்துரைத்தது இது.

உண்டுமே லுண்டே உயிர்வாழ் நமக்கெலாம்
கொண்ட கடனெனக் கொள். 91

(பொ) மொழிநலம் பேணல் அரசின் கடனாக இருந்தால்தான் மக்களாகிய நமக்கெல்லாம் கடைப்பிடிக்கும் கடமையாகவும் இருக்கும். இதனை அறிந்து கொள்வாயாக.

(வி) உண்டுமேல் - உண்டானால்; 'அரசு எவ்வழி மக்கள் அவ்வழி' என்பதைக் கருதி உரைத்தது இது. 'உயிர்வாழ்' என்றது மற்றை உயிர்களை விலக்கி மாந்தரைக் குறித்து நின்றது. 'வாழும் உயிர்' என்று குறிப்பார் வள்ளுவர்.

கொள்வீர் தமிழென்று கூறும் தமிழர்களை
எள்ளல் விடுக இனி. 92

(பொ) எல்லா நிலைகளிலும் தமிழே போற்றப்பட வேண்டும் என்று கொள்வீராக. அவ்வாறு கூறிக் கடனாற்றும் தமிழர்களை இகழ்ந்து கூறுதலையாவது இனிமேல் கொள்ளாமல் விடுவீராக.

(வி) நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும்; மாட்டீர் எனினும் இகழ்ந்து கூறுவதையாவது விடுக என நல்வழி காட்டியது இது.

இனிப்பு விரும்பும் இதழ்மழலாய் மற்றைத்
திணிப்பு மறுப்பாய் சினந்து. 93

(பொ) இனிப்புப் பண்டங்களை விரும்பிக் கேட்டும் அடம்பிடித்தும் உண்கின்ற வாய்மலரையுடைய இளங்குழந்தையே, உன் குழந்தைமைக்கு ஒவ்வாத மற்றை மொழித் திணிப்பைக் கடிந்து மறுத்து விடுவாயாக.

(வி) இனிப்பு விரும்பும் குழந்தைக்கு இனியதமிழ் இயல்பான விருப்புக்குரியது என்ற குறிப்பினது இது.

சினக்கும் அறிஞர்காள் செல்நாடு தோறும்
கனக்கும் மொழிகளே காட்டு. 94

(பொ) 'தாய்மொழி வழிக் கல்வி தருக' என்று கேட்கும்போது, எரிச்சல் கொண்டு எதிர்க்கும் மேதைகளே, நீவிர் செல்லும் நாடுகளி லெல்லாம் சிறந்து விளங்கும் அந்நாட்டுத் தாய்மொழிகளே எடுத்துக்காட்டாதலை அறியீரோ?

(வி) அறிந்தால் நீங்களே முன்னின்று வழிகாட்டுவீர்; வழிகேட்பாரை நோக்கி வெறுப்புக் காட்டீர் என்றது இது.

காட்டாக வேண்டும் கருத்துத் தமிழிதழ்கள்
பூட்டாகச் செய்தல் புரை. 95

(பொ) எல்லா நலங்களுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கவேண்டிய கருத்துக்களைக் கொண்டிருக்கத்தக்க தமிழ் இதழ்கள், மறைத்து மறைத்துப் படிக்கத்தக்க படமும் கதையும் கொண்டதாக வெளிவருதல் நாட்டைக் கெடுக்கும் குற்றமாகும்.

(வி) காட்டு - எடுத்துக்காட்டு; பூட்டு - மறைப்பு; புரை-குற்றம். நாட்டு முன்னேற்றத்தில் இதழ்களின் பொறுப்பை உரைத்தது இது.

புரையில் வணிகீர் பொருட்பாற் குறளை
உரையொடு கற்றல் உயர்வு. 96

(பொ) குற்றமற்ற வணிகர்களே, நீங்கள் குறளை முழுதுறக் கற்றல் வேண்டும்; இல்லை எனினும், பொருட்பாற் குறள்களையாவது அவற்றின் உரைவிளக்கத்துடன் கற்றுக் கொள்ளல் உயர்வாகும்.

(வி) பொருளின் சிறப்பு, அதன் இன்றிமையாமை, அதனை ஈட்டும் முறை, அதன் பயன்பாடு, பயன்படாப் பொருளின் இழிவு என்பன வெல்லாம் விரிவாக அறிய வாய்க்கும் பகுதி பொருட்பால் ஆகலின், அதனை யேனும் கற்கக் கூறினார். பொருள்நிலை, பொருட் பயனிலை எல்லாம் 'வள்ளுவம்' பொழிவுகள் காண்க.

உயர்வு தமிழால் உளதெனும் கொள்கை
மயர்வறக் கோடல் மதிப்பு. 97

(பொ) எந்நிலையில் இருக்கும் தமிழர் எவர்க்கும், தம் தாய்மொழியாலேயே தமக்கு உயர்வு உண்டு என்னும் கொள்கையை மறவாது கடைப்பிடிப்பதே மதிப்பாகும்.

(வி) பிறமொழியால் பெருமை எனத் தாய்மொழியைப் புறக்கணித்தவர் இறுதிநாளில் கொண்ட வருந்துதல் இவர்க்கு வருதல் ஆகாது என்னும் இரக்கத்தால் உரைத்தது இது.

மதிப்பிலாச் செல்வம் மலையிமய மேனும்
கொதிப்பிலா ஞாயிறெனக் கொள். 98

(பொ) மதித்துப் பாராட்டத்தக்க வகையில் தேடப்படும் செல்வமே செல்வம்; மற்றைப் பழியால் தேடும் செல்வம் இமயமலை போல் உயர்ந்தோங்கிக் கிடப்பினும், வெப்பும் வெளிச்சமும் இல்லாத கதிரோன் ஒன்று இருந்தால் என்ன பயன் செய்யும்? அது போன்றதாம்.

(வி) ஞாயிற்றுக்குப் பயன் கொதிப்பு; செல்வத்திற்குப் பயன் மதிப்பு; இல்பொருள் உவமை என்னும் அணிசார்ந்தது இது.

கொள்ளுக செந்தமிழ் கூறுக பள்ளிகள்
உள்ளுக தாமே உறைத்து. 99

(பொ) தமிழ்வழிப் பிறப்பர் அனைவரும் எப்பயன்பாட்டுக்கும் செந்தமிழையே கொள்வாராக; தமிழகப் பள்ளிகள் எல்லாமும் செந்தமிழே கற்பிப்பனவாக; சிந்திப்பார் அனைவரும் செந்தமிழ் ஊற்றத்திலேயே சிந்திப்பாராக.

(வி) கொள்கை, பயிற்சி, சிந்தனை ஆகிய எல்லாமும் செந்தமிழாக இருத்தல் வேண்டும் என்றது இது.

உறையுள் உணவுடை யெல்லாம் தமிழால்
நிறையக் கிடைக்கும் நினை. 100

(பொ) தமிழ் வழிக் கல்வியாலும் அதனைப் போற்றிக் காத்தலாலும் வாழ்வுக்கு வேண்டிய உறைவிடம், உணவு, உடை ஆகிய எல்லாமும் வேண்டும் அளவுக்கு மேலும் கிடைக்கும் என்பதை உறுதியாகக் கொள்வாயாக.

(வி) தமிழ்வழிக் கல்வியாலும், தமிழைப் போற்றிக் காத்தலாலும் வாழ்வுக்கு வழியுண்டோ என்று மறுப்பாரையும் ஐயுறுவாரையும் நோக்கி உரைத்தது இது.

நினைவு தமிழாயின் நீள்நில வாழ்க்கை
புனைவிலை பொற்றாலிப் பொன். 101

(பொ) தமிழ்மாந்தர் நினைவு தமிழ்வளமாக ஆகிவிடுமானால், இப்பரந்த உலக வாழ்க்கை - புனைவாகக் கூற வேண்டியதில்லை - மெய்யாகவே, பொற்றாலிப் பொன்போல மதிப்பும் மங்கலமும் உடையதாகத் திகழும்.

(வி) பொன் மதிப்புக்குரியதே எனினும் தாலிப்பொன் தனிப்பெருமைக்கு உரியதே அல்லவோ. அதனால் 'பொற்றாலிப் பொன்' என்றார்.

பொன்னிற் சிறந்த பொதுவுடைமை யாதெனின்
தன்னிற் சிறந்த தமிழ். 102

(பொ) பொலிவுமிக்க பொன்னினும் சிறந்த பொதுப்பொருள் எது என்றால், அது தனக்கு இணையில்லாது சிறந்து விளங்கும் தமிழேயாகும்.

(வி) சாதி, சமயம், பால், வயது, தொழில், கட்சி என்னும் பிரிவுகளுக்கு அப்பாற்பட்ட பொதுப் பொருள் மொழி ஆதலால் 'பொதுவுடைமை' என்றார்.

சிறந்த தமிழன்னை செங்குருதி சோரும்
இறந்த பனுவல் எனைத்து. *103*

(பொ) சிறந்த தமிழன்னையின் சிவந்த இரத்தமே ஒடுங்கி விட்டாற்போல, அழிந்துபோன பழைமையான நூல்கள் எத்தனை என்பதை எண்ணவே வருத்தமாகின்றது.

(வி) இழந்து போன நூல்களை முன்னே குறித்தார் (28-30); பின்னும் குறிப்பார் (437). பனுவல் - நூல்.

எனைத்தானும் காக்க இருக்கின்ற நூல்கள்
உனைத்தானும் வேண்டுவன் ஒன்று. *104*

(பொ) தமிழ்ப்பிறப்பே, உன்னை விரும்பி ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். அது, இருக்கின்ற தமிழ் நூல்கள் எவ்வளவே ஆயினும், மீளவும் அவை அழிந்து படாமல் காப்பாயாக.

(வி) நூல் இயற்றுதல் ஒப்பது காத்தல்; ஆகலின், அக்கடமையை வலியுறுத்தினார். ஏனெனில், வழிவழி வருவார் அவ்வைப்பை இழந்துவிடல் ஆகாதே என்பதால்.

ஒன்றோ பலவோ உறுபிறப்பில் சங்கநூல்
நன்றாகக் கற்போம் நயந்து. *105*

(பொ) நல்ல தமிழ்ப்பிறப்பு அடைந்துள்ள நாம் இப்பிறவிப் பேறாகச் சங்க நூல்கள் என்பவற்றுள் ஒன்றையோ பலவற்றையோ விரும்பித் தெளிவாகக் கற்போமாக.

(வி) தொல்காப்பியம், பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு என்பவை சங்க நூல்கள் என்று சொல்லப்படுவனவாம்.

நயங்கண்ட பண்டித நன்மணிபோல் நாமும்
வயங்கண்டு கற்போம் வரிந்து. *106*

(பொ) ஒரு நூலை எவ்வாறு கற்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய ஆசிரியர் பண்டிதமணி கதிரேசனாரைப் போல், நாமும் கற்கும் நூல்களைத் திட்டமிட்டு உளம் பொருந்தி நிற்கக் கற்போமாக.

(வி) 'நவில்தொறும் நூல்நயம் போலும்' என்னும் திருக்குறள் ஆட்சி நயம் இவண் கருதத்தக்கது. நூலாசிரியர் மாணிக்கனாரின் பேராசிரியர் இப்பண்டிதமணியார் ஆகலின் அவர்தம் நுண்மாண் நுழைபுலம் நுனித்தறிந்து கூறியது இது.

வரிவரியாய்க் கற்பின் மனவுடைமை யாகும்
தெரிவறியா நூல்கள் சில. *107*

(பொ) மேலோட்டமாகப் பார்த்த அளவில் பொருள் புலப்படுதல் இல்லாத சில நூல்களையும், ஆழ்ந்து வரிவரியாகக்

கற்றுவிட்டால், அச்சொல்லும் பொருளும் இயல்பாக மனத்து வைக்கப்பட்ட வைப்பாக என்றும் விளங்கும்.

(வி) அரிய பெரிய நூல்களையும் கற்பதற்குரிய வழிவகை கூறியது இது. நூலாசிரியரின் பட்டறிவு விளக்க வெளிப்பாடும் இதுவாகும்.

சிலவே முழுநூல்கள் செம்மையுறக் கற்றால்
பலவே தமிழின் பயன். *108*

(பொ) முழு முழு நூல்கள் சிலவற்றைப் பொருள் புரிந்து தெளிவாகக் கற்றுவிட்டால் அப்பயிற்சி பலப்பல நூல்களையும் எளிதாகக் கற்றுக் கொண்ட பெரும்பயனைச் செய்துவிடும்.

(வி) 'ஆழப் பயிற்சியால் அகலப் பயன் எய்தலாம்' என்னும் நுட்பத்தைப் பட்டறிவால் உரைத்தது இது. 'செம்மையுற' என்றது 'கசடற' என்பது போன்றது.

பயனாக அவ்வைநூல் பன்முறை கற்பின்
வியனாகும் ஆற்றல் விரிந்து. *109*

(பொ) பயன்பாட்டு நலம் கருதி ஔவையார் அருளிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி முதலிய நூல்களை, எளியதுதானே என எண்ணாமல் பலமுறை கற்றால் அதன் பயன் விரிய விரிய விரிந்து பெருநலம் செய்யும்.

(வி) ''எதனை இழந்தாலும் ஔவை நூல்களை இழக்கத் துணியோம்'' என்ற பாரதியார் கருத்து இவண் எண்ணத் தக்கது.

விரியும் தமிழ்த்திறம் வெள்ளோட்ட மாகப்
புரியும் சிறுநூல்கள் போற்று. *110*

(பொ) படித்த அளவில் எளிதில் பொருள் புலப்பட விளங்கும் சிறிய அறநூல்களை விரும்பிக் கற்றால், அக்கல்வியால் தமிழ்த் திறமை மிக விரிவடைதல் உண்மை.

(வி) ஔவையார் நூல்களை யன்றி வெற்றிவேற்கை, உலக நீதி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், நீதி வெண்பா முதலிய நூல்களையும் குறித்துக் கூறியது இது.

போற்றிப் படிப்பின் புகழ்பெருத்த நூலெல்லாம்
காற்றில் மிதக்கும் கலம். *111*

(பொ) பலரும் பாராட்டும் பெரிய பெரிய நூல்களை எல்லாம் விரும்பிப் படித்தால், காற்றால் தள்ளப்பட்டுக் கரைசேரும் கப்பலைப் போல், பிறவிப் பேறுகள் எல்லாமும் வாய்க்கப் பெறலாம்.

(வி) இயக்குதல் இல்லாமலே காற்றால் கரைசேரும் கலம் என்றது, தாய்மொழி நூல்களாகலின் தம்முயற்சியாலேயே தனித்திறம் எய்தலாம் என்று தெளிவு உரைத்தது இது.

கலங்குதல் வேண்டா கடிதுதமி ழென்றால்
அலங்குதல் வேண்டா அறி. ***112***

(பொ) கற்பதற்குத் தமிழ் கடுமையான மொழி என்று அம்மொழி இயல்பை மெய்யாக அறிந்து கொள்ளாதவர் கூறினால், அதற்காகக் கலக்கம் அடைதல் வேண்டியது இல்லை; கற்போமா, வேண்டாமா என அசைவுறுதலும் வேண்டுவது இல்லை; கற்பது எளிதென அறிந்து கொள்க.

(வி) கற்பதற்குத் தமிழ் கடிது என்பார் கருத்துப் பிழையை எடுத்துரைத்துத் தெளிவுறுத்தியது இது.

அறியார் நரியார் அயல்மொழியே நாடும்
வெறியார் பலரின் விரிப்பு. ***113***

(பொ) தமிழைக் கற்பது கடிது என்பது அதனைக் கற்றோர் கூறுவது இல்லை; அது, தமிழியல்பை அறியாதவரும், சூழ்ச்சியாளரும், அயல் மொழியையே விரும்பும் வெறியுடையவரும் ஆகிய பல பேர்களின் புனைந்துரையே யாகும்.

(வி) தமிழ்க் கல்விக்குத் தடையாக இருப்பார் இவர் இவர் என இனங் காட்டியது இது. நரியார் - சூழ்ச்சியாளர்; நாடும் - விரும்பும்.

விரித்தபாய் போல விளங்கும் தமிழைச்
சிரித்தநாய்க் கென்னோ திணிப்பு. ***114***

(பொ) விரித்துவைத்த பாயைப் போல் தன் மண்ணில் பரவிக் கிடப்பது தமிழ்மொழி; இதனைக் கண்டு நகைக்கும் பிறவிக்குத் 'திணிப்பு' என்பது எப்படி உண்டாயிற்று?

(வி) தமிழ்நாட்டில், தமிழ் வழியே கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதைத் திணிப்பதாகக் கூறுவாரை நோக்கிச் சினந்துரைத்தது இது.

திணிக்கும் மொழியன்று தீந்தமிழ் நெஞ்சைப்
பிணிக்கும் மொழிகாண் பெரிது. ***115***

(பொ) தமிழ்மொழி திணிக்க வேண்டும் என்னும் நிலையில் உள்ள 'தொல்லை' மொழியன்று; கற்பவர் நெஞ்சைக் கவ்விப் பற்றிக் கொள்ளும் மொழிகளுள் அதற்கு இணை 'இல்லை' என்னும் மொழி அது. ஆதலால், திணிக்க வேண்டுவதென்ன?

(வி) "போப்பும், கால்டுவெலும், வீரமாமுனிவரும் அனையவர் திணிக்கக் கற்றா தீந்தமிழ் என்றனர்?" என்பதன் குறிப்பு இது.

பெருஞ்சமயக் காப்பியங்கள் பெற்றவள் என்னும்
அருஞ்சிறப்புக் கொண்டாள் அவள். *116*

(பொ) உள்நாட்டுச் சமயங்கள், வெளிநாட்டுச் சமயங்கள் என இருபாற்பட இங்குள்ள சமயங்களின் உயிர் நிலையாம் பெரிய பெரிய காப்பியங்களைக் கொண்டவள் என்னும் அரிய சிறப்பும் கொண்டவள் அத்தமிழன்னை.

(வி) சிலம்பு முதலாகக் கிளர்ந்த காப்பியங்களை எண்ணி அச்சிறப்புரைத்தது இது.

அவள்பிறந்த நாளில் அனைத்துலக மண்ணில்
எவள்பிறந்தாள் சொல்லென் றெழுப்பு. *117*

(பொ) எவனேனும் தமிழின் காலத்தையும் பிறப்பையும் பிற்படுத்த நினைத்தால் 'உலகப் பரப்பு அனைத்திலும், அத்தமிழன்னை பிறந்த நாளில் எவளேனும் பிறந்திருந்தாளோ அதனைச் சொல்!' என்று எழுச்சிக்குரல் எழுப்புவாயாக.

(வி) தமிழ்மொழி ஆரிய வழிப்பட்டுத் தோன்றிய மொழி என்று கதைப்பார்க்கு எழுப்பிய மறுப்பு மொழி இது.

எழுந்த மொழிகளுள் ஏட்டளவில் நின்று
விழுந்தபல என்னோ வினவு. *118*

(பொ) உலகத்துத் தோன்றிய மொழிகள் எல்லாமும் இன்றும் வழக்கில் உள்ளனவா? நூல் அளவில் நின்று உலக வழக்கில் இல்லாமல் ஒழிந்தனவே அவை! ஏன்? என்று வினவுவாயாக.

(வி) முன்னைக் குறளில் எழுப்பிய வினாவைத் தொடர்ந்து எழுப்பிய வினா இது. பழமை மொழிக்கெல்லாம் மூலமாய் அமைந்து, புதுமைப் பொலிவோடும் வலிவோடும் விளங்கும் மொழி தமிழே என்றார்.

வினவினால் உண்மை விளங்குமே செம்மை
நினைவினால் செந்தமிழே நேர். *119*

(பொ) வினாக்களைத் தொடுக்கும்போதுதான் உண்மை விளக்கமாகும்; நடுவுநிலையுடன் ஒருவர் ஆய்ந்து பார்ப்பாரானால் அச்செந்தமிழ் ஒன்றே அதற்கு நேராகும்.

(வி) வினாக்கள் எழுப்பி, விடை வழங்கியது இது. செம்மை - நடுவுநிலைமை. (திருக்குறள் 112,119). தன்னிற் சிறந்த தமிழ் என்றது **காண்க** (மாணிக்கக் குறள் 102.)

நேரசை கொண்ட நெடுந்தமிழைப் பள்ளியில்
வேரசை வின்றி விதை. *120*

(பொ) ஓரெழுத்தாலாகிய சொற்கள் பலவற்றைத் தன்னிடத்துக் கொண்டது பழமையான தமிழேயாம்; ஆதலால், மழலையர் பள்ளியிலேயே தமிழ் வித்தினை அதன் வேரும் அசையா வகையில் வளர ஊன்றுவாயாக.

(வி) நேரசை என்றது ஓரெழுத்தாலாகிய அசை; அவ் அசையே சொல்லாகத் தமிழில் பல ஆயிரங்கள் உள. அது, அதன் தொன்மைக்குறி ஆதலால் 'நெடுந்தமிழ்' என்றார். வேர் அசையின் விளைவு இசையாது என்க.

விதைக்க முயலார் விளிவில் தமிழைப்
புதைக்க முயல்வார் புரிந்து. *121*

(பொ) பள்ளிப் பருவத்திலேயே தமிழை விதைப்பதற்கு முயற்சி எடுக்காதவர் எவரேனும் அவர், அழிவில்லாத் தமிழை ஆழத்தில் புதைத்துவிட விரும்பி முயற்சி செய்பவரே ஆவர்.

(வி) விளிவு இல் - இறப்பு இல்லாத; புரிதல் - விரும்புதல். பெற்றோர், இளையோர், அறிஞர், ஆட்சியர் எவரெவரெனினும் விதைக்க முயலார் எனின், புதைக்க முயல்வாரேயாவார். இது செய்யாவிடின் அது நிகழும் என்பது குறிப்பு.

புரிந்தே சுரண்டும் புகழ்ச்சிறு கூட்டம்
தெரிந்தே வரைவன் சிரித்து. *122*

(பொ) புகழ்மிக்கதும் சிறியதும் ஆகிய ஒரு கூட்டம் இதனைச் செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டு மொழியாக்கத்தைச் சுரண்டுகின்றது. இதனைத் தெரிந்து கொண்டுதான் நகைப்புடன் இதனை எழுதுகின்றேன்.

(வி) புரிந்து கொண்ட புகழ்ச்சிறு கூட்டம் என்பதால் புரியாதது இகழ்ப்பெருங் கூட்டம் என்பதைச் சுட்டுகிறார். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பது போல் சுரண்டுதல் கண்டும் நகைக்கவே வேண்டியுளது என்கிறார்.

சிரிக்குஞ் செயலோ சிவன்போல் ஒருநாள்
எரிக்குஞ் செயலாய் விடும். *123*

(பொ) சிரிக்கின்ற இத்தன்மை சிரிப்பாகவே போகத் தக்க செயலன்றாம்; முப்புரம் எரித்த முதல்வன் செயல் போலவும் ஒருநாள் ஆகிவிடக் கூடியதேயாம்.

(வி) அழிவு செய்வார் திருந்திக் கொள்ளுதல் அவர்க்கும் நல்லது; பிறர்க்கும் நல்லது என்னும் எச்சரிப்பு இது.

விடுக அயன்மை விளையும் முளையில்
தொடுக தமிழ்ச்சுவடித் தூக்கு. *124*

(பொ) விளையும் பயிராக விளங்கக் கூடிய முளைகளாகிய குழந்தைகளுக்கு, அவ்விளமைப் பருவத்திலேயே, அயன்மொழி வழிக்கல்வி தருதலை விட்டொழிப்பீராக; தமிழ்ச் சுவடித் தூக்குகளை ஏற்றுப் பயிலுதற்குத் தக்க வழிகளைக் காண்பீராக.

(வி) விளையும் பயிர் முளையிலேயே அயன்மண்ணின் பிடிப்புக்கு ஆட்பட்டு விட்டுவிட்டால், அப்பயன் அயலுக்கே அன்றித் தன்மண்ணுக்கு ஆகாது என்ற எண்ணத்தை உரைத்து உண்மை காட்டுவது இது.

தூக்கிய தில்லையான் சொற்றமிழை அம்பலமேல்
நீக்கிய சூழ்ச்சி நினை. *125*

(பொ) தமிழ்மக்கள் சிந்தனை யற்று உறங்கிக் கிடந்த நாளில், திருநடம் ஆடும் தில்லைப் பெருமான் மேலேயே பாடப்பட்ட தீந்தமிழ்த் தேவார திருவாசகப் பாடல்களும் அவன் பொன்னம்பலத்தின் மேலே ஏறுதலைத் தடுத்துவிட்ட சூழ்ச்சியை நினைத்துப் பார்க்க.

(வி) ''இடம் கொடுத்தால் மடம் பறிபோகும்'' என்னும் பழமொழியும், ''உறங்கியவன் கன்று கடாக்கன்று'' என்னும் பழமொழியும் நினைவுறுத்துவது இது.

நினைவினிய வாசகம் நேரொலியாக் கோயில்
கனவினும் தோன்றா கதிர்த்து. *126*

(பொ) நினைத்த அளவிலேயே நெஞ்சில் இனிமைச் சுரப்பாகின்ற திருவாசகம் இறைவன் திருமுன் ஒலிக்கவிடாத கோயில் எத்தகு பெருமையும் பேறும் உடையது எனினும் கனவில்கூட பொலிவுடன் விளங்குவது ஆகாது.

(வி) ''அருச்சனை பாட்டே ஆகும்; சொற்றமிழ் பாடு'' என்னும் தேவாரமும், 'அழகிய சிற்றம்பல முடையான் எழுத்து' என ஒப்ப மிடப்பட்ட திருவாசகமும் புகாக் கோயில்கள் ஒளிபுக்கவை ஆகுமோ என வருந்தியுரைத்தது இது.

கதிரொடு தோன்றிய கண்மொழி வாழ்க
மதிகொடு நூல்கள் மலிந்து. *127*

(பொ) கதிரோன் தோன்றிய நாளில் தோன்றியதும், கண் போன்றதும் ஆகிய தமிழ்மொழி, அறிவால் சிறந்தோங்கும் நூல்கள் எண்ணற்றவற்றைக் கொண்டு என்றும் வாழ்வதாக.

(வி) மொழிவாழ்த்தென அமைந்தது இது. 'கதிரொடு தோன்றிய'

என்றது, தொல்பழமை என்றது. 'கண்மொழி' என்றது நேயம் பற்றியது. 'மதிகொடு நூல்கள் மலிந்து' என்றது புதுமை நலம் கருதியது.

மலிவு விலைவைத்து மக்களார் வாங்கப்
பொலிவுப் பதிப்புகள் போடு. *128*

(பொ) பதிப்பாளனே, தமிழ்க்கு வளமாக அமைந்த நூல்களையெல்லாம் மக்கள் அனைவரும் வாங்கிப் பயன் கொள்ளும் வகையில் மலிவு விலைப் பதிப்பாகவும், அதேபொழுதில் அழகிய பதிப்பாகவும் போடுவாயாக.

(வி) நூல் வெளியீட்டார்களை நோக்கிக் கட்டளை இட்டது இது. எழுவாய் வருவிக்கப்பட்டது. மலிவு விலை மட்டும் போதாது; விரும்பிப் படிக்கும் வகையில் பொலிவாகவும் வேண்டும் என்றார். தமிழ்ப் பரப்பலின் தணியா ஆர்வ வெளிப்பாடு இது.

போடுவோம் சத்தூண்; புகட்டுவோம் செந்தமிழ்;
சாடுவோம் அன்மொழிச் சத்து. *129*

(பொ) பயில வருவார்க்குச் சத்துணவு வழங்குவோம்; செந்தமிழ் வழியாகவே எல்லாப் பாடங்களையும் கற்பிப்போம்; அயன்மொழிக் கல்வியே ஊட்டமாம் என்பதை ஒழிப்போம்.

(வி) 'உடலுக்குச் சத்தூண்; உயிருக்குச் செந்தமிழ்' என்றது இது. அயன்மொழிக் கல்வியே ஊட்டம் என்பாரின் கருத்தை ஓட்டமெடுக்கச் செய்தல் என்பது, தமிழ்க் கல்வியால் எல்லாக் கலைகளையம் தரமுடியும் என்று நிலைநாட்ட வேண்டும் என்ற குறிப்பினது.

சத்திற் சிறந்த தமிழ்மொழி எட்டோடு
பத்திற் பிறந்தபெரும் பாட்டு. *130*

(பொ) ஊட்டத்தில் சிறந்தது தமிழ்மொழி என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வன பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்று சொல்லப்படும் பாட்டு நூல்கள் பதினெட்டுமாம்.

(வி) திருமுருகாற்றுப்படை முதலாக மலைபடுகடாம் இறுதியான பாட்டுகள் பத்துப்பாட்டு. நற்றிணை முதலாகப் புறநானூறு இறுதியான நூல்கள் எட்டும், எட்டுத்தொகை.

பாவகை எத்தனை பாசுரம் எத்தனை
காவியம் அத்தனை கல். *131*

(பொ) கல்வி ஆர்வலனே, பாவகை என எத்தனை உண்டோ அத்தனையும், பாசுரங்கள் என எத்தனை உண்டோ

அத்தனையும், காவியம் என எத்தனை உண்டோ அத்தனையும் கற்பாயாக.

(வி) பாவகை - பாடல் நூல்கள்; பாசுரம் - இசையொடு கூடிய இறைப்பாடல்கள்; காவியம், பெருநூல்கள். 'கல்' என்றதற்கேற்ப விளி வருவிக்கப்பட்டது.

கல்லாப் பிறப்பே கடிவிரைவிற் கல்வியில்
எல்லாம் தமிழாம் இரு. *132*

(பொ) கற்றும் கல்லார் என்ற நிலையில் இருக்கும் அயன்மொழி வழிக் கல்விப் பிறப்பே, மிக விரைவாகக் கல்வித் துறைகள் எல்லாமும் தமிழ்வழியாகிவிடும்; அதுகால் இடரில்லை என்று அமைந்து இருப்பாயாக.

(வி) கற்றாலும் கல்வித் திறம் இல்லாரை நோக்கி வருங்கால நிலை சொல்லி நம்பிக்கை ஊட்டியது இது. பல்லாண்டுகள் ஆங்கில வழியில் கற்றும் தாமே பேசவும் எழுதவும் இயலாரை நோக்கின் அவர் கல்லாமை புலப்படும். தாய்மொழி எனின் வரும்போதே பேச்சுடன் வருவதன்றோ!

இருமொழிக் கொள்கை எதற்கோ தமிழில்
ஒருமொழிக் கொள்கை உறும். *133*

(பொ) தமிழ்நாட்டு அரசு கொண்டுள்ள இருமொழிக் கொள்கை என்பது எதற்காகவோ? தமிழில் பயிலும் ஒருமொழிக் கொள்கையே போதியதாகும்.

(வி) ஆங்கிலம், தமிழ் என்னும் இருமொழிக் கொள்கையைக் கொண்டுள்ள தமிழ்நாட்டு அரசின் மொழிக்கொள்கைத் தவற்றை உரைத்தது இது. இருமொழிக் கொள்கை என்பது தமிழை ஒழித்து ஆங்கிலக் கல்வியாகவே மாறிவிட்டதல்லவோ? ஒருமொழி போதுமோ என்பார்க்கு வருவது விடை.

கொள்கை தமிழாகக் கொண்டபின் பன்மொழி
எள்கை இலதே எனக்கு. *134*

(பொ) தமிழ் மொழியே பயிற்றுமொழி என்னும் கொள்கையை அரசு கொண்டுவிட்டதெனின், பலமொழிகள் எதற்கோ என்று இகழ்தல் எனக்கு இல்லையாம்.

(வி) பயிற்றுமொழி தமிழாகிவிட்டால் விரும்புவோரும் ஆற்றலுடையோரும் எத்தனை மொழிகள் வேண்டுமெனினும் பயிலட்டுமே! அதனை யாம் தடுப்பது இல்லையே என விளக்கம் தந்தது இது.

என்னவர் பன்மொழிக் கென்றும் இசைகுவர்
பின்னல் தமிழுக்குப் பின். *135*

(பொ) வழிவழியாகப் பின்னிவரும் தமிழ்மொழிக்குப் பின்னே எத்தனை மொழிகள் என்றாலும் என் தமிழர் விரும்பி ஏற்றுக் கற்பதற்கு எப்பொழுதும் ஒப்புவர் என்பது உறுதியாம்.

(வி) தமிழர் அறவே அயல்மொழி கற்கவிரும்பிலரோ என்பார்க்கு ஐயம் அகற்றிய உறுதிமொழி இது. 'என்னவர்' என்றது உரிமைச் சிறப்பு.

பின்னாகச் சின்மொழி பேணுக; அஃதின்றேல்
முன்னேற மாட்டோம் முயன்று. *136*

(பொ) தமிழ்வழி என்னவரே, தமிழை நன்றாகக் கற்று அதன்பின்னர் வேண்டும் சில மொழிகளையும் கற்றுக் கொள்வீர்களாக. அதனை நாம் செய்யாவிடின் உலக வளங்களெல்லாம் பெற்று நாம் முன்னேறுதல் அரிதாகும்.

(வி) பன்மொழி கற்றல் பயனும், அவற்றைக் கற்க வேண்டும் நிலையும் உரைத்தது இது. தமிழ்வழி 'என்னவரே' என்ற விளி (135) இங்குக் கூட்டப்பட்டது.

முயற்சிக் கெதிரன்று முத்தமிழ்; ஞால
உயர்ச்சிக்குப் பாரதி உண்டு. *137*

(பொ) முன்னேற்றம் கொள்வதற்குரிய முயற்சிக்கு முத்தமிழ் என்றும் எதிரிடையாக இருப்பது அன்று; அது உலகளாவிய புகழுக்கும் இடமாக்கும் என்பதைக் காட்டுவதற்குப் பாரதி என்னும் சான்றும் உண்டு.

(வி) தமிழோடு பிறமொழிகளும் கற்று, பிறமொழியாரும் போற்றும் கொள்கையர் ஆகலானும், தமிழ்வழிக் கல்வியே கல்வி என முழங்கினவர் ஆகலானும் பாரதியைச் சுட்டிக் காட்டினார்.

உண்டு தமிழ்த்திறம் ஊர்புகழ் கால்டுவேல்
தொண்டு விளைத்த துணிபு. *138*

(பொ) தமிழ்மொழிக்கு 'உயர்தனிச் செம்மொழி' என்னும் ஒப்பற்ற திறம் உண்டு; அது, உயர்ந்தோங்கு புகழாள்ராகிய கால்டுவெல் பெருமகனார் (கால்டுவேல்) தொண்டால் உண்டாகிய ஒப்பிலக்கணத் துணிபால் உண்டாகியதாகும்.

(வி) தமிழ் 'உயர்தனிச் செம்மொழி' என்பதை உலகமறிய முதற்கண் சான்றுடன் நிலைநாட்டியவர் கால்டுவேல் ஆகலின் அவரைச் சுட்டினார்.

துணிந்த பெருந்தலைவன் சொற்றமிழ் ஒன்றால்
திணிந்த புகழ்பெற்றான் தெம்பு. *139*

(பொ) அரசியலில் துணிவுடன் விளங்கிய பெருந்தலைவன் (காமராசர்) தான் பேசி யறிந்த தமிழ் ஒன்றாலேயே பிறர்க்கில்லாத பெரும்புகழ் பெற்று விளங்கினான். இது தமிழின் ஆற்றலேயாம்.

(வி) சொற்றமிழ் என்றது பள்ளியில் பலகாலம் பயிலாமல் பேசியே வளர்த்துக் கொண்ட தமிழ் என்பதாம். தாய் சொல்லித் தந்த தமிழுமாம். தெம்பு, வலிமை, ஆற்றல், திடம் என்பன ஒரு பொருள் சொற்கள்.

தெம்மாங்கு பாடும் சிறுநகையீர் எஞ்செவிநும்
கும்மாளம் கேட்கும் குதித்து. *140*

(பொ) காட்டிலும் கரையிலும் தெம்மாங்கு பாடித் திரியும் இளைய இனிய செல்வங்களே, தமிழ்வழிக் கல்வி உண்டாகிவிட்டால் அங்கே எம் காதுகள் நீங்கள் கலகலப்பாகப் படிக்கும் பாடங்களைக் கேட்டு மகிழும்.

(வி) சிறுநகையீர் என்றது விளையாட்டுப் பிள்ளைகளை; கும்மாளம் கேட்கும் என்றது களிப்புடன் பாடம் படிப்பதை; எம் செவி குதித்துக் கேட்கும் என்க. குதித்து - விரும்பி.

குதிக்கும் குரக்கினம் கூடிப்பின் ஊடிப்
புதுக்கும் அகத்திணைப் போர். *141*

(பொ) தமிழ் அகப்பொருள் எத்தகு இயற்கை நெறியது! கிளைக்குக் கிளை தாவித்திரியும் குரங்கினமும் கூடி மகிழ்தலும் பின்னர் ஊடி நின்று அகப்பொருள் இன்பப் போரைப் பெருக்கிக் கொள்ளுதலும் எத்தகு இயற்கையானது.

(வி) அகத்திணைச் சிறப்பினை அஃறிணை வழியே உரைத்தது இது. ''ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம், கூடி முயங்கப் பெறின்'' (1330) என்னும் திருக்குறள் அறிக.

போர்த்தும்பை கண்ட புகழ்மறவர் தாய்மொழியின்
தேர்த்தும்பை விட்டார் சிறுத்து. *142*

(பொ) தம் வீரத் திறமை காட்டுவதே பொருளாகப் போரிட்ட தும்பை மறவரும், தம் நிலை தாழ்ந்து போனமையின், தாய்மொழி காக்கும் தேர்வடத்தைப் பற்றாமல் விட்டுவிட்டார்.

(வி) பழிச்சொல்லை நீக்கித் தம் புகழை நாட்டுவதற்காகப்

போரிடுவதே தும்பைப் போராகும். அத்தகு வீரரும், தாய்மொழிக்கு உண்டாகிய பழியைத் தீர்த்திலரே என்று இரங்கியது இது.

சிறுமை பலவிழைத்துச் செய்தமிழை விட்டான்
மதிமை புரியா மகன். *143*

(பொ) அயலார் சூழ்ச்சித் திறத்தை அறிந்து கொள்ளாத தமிழ் மடவன், வேண்டாச் சிறுமைகள் பலவும் செய்து, சிறந்த தமிழைக் கெடுத்துவிட்டான்.

(வி) 'தமிழைக் கெடுத்த பாவிகள் தமிழரேயன்றிப் பிறர் அல்லர்' என்னும் மறைமலையடிகளார் மணிமொழி இவண் எண்ணத்தக்கது; மதிமை புரியாமை - அயலார் செய்த சூழ்ச்சி தெரியாமை.

மகனாக வாழ்க வளர்தமிழ்க் கன்னிக்கு
எமனாக வாழல் இழிவு. *144*

(பொ) பெற்ற தாயைப் போற்றிக் காக்கும் மகனைப் போல, உயர்ந்த கன்னித் தமிழ்க்கு மகனாக வாழ்வாயாக! அவளுக்கு எமனாக வாழ்தல் இழிவாகும்.

(வி) 'தமிழ் காக்கும் நன்மகனாக வாழ்க! அதனைக் கெடுக்கும் எமனாக வாழாதே' என்று கட்டளை இட்டது இது.

இழிவை இனியேனும் செய்யற்க; செய்யின்
அழிவை இனத்தொடும் அட்டு. *145*

(பொ) தமிழ் மகனே, இதுவரை செய்துவந்த இழிவை இனிமேலும் தொடர்ந்து செய்யாதே; தொடர்ந்து செய்தால் இனத்தை முழுமையாக அழித்து நீயும் அழிவாய்.

(வி) அழிவை என்றது 'அழிவாய்' என்னும் பொருளது; அட்டு - அழித்து. குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பு ஆகாதே என்றது இது.

அட்டுண்க சுற்றம்; அமர்ந்துண்க இல்லவர்;
இட்டுண்க சங்க இயல். *146*

(பொ) தமிழ் மக்களே, நீங்கள் சமைத்துச் சுற்றத்தோடும் உண்பீராக; இல்லத்தார் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்பீராக; சங்ககால இயல்புப்படி வறியர்க்கும் வழிஞர்க்கும் இட்டு உண்பீராக.

(வி) அடுதல் - சமைத்தல். குடும்ப வாழ்வு சிறந்து சுற்றம் தழுவி ஒப்புரவு விளங்க உரைத்த நலச் செய்தி இது.

இயல்பாக இல்லற இன்பம் விழைவார்
பயில்வாராம் சங்கப் படிப்பு. *147*

(பொ) இல்லற இன்பத்தைச் சீரான வகையில் அடைய விரும்புவார் சங்க நூல்களைப் படித்தலில் இடைவிடாமல் ஈடுபடுபவர் ஆவர்.

(வி) அகப்பொருள் புறப்பொருளாம் இருவகைப் பொருளியல் வாழ்வும் செவ்விய படக்காட்சியெனத் திகழ்வது சங்க நூல்களில் ஆகலின், 'விழைவார் பயில்வாராம்' என்றார். இதன் விரிவு ஆசிரியர் இயற்றிய 'தமிழ்க் காதல்' என்னும் நூலால் விளங்கும்.

படிக்க முடிந்தளவு பார்க்க; அவற்றுள்
படிக்க சிலசங்கப் பாட்டு. *148*

(பொ) நூல்களின் பரப்பைப் பார்த்துத் திகையாமல் முடிந்த அளவில் படிக்க முயல்க; அப்படிப்பில் சங்கப் பாடல்கள் சிலவும் தவறாமல் படிக்க.

(வி) முடிந்த அளவு என்றது, ''கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'' என்று திகைப்பார்க்குத் தேறுதல் உரைத்தது.

பாட்டைப் புணர்த்துப் படித்தால் கவிஞனின்
ஓட்டம் படியும் உளத்து. *149*

(பொ) பாடல்களைச் சந்தி பிரியாமல் சேர்த்துப் படிக்கும்போதுதான் பாவலனின் கருத்தோட்டமும் இசையோட்டமும் படிப்பாரின் உள்ளத்துப் படிந்து உவப்பாக்கும்.

(வி) பாடல் படிக்கும் வகை உரைத்தது இது. புணர்த்து - சேர்த்து. உள்ளத்து உள்ளதும் உண்மை உருவெடுப்பதும் பாடல் ஆகலின் அதன் ஓட்டத்திலேயே பொருள் புலப்பட்டு விடும் என்பது கருதுக.

உளத்துப் பதிக்கும் உயர்தொடைகள் கொண்டு
களத்து வருபொருளைக் காண். *150*

(பொ) மனத்துப் பதித்துக் கொண்ட உயர்ந்த பாடல்களைக் கொண்டு வாழ்வியல் களத்தில் வரும் காட்சிகளை ஒப்பிட்டுக் கண்டு அவற்றின் அருமை அறிவாயாக.

(வி) நூல்நெறி வழக்கு, உலகியல் வழக்கொடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டால்தான் உரிய உண்மைகள் விளங்கும் என ஆய்வு நெறி காட்டியது இது.

காணல் அரிதன்று காசற நூல்சில;
பேணல் திருப்புதல் பெட்பு. *151*

(பொ) குற்றமற்ற வகையில் நூல்கள் சிலவற்றைக் கற்றல் அரிதன்று;

அந்நூல்களைப் பேணிக் காத்தலும், மீள மீளப் படித்தலும் விரும்பத் தக்கதாகும்.

(வி) நவில்தொறும் நூல் நயம் விளங்கும் ஆகலின் பல்கால் பயிலலும் பலர்க்கும் எடுத்துச் சொல்லலும் குறிக்கும் வகையால் திருப்புதல் என்றார். பெட்பு - விரும்பத்தக்கது.

பெட்டகம் காக்கும் பெருவணிகீர் செந்தமிழ்
ஒட்டகம் காப்பீர் உருத்து. *152*

(பொ) பெரும் பெரும் வணிகர்களே! நீங்கள் உங்கள் பணப்பெட்டிகளைக் கருத்தாகக் காக்கின்றீர்! காக்கத் தக்கதே; அதனுடன் செந்தமிழ் அன்னையின் ஒட்டிப்போன வயிறொன்றும் உண்டே! அதனையும் முயன்று காப்பீராக.

(வி) ஒட்டு அகம் - ஒட்டிப்போன வயிறு; என்றது தமிழ் வளர்ச்சி, தமிழ்க் காவல் ஆகியவற்றையும் கருதுக என்றார்.

உருத்துவந் தூட்டும் உயிர்ச்சிலம்பு கூறும்
கருத்துவந்து கொள்வீர் கடிது. *153*

(பொ) எச்செயலையும் நாளைக்கு என்று தள்ளிப்போடாதீர். உயிர்த்துடிப்பு மிக்க சிலப்பதிகாரம் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்று கூறும் கருத்தினை உடனே விரும்பிக் கடைப்பிடிப்பீராக.

(வி) உருத்துவந்து - தேடிவந்து; கருத்துவந்து - கருத்து உவந்து; கடிது - விரைந்து. உணர்வுமிக்க சிலம்பு, உயிர்ச்சிலம்பு. "நாளை என்பது வேளை தவறும்". "நாளை என்பது நம்முடை நாளன்று நமனுடைநாள்" என்பவை பழமொழிகள்.

கடியும் மொழியன்று காப்பியக் கம்பன்
அடியும் முடியும் அது. *154*

(பொ) நம் தாய்மொழி மற்றை மொழிகள் போல் ஒதுக்கிவிடத்தக்க மொழியில்லை; காக்கத்தக்க இனியமொழியாம்; அதுவே இராமகாவியக் கம்பன் படைப்பின் முதலும் முடிவுமாம்.

(வி) கம்பனின் தமிழ்க் காதலும் தமிழ்மண் காதலும் மொழிமரபு காத்தலும் கருதி உரைத்தது இது.

அதுவன்றோ போப்பையர் ஆயுள் அறைமேல்
இதுமகன் என்ற எழுத்து. *155*

(பொ) தமிழ்க் காதல் என்பது ஒன்று அன்றோ, போப்பையர் தம் கல்லறை மேல் 'தாழ்மையுள்ள தமிழ்மாணவன்' என்று எழுதுமாறு செய்த பெருமையது ஆகும்.

(வி) ஆயுள் அறை - கல்லறை; வாழ்வுச் சின்னமாய் அமைந்த

மொழி பொறித்த அறை ஆகலின், கல்லறை என்னாமல் 'ஆயுள் அறை' என்றார்.

எழுத்துத் திருத்தம் இயல்போ தமிழைக்
கழித்துச் சுழிக்கும் கதை. *156*

(பொ) தமிழுக்கு எழுத்துத் திருத்தமும் சுருக்கமும் வேண்டும் என்பது அதன் இயல்போடு பொருந்தாது; அது, அதன் இயல்பைக் கெடுத்து அழிக்கும் கற்பனைத் திட்டத்தின் வழிப்பட்டதாகும்.

(வி) எழுத்துத் திருத்தம் கூடாது என்னும் கொள்கை உறுதியில் நின்றவர் நூலாசிரியர் என்பதும், அதற்கெனப் போராட்டம் நடத்தி வென்றவர் என்பதும் எண்ணத்தக்கன.

கதைநீள வேண்டாகாண் காத்தவை மீண்டும்
புதையாழ லாமோ பொறு. *157*

(பொ) கதையை வளர்த்துவானேன்? இதுகாறும் காக்கப்பட்ட எழுத்தின் வரி வடிவத்தையும் அவ்வடிவ நூலையும் மீளவும் புதைகுழிக்குப் போய்விடுமாறு ஆக்கி விடலாமோ? வரிவடிவ மாற்றியே, உன் செயலை விட்டுப் பொறுத்திருப்பாயாக.

(வி) முந்தைப் பாடலும் இதுவும் கருத்தாலும் தொடர்புடையவை. ''காப்பது அரிது; அழிப்பது எளிது; அழித்தல் வேண்டா; அமைக'' என்று அறிவுறுத்தது இது.

பொறுத்தனம் சிற்றாணை போக்கறியா வன்பை
மறுத்தனம் மற்றென் செய. *158*

(பொ) பொறுத்துப் பார்த்தோம்; சின்னதோர் ஆணைதானும் பிறப்பித்தலைக் கொள்ளாத கொடுமையை மறுத்தும் பார்த்தோம்; இனி என் செய்வது?

(வி) பல்கால் தூண்டியும் மறுத்தும் பேசிய பின்னே வடிவமாற்றம் இல்லை என அரசின் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இப்பாடல் ஆணை பிறப்பிக்கப்படுமுன் பாடப்பட்டது என்பதை விளக்குகின்றது.

செயற்குரிமை யாதெனின் செந்தமிழை யாண்டும்
கலைக்குரிமை யாக்கல் கடன். *159*

(பொ) தமிழ்ப் பிறப்பாயினார் அனைவரும் செய்தற்குரிய கடமை எதுவென்றால், செந்தமிழை எந்நிலையிலும் எல்லாக் கலைகளுக்கும் உரிமை உடையதாகச் செய்தல் ஆகும்.

(வி) அறிவியல் முதலாம் கலைவளம் தமிழில் இல்லை என்பார் வாயை மூடும் அளவுக்குக் கலைவளம் ஆக்குக என்றார்.

கடனுரிமை யாதெனின் கல்வி முழுதும்
உடனுரிமை எந்தமிழ்க்கே உண்டு. *160*

(பொ) தமிழ்க்குச் செய்யவேண்டும் கடமையும் அது பெற வேண்டும் உரிமையும் எது வென்றால், எல்லாக் கல்விகளையும் தொடக்கம் முதல் முடிவுவரை முழுமையாக இப்பொழுதிருந்தே கற்பிக்கும் உரிமை எம் தாய்த்தமிழுக்கே உண்டு என்பதேயாம்.

(வி) கடன் உரிமை - கடமையும் உரிமையும்; உடன் - இப்பொழுதிருந்தே. அவ்வுரிமையை மறுப்பதும் காலம் தாழ்த்துவதும் அடாச் செயல்கள் என்பதாம்.

உண்டென நம்பினால் ஓலையை நம்பற்க
குண்டெனச் செய்க கொதித்து. *161*

(பொ) தமிழுக்கே எல்லாக் கல்விகளையும் முழுதுறத் தரும் உரிமை உண்டு என்று நம்பிக்கை கொண்டால், ஆணை இட்ட அளவில் முடிந்ததென் நம்புதல் விடுக; துமிக்கி (துப்பாக்கி)யில் இருந்து குறிநோக்கி வெடித்துச் செல்லும் குண்டைப் போல் உணர்ச்சியுடன் செயலாற்றுக.

(வி) ஓலை - ஆணை; திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகம் என்னும் பழமையை நினைவூட்டும் வழக்கு இது. ஆணையிடல் மட்டும் போதாது; நடைப்படுத்தல் வேண்டும் என்றது இது.

கொதிப்பற்ற ஆட்சியின் கொள்கை படைகள்
பொறுப்பற்றுச் செய்கின்ற போர். *162*

(பொ) பொறுப்புணர்வு இல்லாமல் நிகழும் அரசின் கொள்கைகள் என்ன ஆகும்? தலைவன் ஆணையை மதியாமல் செயலாற்றும் போர்வீரர்கள் செய்யும் அழிகேடுகள் போலவே ஆகும்.

(வி) தலைவன் ஆணையை மதியாப் படையும், அலுவலரும் ஒத்த கேடரே என்றது இது. ''படைக்காலச் சட்டமெனக் கடனாற்றல் வேண்டும்'' என்பதை நினைவு கூர்க.

போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத்
தேரோட்டம் இல்லை தெளிவு. *163*

(பொ) எல்லா வகைகளாலும் ஒப்பற்று விளங்கும் தமிழின் வாழ்வுக்காகப் போராடுதல் இல்லாமல் அதன் சிறப்புகள் நிலைபெறப் போவதில்லை என்பது தெளிவாகும்.

(வி) தேரோட்டம் என்றது நாடறிந்த சிறப்பு; இது ''சிறப்பொடு பூசனை செல்லாது'' என்னும் திருக்குறள் நடையது.

**தெளிந்த ஒலியனும் சேரடிச் சொல்லும்
நெளிந்த தொடரும் நிலை.** *164*

(பொ) தெளிவான ஒலிநிலை, தொகுதி தொகுதியாக விரியும் அடிச்சொல் (வேர்ச் சொல்), வளைய வளையப் பொருள் தழுவி வரும் சொற்றொடர் என்பவை தமிழின் நிலைபெற்ற பேறுகள் ஆகும்.

(வி) ஒலியன் - புத்தாக்கச் சொல்; அடிச்சொல் - வேர்ச்சொல்; ''எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே'' என்னும் தொல்காப்பியக் குறிப்பு வழியது நெளிந்த தொடர்.

**நிலைபெற்ற செம்மொழி நீளாள வேண்டின்
விலைபெற்ற நூல்கள் விளை.** *165*

(பொ) தமிழ்த் தோன்றலே, உலகந்தோன்றிய நாள் தொட்டு, இதுவரை நிலைபெற்று விளங்கும் செந்தமிழ் மொழி, மேலும் நெடுங்காலம் சிறந்து விளங்க வேண்டும் எனின், மதிப்பு மிக்க நூல்களை மிகுதியாக இயற்றுவாயாக.

(வி) 'விளை' என்னும் கட்டளை கருதி விளி அமைக்கப் பெற்றதாம். என்றும் நிலை மொழியாய்த் திகழ இன்று செய்யத்தக்கது இது என்றது.

**விளைநெறித் திட்டம் விளக்கப் பகட்டுக்
களைநெறி யெல்லாம் களை.** *166*

(பொ) படைப்பாளனே, என்றும் பயன் விளைவிக்கும் இத்திட்டம் சிறந்து விளங்குவதற்கு, மாறாகப் பளிச்சுக்காட்டும் மொழிநலம் அழிக்கும் வழிகளையெல்லாம் அழிப்பாயாக.

(வி) விளைவு காண விரும்புவார் களையைப் பறிப்பது போல, நீ மொழிக்குக் களையாக அமையும் வழிகளைப் பேணாதே என்றது இது.

**களைக அயலொலி; காண்க தமிழ்ச்சொல்;
அளைக பொருள்வளம் ஆர்ந்து.** *167*

(பொ) தமிழின் இயற்கை ஒலிக்கு மாறான அயலொலி சேராமல் அகற்றுவாயாக; அதுபோல் அயற் சொற்களுக் கெல்லாம் உரிய தமிழ்ச் சொற்களைக் காண்பாயாக; அறிவியல் பொருளியல் கலையியல் முதலாம் பொருள்வளம் அமைய வெண்ணெய்த் திரட்டெனத் திரட்டித் தருவாயாக.

(வி) காப்பும் வளர்ப்பும் கருதி உரைத்தது இது. அளை- வெண்ணெய். அளைக - திரட்டித்தருக.

யார்யார் எழுதினும் யாவையும் நம்மொழி
பேராரக் கொள்ளுதல் பேறு. *168*

(பொ) எவரெவர் நூல்கள் எழுதினாலும் அவையெல்லாம் நம்மொழியின் பெருமை விளங்கச் செய்வனவாய் அமைத்துக் கொள்ளுதலே படைப்புக்கும் படைப்பாளிக்கும் நற்பேறு ஆகும்.

(வி) பேர் ஆர - பெருமை அமைய: ''மொழிநலம் கருதிய எழுத்தே எழுத்து'' என்றது இது.

பேறு பெரிதாயின் பிஞ்சுத் தமிழ்க்குழவி
வேறு மொழிகற்கை வீண். *169*

(பொ) எல்லாக் கலைகளுக்கும் உரிய நூல்களைப் பெறும் பேறு பெரிதாகி விட்டால் தமிழ்க் குழந்தைகள் மழலைப் பருவந் தொடங்கி வேற்று மொழி கற்பது வீண் செயல் என்பது விளக்கமாகிவிடும்.

(வி) பேறு என்பது 168 ஆம் பாட்டில் கண்ட நூல்வளப் பேறு; பிஞ்சு - இளம் பருவம்; கற்கை - கற்றல்.

வீணாகக் காலத்தை வேற்று மொழியுணல்
பூணோ அறிவோ புகல். *170*

(பொ) வேண்டாவகையில், அயல்மொழிக் கல்வி நம் காலத்தை அழித்துக் கொண்டிருத்தல் நமக்கு அழகோ, அறிவுதானோ? சொல்வாயாக.

(வி) காலத்தை உணல் என இயைக்க; காலத்தை அழித்தல், உண்ணல் என இலக்கணை வழியால் கூறப்பட்டது. ஓகாரம் எதிர்மறை; அழகும் அன்று; அறிவும் அன்று என்பதாம்.

புகலிடம் செந்தமிழே போயடகு வைத்தால்
நகலிடம் வாரா நகை. *171*

(பொ) நமக்குப் பாதுகாப்பாம் இடம் செந்தமிழே ஆகும். அதனையே நாம் அடைவு வைத்துவிட்டால் நகைப்புக்கே இடமாகிவிடும்; அடைவில் வைத்த அந்நகை (அணிகலம்) யேனும் திரும்பி வருமா? வராது.

(வி) மீளா அடைவில் தமிழை வைத்தல் வேண்டா என்றது இது. அடைவு, 'அடகு' ஆயது நடைமுறை வழக்குப் பற்றியது. அடைக்கலத்தையே அடைவு போடலாமா என்னும் குறிப்பு உணர்க.

நகைமுன் அழுகை நயன்பாடு கூறும்
வகைமுதல் நூலை வழுத்து. *172*

(பொ) நகையை முதலாக வைத்து அழுகையை அதன்பின்னாகக் கொண்டு நயமாக மெய்ப்பாடு கூறும் சிறந்த முதல் நூலாகத் திகழும் தொல்காப்பியத் திறத்தை வாழ்த்திப் பயன்கொள்வாயாக.

(வி) ''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் வெகுளி பெருமிதம் உவகையென்
றப்பால் எட்டே மெய்ப்பா டென்ப'' என்பது தொல்காப்பிய மெய்ப்பாட்டியல்.

வழுத்தும் வகையென்கொல் வாழ்வியல் நூலை
முழுத்தும் படித்தல் முறை. *173*

(பொ) வாழ்வியல் விளக்கமாக விளங்கும் திருக்குறளை வாயார வாழ்த்துவதால் என்ன பயன்? அதனை முழுமையாகப் படித்துணர்தலே முறையாகும்.

(வி) முழுத்தும் - முழுவதும். 'வாழ்வியல் நூல்' என்பது திருக்குறள். ''திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்'' என்பது மு.வ.வின் நூல். அவ்வவர்க்கு வேண்டும் பகுதியைப் படித்தால் போதும் எனத் திருக்குறள் கற்பார்க்கு, 'அது முறையன்று' என முறை காட்டியது இது. இதன் விரிவு வள்ளுவத்தில் உண்டு.

முறையொடு கற்பின் முதற்பழ நூலால்
நிறையொடு நேர்படும் நெஞ்சு. *174*

(பொ) தொல்காப்பியம் நம் கையில் கிடைத்துள்ள முதன்மையான பழைய நூலாகும்; அதனை முறையாகக் கற்றால், நெஞ்சத் திண்மையும் நேர்மையும் உண்டாம்.

(வி) நிறையாவது திண்மை; நேர் - நேர்மை; செம்மை. ''நெஞ்சுவழிப் பட்டதே வாழ்வு'' ஆகலின், அதனைச் சுட்டினார்.

நெஞ்சப் புணர்ச்சி நிலைக்குடி யாக்குமால்
வஞ்சப் புணர்ச்சி வடு. *175*

(பொ) நிலைபெற்ற நற்குடி வழியினர் என்பதை நிலைப்படுத்திக் காட்டுவது நெஞ்சோடு நெஞ்சம் கலந்த உரிமை அன்பாகும். நெஞ்சில் வஞ்சம் கொண்ட தொடர்பு குடிப்பிறப்புக்கு மாறாப் பழியுடையதாகும்.

(வி) புணர்ச்சி என்பது நட்பு, காதல் என்னும் இரண்டற்கும் பொது.

இதனை 177-இல் கண்டு கொள்க; வடு என்பது தழும்பு ஆதலால் மாறாப் பழி எனப்பட்டது.

வடுச்சிறிது வேண்டாத வாய்மைபோல் வஞ்சம்
கடுச்சிறிது வேண்டாதாம் கற்பு. *176*

(பொ) வாய்மை என்று சொல்லப்படுவது குற்றம் சிறிதளவு கூடத் தன்னிடத்து இல்லாததாகும். அதுபோல், கரவு என்பது கடுகின் அளவுகூட இல்லாததே கற்புடைமையாகும்.

(வி) வாய்மையும் கற்பும் ஒப்பெனக் காட்டியது இது. 'புரைதீர்ந்த நன்மை' செய்வதே வாய்மை ஆகலின், 'வடுச்சிறிது வேண்டாத வாய்மை' என்றார். கடுகளவு சிறிது 'கடுச்சிறிது' எனப்பட்டது. கரவுடையது கற்பாகாது என்பதாம்.

கற்புடைமை யாதெனின் காதலர் தம்முள்ளம்
நிற்புடைமை நட்புடைமை நேர். *177*

(பொ) கற்புடைமை என்று சொல்லப்படுவது எது என்றால், காதலன் காதலி இருவர் உள்ளங்களும் திண்மையாக நிற்கும் நிலைமை. இது உயர்ந்த உயிர்நட்புக்கு ஒப்பானதாகும்.

(வி) நிற்புடைமை, கற்புடைமைக்கும் நட்புடைமைக்கும் ஒப்புடைமை என்றது இது. நேர் - நிகர்; ஒப்பு.

நேர்மாறா நிற்பினும் நெஞ்சத் தறிவுடையார்
பேர்மாறார் இல்லறப் பெட்பு. *178*

(பொ) காதலன் காதலியர் அல்லது கணவன் மனைவியர் நேர்மாறாக நின்றாலும் ஒருவர்க்காக ஒருவர் என்னும் நெஞ்சறிவு உடையவராக இருப்பின், இல்வாழ்வுக் கடைப்பிடியில் தம் பெருமை நிலையை மாற்றிக் கொள்ள மாட்டார்.

(வி) மணந்து கொண்டபின் நேர்மாறான இயல்புகள் இருக்கக் காணினும் அதனால் இல்லறக் கடமை புரிதலில் தவற மாட்டார் என்னும் அருமை உரைத்தது இது.

பெட்பறார் வீம்பிற் பெரும்பிணக்கு மிக்குறினும்
நட்பறார் மானம் நயந்து. *179*

(பொ) ஒருவருக்கு ஒருவர் ஏசலிப்புக் கொண்டு பெரிதளவு மனக்கசப்பு உடையவர் ஆயினும், குடும்ப நலம் பேணும் தன்மையை நீங்கார்; அவ்வாறே, குடும்பப் பெருமையை விரும்பித் தம் நட்பில் இருந்தும் நீங்கார்.

(வி) 178 ஆம் பாடலில் குறித்த கணவன் மனைவியர்க் குரியவை இவையெனத் தொடுத்துரைத்தது இது.

மானம் நயந்தார்க்கு மாண்புடை இல்லறம்
கானம் பயந்து விடும். *180*

(பொ) தன்மானமே குறியென விரும்பி நிற்பவர்க்குச் சிறப்புமிக்க இல்லற வாழ்வும், கொடிய விலங்குகள் வாழும் காட்டு வாழ்வையே காட்டுவதாகிவிடும்.

(வி) நயந்தார் - விரும்புவார்; கானம் - காடு; பயந்து விடும்- தந்துவிடும்; வேண்டாத மானம் இன்ப இல்லற வாழ்வைத் துன்பக்காடு ஆக்கிவிடும் என்றது இது. மேல்வருவது காண்க.

விடுக குடிமானம் விட்டதன் பின்பே
தொடுக திருமணத் துய்ப்பு. *181*

(பொ) தன் குடும்பத்துக்குள்ளாக மானம் கருதுகின்ற தன்மையை கட்டாயம் விட்டொழித்தல் வேண்டும்; அதற்குப் பின்னரே, திருமண இன்ப நுகர்வைத் தொடங்குதல் வேண்டும்.

(வி) தன்மானம் கருதிக் கூடுவார் கூட்டம் இரண்டற்ற கலப்பு அன்று ஆகலின் 'இருமன இழிமை' சேர்க்குமென நுணுகி நோக்கி உரைத்தது இது.

துய்க்கு நெறிகூறும் தொல்முதற் காப்பியம்
உய்க்கும் திணையை உணர். *182*

(பொ) தலைவன் தலைவியர் இன்பம் துய்க்கும் முறைமையை விரித்துக் கூறும் பழமையான தொல்காப்பியத்தின் அன்பின் ஐந்திணைகளை அறிந்து போற்றுவாயாக.

(வி) துய்க்கும் குறிஞ்சி ஒரு பாலாகவும், அத்துய்ப்புச் சிறப்புற முல்லை மருதம் நெய்தல் பாலை என்பன ஒரு பாலாகவும் கொண்டது உய்க்கும் நெறியாகும். கைக்கிளை, பெருந்திணை உய்க்கும் நெறியன்றாம்.

உணர்வீர் புதுப்பால் உயிர்கலந்து கற்பிற்
புணர்வீர் உடல்நலம் பூத்து. *183*

(பொ) தொல்காப்பிய ஐந்திணைப் பாலைப் பயின்றால் புதுமையான நல்ல பாலியல் ஈதே என்பதை உணர்வீர்; அம்மட்டோ? உயிரோடு உயிர் ஒன்றாகிய கற்பிற் கூடி உடல் நலமும் சிறந்து விளங்குவீர்.

(வி) இப்பாலியல் அல்லாத பிற பாலியல், உயிர் கலந்து ஒன்றாததும், உடல்நலம் ஆக்காததும் ஆம் என்றது இது.

பூத்து மணக்கும் பொழிற்சுனைகள் சென்றாடிக்
கூத்துக் களிப்பீர் குடைந்து. *184*

(பொ) புதுமணம் கொண்டிரும் வாழ்வின்பம் கருதுவீரும், பூமணம் பரவும் சோலையிடை அமைந்த நீரூற்றுச் சென்று வளைய வளைய வந்து நீராடியும் கூத்தாடியும் பாடியும் மகிழ்வீராக.

(வி) பொறிபுலன்களைக் கெடுக்கும் செயற்கையை ஒழித்து, இயற்கையை நாடிச் செல்லச் சொல்லியது இது. குடைதல்-நீரில் வளைந்தாடல்.

குடையின்பம் பேறன்று கூடுவார் உள்ளத்
தொடையின்பம் பேறென்னும் தொல். *185*

(பொ) சுனை நீருள் புகுந்து வளையமிட்டாடும் இன்பம் அப்பேறு மட்டுமன்று; கூடி ஆடுவார் உள்ளத்தைப் பிணைக்கும் இன்பப் பேறாகும் என்பது தொல்காப்பியம்.

(வி) தொடை இன்பம் - தொடுக்கும் இன்பம், புணர்வு விளையாட்டு என்பவை அல்லல் நீத்த உவகை என்பார் மெய்ப்பாட்டியலில் தொல்காப்பியர். தொல்-தொல்காப்பியம்.

தொல்லொளிக் காப்பியம் தொட்டும் அறியாதார்
பல்லொளி ஊமைப் பகட்டு. *186*

(பொ) தொன்மையான புகழ் வாய்ந்த தொல்காப்பியத்தைப் பார்த்தும் அறியாதவர் கொண்ட பல்வகை வாழ்க்கைப் பொலிவுகளும், பொருளற்றுத் தோன்றும் பகட்டுகளேயாம்.

(வி) ''கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும், கொள்ளார் அறிவுடை யார்'' (404) என்பது போல் தொல்காப்பியக்கல்வி இல்லார் வாழ்வு, உண்மைவிளக்க முடையதாகாது என்றார்.

பகட்டுக் கயலயற் பாடைகள் கற்கும்
உதட்டுக்கு மற்றென் உணவு. *187*

(பொ) போலிப் பெருமைக்காக வேறுவேறு மொழிகளைக் கற்றுத் தாய்த்தமிழ் கல்லாத வாய்க்குத் தமிழ்மண் தந்த உணவு மட்டும் எதற்காக வேண்டுமோ?

(வி) உதடு என்றது வாயைக் குறித்து நின்றது; உணவு என்றது

உடை, உறைவிடம், உறுபொருள் ஆகிய இனஞ்சுட்டும் குறிப்பினது.

உணவொரு கொள்கையா சிச்சீ! உடையின்
கணமொரு கொள்கையா காப்பு. *188*

(பொ) நல்வாழ்வின் காப்பாக இருப்பது உணவுக்கெனக் கொள்ளப்படும் கொள்கையா? உடையின் வகை எனக் கொள்ளப்படும் கொள்கையா? சீசீ! இவையெல்லாம் ஒப்பற்ற காவற்கொள்கைகளா? இல்லை.

(வி) எது காப்பு என்பதை அடுத்துவரும் குறள் கூறுகிறது (189). அக்காவல் இல்லாமல் இக்காவல்கள் என்னாம் என இடித்துக் கூறியது இது.

காப்புடைமை யாதெனின் கைக்குழவி யாவர்க்கும்
யாப்புடைமை செந்தமிழே யாம். *189.*

(பொ) காப்புடைமை எது என்றால், கைக்குழந்தையாக இருக்கும் எவர்க்கும் செந்தமிழ் எனப்படும் சிறப்புடைய காப்பினை அணிவதேயாம்.

(வி) கைக்குழந்தைக்குப் பூட்ட வேண்டிய இன்றியமையாத காப்பு தமிழ்க் காப்பே. அக்காப்பைப் பூட்டாமல் எக்காப்பைப் பூட்டினும் என்ன பயன் என்றது இது.

யாஞ்சொல் மொழிப்புரட்சி நன்கு செயற்படுத்தல்
தீஞ்சொல் தமிழுக்கோர் தேர்வு. *190*

(பொ) யாம் பெரிதும் பல்காலும் சொல்லிவருகின்ற மொழியாக்கக் கருத்துகளை நன்றாகச் செயற்படுத்துதலே, ‘இனிய சொல்லமைந்த தமிழ்க்குத் தொண்டு செய்வார் இவர்’ என்பதற்குரிய தேர்வுச் சான்றாகும்.

(வி) வாய்ச்சொல் வீரமோ, ஆணையிட்ட அளவில் அமையும் அவலமோ மொழித்தொண்டு ஆகாது என்றது இது.

தேர்தற் களத்திற் செழுந்தமிழ்க் கொள்கையால்
தோல்வி கிடைப்பினும் தொண்டு. *191*

(பொ) மக்களாட்சி முறையில் தேர்தல் போர்க்களத்தில் செழுந்தமிழ்க் கொள்கையால் தோல்வி அடைய மாட்டார்; அப்படி ஒருவேளை தோல்வி கிடைத்தால் கூட, அவர் செய்த தொண்டு பசுமையாக நின்று பின் வெற்றிகளைச் சேர்க்கும்.

(வி) கிடைப்பினும் என்பதில் உள்ள 'உம்'மை, கிடையாது என்ற குறிப்பினது. தமிழால் ஆட்சியைப் பற்றியதை அன்றி வீழ்ச்சியைத் தழுவிய வரலாறு இல்லையே!

தொண்டது திண்பட்டுத் தோலாத வாகையாம்
பண்டது காட்டும் படிப்பு. *192*

(பொ) தமிழ்த்தொண்டில் தலைப்பட்டு உறுதியாக நின்றால், என்றும் தோல்வி அறியாத வெற்றியே ஆகும்; இது, முன்னமே இங்கேயே நிகழக் கண்டுள்ள வரலாற்றுப் பாடமாகும்.

(வி) திண்படுதல் - உறுதியாதல்; வாகை - வெற்றி; பண்டு அது- முன்னே நிகழ்ந்த அது; படிப்பு - வரலாறு.

படிக்க துறையனைத்தும் பைந்தமிழ் மூலம்
முடிக்க அதுவே முறை. *193*

(பொ) கல்வி கலைத்துறைகள் எத்தனை உண்டோ அத்தனையும் வளமான தமிழ் மூலமே கற்றல் வேண்டும்; அதுபோல் அத்தமிழ் வழியாக எல்லா மேல்நிலைக் கல்வி கலைத் துறைகளையும் கற்று முடித்தலும் வேண்டும்.

(வி) தொடக்கக் கல்விக்கு மட்டும் தமிழ் இருந்தால் போதும் என்பார்க்கு, முடி நிலைக் கல்விக்கும் வேண்டும் என்று வலியுறுத்தியது இது.

முறைவைத்துச் சொல்லும் முதுநெறியே இன்றும்
நிறைவைத் தருஉம் நெறி. *194*

(பொ) படிக்கும் பாடத்தை மனப்பாடமாக்கி அதனை முறை முறையாக அனைவரும் ஒப்பிக்கும் பழைய கல்வி முறையே இந்நாளுக்கும் தக்க பயன் செய்யும் முறையாகும்.

(வி) திண்ணைப்பள்ளிக் கல்வி 'முறையோதுதல்' என்று வழங்கப்பட்டமை அறியத்தக்கது. நிலத்தில் எழுதிப் பழகிப் பின்னர் முறையோதுதல் வழக்கம் என்பதைக் கந்தபுராண அவையடக்கம் காட்டும்.

நெறியயல் போற்றுக போற்றுங்கால் மூட
வெறிமயல் வேண்டா விலக்கு. *195*

(பொ) அயல் நெறிகளை அறவே விலக்க வேண்டும் என்பது இல்லை; தக்கவை எனின் போற்றிக் கொள்க; அவ்வாறு போற்றும்போது மடமைக்கும் மூர்க்கத்திற்கும் மயக்கத்திற்கும் இடம் தருதல் வேண்டா; அவற்றை விலக்கித் தக்கவை கொள்க.

(வி) நன்னெறி என்றால் எந்நெறி எனினும் ஏற்றுக் கொள்க என்றது இது.

விலக்கற்க என்றும் வெளியார் அறிவைச்
செலக்கற்க ஆய்வு செறிந்து. *196*

(பொ) அயல்நாட்டார் அறிவு நலத்தைக் கொள்ளாமல் விலக்கிவிடுதல் எந்நாளும் ஆகாது; அவர் நூல்களை ஆராய்ந்து அழுத்தமாகப் பதியுமாறு கற்றுக் கொள்ளல் வேண்டும்.

(வி) நன்னெறியை ஏற்றுக் கொள்ளல் போல், நல்லறிவையும் ஏற்றுப் போற்ற உரைத்தது இது; வெளியார் - அயல்நாட்டார்; அயல்மொழியார்.

ஆய்வு வளங்கள் அகலநூல் ஒப்பீட்டுத்
தோய்வுப் பயில்வால் துறும். *197*

(பொ) பலப்பல விரிந்த நூல்களை ஒப்பிட்டு உள்ளம் ஒன்றிப் படித்தலால் ஆராய்ச்சி நலம் சிறப்பாக வந்து சேரும்.

(வி) தோய்தல் - உள்ளம் ஒன்றுதல்; ஒப்பிடுதல் - ஒப்பீடு; துறும் -திரண்டு அல்லது செறிந்து அமையும்.

துறுகல் எனக்கொண்டு துஞ்சும் களிற்றைக்
குறுகுமாம் மாணைக் கொடி. *198*

(பொ) உறங்குகின்ற யானையை உருண்டைக்கல் என்று அதன்மேல் சென்று படரும் மாணைக்கொடி; (உறக்கம் நீங்கி யானை எழுந்தால் அதன் படர்ந்த நிலை என்ன ஆகும்?)

(வி) ''துறுகல் அயலது மாணை மாக்கொடி துஞ்சுகளி றிவரும்'' என்பது குறுந்தொகை (36). பொய்த்தோற்றம் கண்டு கெட்டொழிதல் ஆகாது என்னும் குறிப்பினது இது. பிறிது மொழிதல் அணி.

கொடிவருத்தங் கண்டான் கொடித்தேர் நிறுத்தி
அடிவருத்தஞ் செய்தான் அவன். *199*

(பொ) படர்தற்குப் பந்தல் இன்றி வருந்திய முல்லைக் கொடியைக் கண்டான் பாரி; தான் ஏறிவந்த கொடியசையும் தேரை, அக்கொடிக்குப் பந்தராக நிறுத்திவிட்டுத் தன் காலடி வருந்துமாறு செய்தான் (நடந்து சென்றான்).

(வி) களிறுபோல் காட்டிக் கெடுப்பாரும், பாரிபோல் வந்து கனிந்து கொடுப்பாரும் கண்டு தெளிக என்னும் குறிப்பினது இது.

செய்தா னவனொருவன் சீகாதி மோதிரத்தைப்
பெய்தான் பிரிந்ததன் பின். **200**

(பொ) கொடை செய்தான் ஒப்பில்லா ஒருவன்; அவன் பெயர்

சீதக்காதி; அவன் உயிரோடு இருக்கும் மட்டுமோ கொடுத்தான்? இறந்த பின்னரும தன் விரலாழியை வழங்கினான்.

(வி) ''செத்துங் கொடுத்தான் சீதக்காதி'' என்னும் பழமொழி விளக்கம் இது. இறந்த பின்னரும் தந்தான் என்பதால், 'அவன் ஒருவன்' ஆனான்.

பின்னுடைமை வேண்டாப் பெருவள்ளல் பேரழகன்
தன்னுடைமை இல்லான் தனி. 201

(பொ) நாளைக்கு வேண்டுமே என்றும் எண்ணாமல் பெருங்கொடை புரிந்த வள்ளலும் பேரழகனும் ஆகிய அழகப்ப வள்ளல் தன் பொருளெனத் தனக்கெதுவும் இல்லாத ஒப்புரவாளன் ஆவான்.

(வி) காரைக்குடியில் கல்லூரிகளை நிறுவிய அவ்வள்ளல் வளமே, இற்றை அழகப்பர் பல்கலைக் கழகமாகத் திகழ்கின்றது. அழகப்பரைப் பற்றி ஆசிரியர் எழுதிய தனி நூல் 'கொடை விளக்கு' என்பதாம்.

தனித்தொரு பல்கலைத் தாய்க்கழகம் கண்டான்
மனித்தருள் அண்ணா மலை. 202

(பொ) மனிதருள் ஒருவராகப் பிறந்தாலும் மலையாக ஓங்கிய அண்ணாமலை வள்ளல், தன் பொருளாலேயே தனிச்சிறப்புடைய தாய் போல் அமைந்த பல்கலைக் கழகத்தைக் கண்டான்.

(வி) அண்ணாமலை வள்ளல் கண்டது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகும். அரசு தோற்றுவித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பின்னே, தனியொருவரால் தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக் கழகம் தமிழகத்தில் அதுவேயாம்.

மலைபச்சை நேரில்லை மாயா அறத்தால்
நிலைபச்சை யப்பனே நேர். 203

(பொ) வள்ளல் அண்ணாமலையின் பசுமையான கொடைக்கு மலையின் பசுமை ஒப்பாகாது; அழியா அறத்தால் நிலைபெற்று விளங்கும் வள்ளல் பச்சையப்பனே ஒப்பாவான்.

(வி) வள்ளல் பச்சையப்பன் கொடையால் அமைந்துள்ள அறக்கட்டளைகளும் கல்வி நிலையங்களும் பல ஆகலின், அவன் நிகர் என்றார்.

நேரினிய சொற்செல்வன் நெல்வேலிச் சேதுவின்
ஊரினிய பேரறத்தை ஓது. **204**

(பொ) செம்மையும் இனிமையும் உடையவனாய், சொல்லின் செல்வன் எனப் பாராட்டப்பட்டவனுமாய் விளங்கிய திருநெல்வேலி இரா.பி.சேதுவின் உயர்ந்த இனிய அறக்கட்டளைகளாம் பெரிய அறச்செயல்களைப் பாராட்டிக் கூறுவாயாக.

(வி) சொல்லின் செல்வர் சேது தம் தாயார் சொர்ணம்மாள் பெயரால் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் நிறுவிய பொழிவு அறக்கட்டளைகளைப் போற்றியது இது.

ஓதுவார் பாடும் உயர்வார வாசகங்கள்
தீதுபார் வண்டுக்குத் தேன். **205**

(பொ) ஓதுவார்களால் பாடப்படும் உயர்ந்த தேவார திருவாசகங்கள் இனிமையைத் துய்க்க விரும்பும் வண்டு போன்றவர்க்கு வாய்த்த தேனே ஆகும்.

(வி) வாரம் - தேவாரம்; தீ - இனிமை; து - துய்த்தல். தீ து பார் வண்டு - கொங்குதேர் வாழ்க்கை வண்டு தேனீ தும்பி அன்னவர். தீ, து என்பவை ஓரெழுத்து மொழிகள்.

தேனின்பம் பாயுமால் செந்தமிழ் நாடென்ற
பாவின்பம் பொய்யோ பறை. **206**

(பொ) 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்னும் பாவின் இன்பம் தேனின்பம் பெருகி வழிந்தது போன்றதாகும்; இது பொய்யுரையாகுமா? உரைப்பாயாக.

(வி) செந்தமிழ் நாடென்ற பாடல் வெளிவந்த போது, இது என்ன பாட்டா? என்றும், காதிலே பாய்ந்தால் இனிக்குமா? என்றும் இகழ்ந்தவர் உளர். ஆகலின் ''பொய்யோ பறை'' என்றார்.

பறைமுதற் பல்குடிகள் பண்டு தொழிலின்
வரைமுதல் வந்த வழக்கு. **207**

(பொ) பறை என்பது முதலாக அமைந்த பல குடிகளும் பழங்காலத்தில் தாம்தாம் செய்த தொழில்களின் பெயர் வரம்பை முதலாகக் கொண்டு வழக்கில் வந்த பெயராகும்.

(வி) 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் பிறப்பொப்புக் கண்ட மண்ணில் சாதிப்பிளவு உண்டாயிற்றில்லை என்பது இது.

வழக்கு வடக்காகி வன்பால் வருணச்
சழக்கு தினப்பட்டோம் சாய்ந்து. 208

(பொ) தமிழகத்து வழக்குகள் எல்லாமும் மாறி, வழக்கு என்பது வடக்கில் இருந்து வந்ததே என்னும் வன்மையால் சாதிப் பிரிவுகள் உண்டாகி அதன் வெறியால் நிலைசாய்ந்து அழிவு கொண்டோம்.

(வி) வருணச் சழக்கு - சாதிப் பிரிவின் வெறி. தினப்படல்- அழிவுறல். வடக்கே வழக்கெனக் கொண்ட தீமையை எடுத்துரைத்தது இது.

சாய வருணம் தழுவித் தமிழினம்
மாயுமே வீம்பில் மடிந்து. 209

(பொ) நிறப்பிறப்பு எனப்படும் தீய சாதி முறையைத் தழுவி நல்ல தமிழ்ப் பிறப்புகள் கூட ஒன்றுக்கு ஒன்று மேல்கீழ் என ஏசலிட்டுக் கெட்டு அழிந்து போகின்றன.

(வி) சாயம், வருணம் - நிறம்; நிறத்தாலே வெள்ளையர் கறுப்பர் எனப்படுதல் போன்ற இழிந்த பகுப்பு; ஒருகுலத்துக்கு ஒருநீதி என்பது இவ்வருணப்பகுப்பு.

மடிவில்லை என்றிருந்தோம் மாணாத தேர்தல்
விடிவில்லை என்றுரைக்கும் வெந்து. 210

(பொ) அழிவு இல்லை என மகிழ்வாக இருந்தோம்; ஆனால் தன் பெருமைக்குத் தக நடைபெறாத தேர்தல் முறையால் மனம் வெதும்பி இதிலிருந்து இனித் தீர்வில்லை என்னும் எண்ணமுண்டாகின்றது.

(வி) நல்லது விளைக்கும் அரசு என நம்பியது, தேர்தலில் ஆட்சிக்கு வர முடியாத நிலைக்கு ஆட்படுவது குறித்து வருந்தியுரைத்தது இது.

வெந்து வெதும்பி வெறிபடப் பாரதி
நொந்து மடிந்தான் நொசிந்து. 211

(பொ) விடுதலைக்கு முன்னரே மக்கள் இருந்த நிலையை எண்ணி மனக்கொதிப்புடன் பலவற்றைப் பாடி மெலிந்து பாரதி மறைந்தான்; நாட்டு நிலை அத்தகையது.

(வி) "நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த, நிலைகெட்ட மனிதரை

நினைந்துவிட்டால்'' எனத் தொடங்கும் பாடல் வரிசை காண்க.

நொசியாது சாதி நுழையாது சட்டம்
பசியாது தேர்தற் பணம். 212

(பொ) சாதி ஒழியப் போவதும் இல்லை; அதனை ஒழிக்கச் சட்டம் தலையிடப் போவதும் இல்லை. தேர்தற் செலவுக்கு வேண்டும் பணத்திற்குத் தட்டுப்பாடு ஏற்படப் போவதும் இல்லை.

(வி) நொசித்தல் - சிறுத்தல். தேர்தல் ஊழலே ஆட்சி ஊழல்களுக்கெல்லாம் அடிப்படையாகின்றது என எண்ணி உரைத்தது இது.

பணவாய் விரியுமேல் பாரதத் தேர்தல்
பிணவாய் மணக்கும் பிளந்து. 213

(பொ) பணத்தின் வாய் திறக்கப்படுமானால் இந்திய நாட்டுத் தேர்தல் எனப்படும் பிணத்தின் வாய் பிளந்து கொண்டு தன் நாற்றத்தைக் கொழிக்கும்.

(வி) ''பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும்'' என்னும் பழமொழியை உட்கொண்டு வெளிப்பட்ட உண்மை இது.

பிளவின்றி மக்கள் பெரும்பங்கு கொள்ளக்
களவின்றித் தேர்முறையைக் காண். 214

(பொ) பிளவு உண்டாகா வகையில் மக்களுள் பெரும்பாலோரும் பங்கு கொள்ளும் நிலையில் வாக்குக் களவு ஆட்களவு என்னும் கரவுகள் இல்லாமல் தேர்தல் நடத்தும் முறைகளைக் காணல் வேண்டும்.

(வி) அரசியல் கட்சிகளையும், ஆட்சியாளரையும் நோக்கி அறிவுறுத்தது இது. தேர்முறை - தேர்தல் முறை.

காணல் அரிதன்று; கட்சிகள் இந்தியம்
பேணும் பொதுக்கோள் பெறின். 215

(பொ) தேர்தலில் நேரிய முறைகளைக் காண்பது இயலாதது அன்று; அதற்கு முதற்படியாகக் கட்சிகள் எல்லாமும் இந்திய ஒருமைப்பாட்டைப் பேணுதலில் பொதுக்கொள்கை யுடையவையாக இருத்தல் வேண்டும்.

(வி) இந்தியம் - இந்திய நாடு; பொதுக்கோள் - பொதுவான கொள்கை; ''பேணும் கோள் பெறின், காணல் அரிதன்று'' என இணைக்க.

பெறுக குழந்தை பெறுவருவாய்க் கேற்ப
உறுக தமிழ்ப்பேர் ஒலி. *216*

(பொ) பெற்றோர்கள் தாங்கள் பெறும் வருமான அளவுக்குத்தக்க அளவில் வேண்டும் மக்களைப் பெற்றுக் கொள்வாராக; அம்மக்களுக்குத் தமிழ்ப் பெயர் இட்டு இனிமையுறச் செய்வாராக.

(வி) குழந்தை எண்ணிக்கையைப் பெற்றோர் வருவாய்த் திட்டமாகக் கொள்ளக் கட்டளை இட்டது இது; தமிழ்ப் பிறப்புச் சான்று தமிழ்ப்பெயர் என்றதும் இது.

ஒலிகூட்ட வேண்டா உயர்தமிழ்க் கல்வி
வலியூட்ட வேண்டும் வரிந்து. *217*

(பொ) உயர்ந்த தமிழைக் கற்றுக் கொள்வதற்கு ஒலிகளை ஒவ்வொன்றாகக் கூட்டிக் கொண்டிருக்க வேண்டியது இல்லை; அதனை எழுத்தால் எழுதி உறுதிப்படுத்த வேண்டும்.

(வி) சொற்களையும் அவற்றின் பொருள்களையும் அறிந்து கொண்டு பயிலவரும் தமிழ்ப் பிறப்புக்கு வேண்டுவது வரிதலே என்றது இது. வரிதல் - எழுதுதல்.

வரிவரியாய்ப் பார்த்து வரையின் பிழைகள்
கரிகரியாய்ப் போஒய் விடும். *218*

(பொ) வரிவரியாகத் தவறாமல் பார்த்து எழுதும் பழக்கத்தை மேற்கொண்டால் பிழைகள் குறைந்து குறைந்து இல்லாமல் போய்விடும்.

(வி) கரிகரியாய் - குறைந்து குறைந்து போய்; அக்கறையாகப் பார்த்து எழுதும் பயிற்சியால் பிழைகள் இல்லாமல் போகும் என வழியுரைத்தது இது.

விடுபிழை செந்தமிழில் மிக்கில்லை தூய
நடுமழை போலும் நடப்பு. *219*

(பொ) செந்தமிழை எழுதுதலில் உண்டாகும் பிழைகள் மிகுதியாக இல்லை; அதன் இயற்கையே தன் பொழிவாலே தூய்மையை உண்டாக்கும் மழையைப்போன்ற நடையுடையதாகும்.

(வி) ஊர்க்கழிவும் அழுக்கும் மழையால் அடித்துச் செல்லப்பட்டுத் தூய்மையாதல் போலச் செந்தமிழாக வழங்கப்படின் பிழை நேராது என்றது இது.

நடக்குஞ் சிறியதோர் நல்லமைச்சுப் போல
அடுக்கும் ஒலிகள் அளவு. **220**

(பொ) சிறிய அளவினதும், நல்லதும் ஆகிய அமைச்சினால் ஆளப்படும் அரசினைப் போல, நல்ல சில ஒலிகளை அளவாகக் கொண்டு தமிழாகிய அரசும் அமைந்துளது.
(வி) க, ச முதலானவற்றில் நான்குவகை இல்லை என்றும், வேறு சில ஒலிகள் இல்லை என்றும் கூறுவாரை நோக்கி உரைத்தது இது.

அளக்கும் ஒலியுதனால் அன்றுமுதல் என்றும்
கிளக்கும் குமரியாம் கேள். **221**

(பொ) அளவிட்ட ஒலிகளைக் கொண்டே அந்நாள் முதல் இந்நாள் வரையும் இனிவரும் காலத்தும் தன் கருத்தைத் தெளிவாகக் கூறும் கன்னிமொழியாம் தமிழ் என்பதை அதன் ஒலிகளைக் கேட்டே அறிந்து கொள்வாயாக.
(வி) கிளக்கும் - கூறும்; குமரி - கன்னித்தமிழ்; ஒலிக்குறையுடையதெனின் இயலாது எனத் தெளிவித்தது இது.

கேட்கும் ஒலியெலாம் கேடுணரார் சேர்ப்பரேல்
வாய்க்கு விளங்கா வரம்பு. **222**

(பொ) மொழிக்குக் கேடாகும் என்பதை உணராதவராய் அவர் கேட்கும் ஒலிகளை யெல்லாம் எழுத வடிவங்களைச் சேர்ப்பாரானால், அதன் எல்லை வாயால் கூறும் அளவைக் கடந்ததாகப் போகிவிடும்.
(வி) உலகத்து மொழிகளின் ஒலிகள் அனைத்திற்கும் வரிவடிவு வேண்டும் எனச் சேர்த்தால் அது ஒரு மொழியாகவே இல்லாமல் ஒழிந்து போகும் என்பது கூறி எச்சரித்தது இது.

வரப்பொலி போற்றி வழிநூல்கள் யாக்க
கரப்பொலி வேண்டா களை. **223**

(பொ) வரம்பாக அமைந்த ஒலிகளைக் கொண்டே பல்துறை நூல்களையும் இயற்றுக; மொழியை அழிக்கும் வேண்டா ஒலிகளைச் சேர்த்தல் வேண்டா; அவை பயிரை அழிக்கும் களைபோல்வனவாம்.
(வி) வரப்பு - வரம்பு, எல்லை; வழிநூல் - துறைநூல்; கரப்பு- மறைப்பு, கெடுப்பு. முற்கூறிய கருத்தை மேலும் வலியுறுத்தியது இது.

களைகண் தமிழுக்கு யாதெனின் தூய்மை
விளைகண் இதழ்கள் விளக்கு. 224

(பொ) தமிழ் நலத்திற்குப் புகலிடமாக இருப்பது எது எனின், நாள், கிழமை, திங்கள் இன்ன இதழ்களேயாம்; இவ்விதழ்கள் மொழித் தூய்மைக்கு விளைவிடமானவை என்பதை விளக்கிக் காட்டுதல் வேண்டும்.

(வி) களைகண் - புகலிடம்; பல்லாயிரம் பல இலக்கம் என வெளிவரும் இதழ்கள் மொழித் தூய்மை பேணினால் அல்லாமல் மொழித் தூய்மை உண்டாகாது என்றது இது.

விளக்கு தமிழேயாம் வேற்று மொழிகள்
விளக்கு பொடியாம் விரும்பு. 225

(பொ) தமிழ் மொழி என்பது ஒளி யுண்டாக்கும் விளக்குப் போன்றதாம்; அவ்விளக்கினைத் தேய்த்து விளக்குவதற்குப் பயன்படும் பொடி போன்றதாம் அயல்மொழிகள்; இதனை உணர்ந்து விரும்பும் அளவால் விரும்பிப் போற்றுவாயாக.

(வி) விளக்கு பொடியே விளக்கெனக் கொள்ளும் அறியாமையை உரைத்துத் தெளிவுகாட்டியது இது.

விரும்புக எம்மொழியும் வேற்றுமை யில்லை
விரும்புக தன்மொழிக்குப் பின். 226

(பொ) எந்த மொழியை எனினும் ஒருவன் விரும்பிக் கற்பானாக; அதில் எமக்குக் கருத்து வேற்றுமை இல்லை; ஆனால் தன் தாய் மொழிக்குப் பின்னரே அவ்வயல் மொழியை விரும்பிக் கற்பானாக.

(வி) தாய்மொழி கற்றுத் தெளிந்த பின்னரே அயல்மொழி கற்றல் எம்மொழியாளர்க்கும் கடமை என மொழிப் பொதுநலம் சுட்டியது இது.

பின்வாழ்க்கை வேண்டின் பெரும்பொருள் ஈட்டுக
என்வாழ்க்கை இல்லா தவர்க்கு. 227

(பொ) எதிர்வரும் காலத்தில் இடரில்லாத நல்வாழ்வு வேண்டுமானால், மிகுந்த அளவில் பொருள் ஈட்டிக் கொள்வதை இப்பொழுதே செய்தல் வேண்டும்; ஏனெனில், பொருளில்லாதவர்க்கு உண்டாகும் வாழ்க்கையாவது என்ன வாழ்க்கை!

(வி) 'இல்லாதவர்க்கு என்வாழ்க்கை' என இணைக்க; என் -என்ன; இது, வேற்றுப் பொருள் வைப்பணியமைந்தது.

இல்லா தவராயின் எந்நாய் முகத்துக்கும்
பொல்லா தவராவர் பொய்த்து. 228

(பொ) ஒருவர் பொருள் இல்லாதவராக இருப்பாராயின், அவரொத்த மாந்தர் பிறப்பு மட்டுமென்ன, எந்த நாயின் முகத்துக்கும் கூடப் பயனற்றவராயும் பொல்லாதவராயும் தெரிவர்.

(வி) பொய்த்து - உள்ளீடு அற்று; பயனின்றி. வறியவன் குற்றம் தானே, குற்றமெனத் தோன்றும்; வளமையன் குற்றத்தை மறைத்துவிட எத்தனை வழிகள்!

பொய்யன்று ஞாலம் பொருளில்லார்க் கில்லின்பம்
மெய்யன்று வள்ளுவம் மெய்த்து. 229

(பொ) உலகில் பொருளில்லாதவர்க்கு இல்லற இன்பம் மெய்யாக இல்லை என்று திருக்குறள் உறுதியாகக் கூறுவது பொய்யன்று; மெய்யேயாம்.

(வி) ''பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லை'' (247) என்னும் வள்ளுவத்தை வழிமொழிந்து பொருட்சிறப்பை வலியுறுத்தியது இது; இல் இன்பம் - இல்லற இன்பம்; வீடே பொருளில்லாரைப் போற்றாது எனின், வெளிதானா போற்றும்?

மெய்யென்று செய்யற்க மெய்யல் கரும்பணம்
தய்யென்று கைப்பூண் தரும். 230

(பொ) பொருளே மெய்யான இன்பம் என்று கருதிப் பொருந்தாவழியில் கறுப்புப் பணம் தேடி வைக்காதே; வைத்தால் பூட்டுக என்று கைவிலங்கு பூணச் செய்துவிடும்.

(வி) மெய் அல் - மெய்யல்லாத; தய் - தை; பூட்டுக; பூண்-விலங்கு; பொருளால் இன்பம் எனின், கரும் பொருளால் துன்பமாம் என எச்சரித்தது இது.

தருமென்று வாடித் தருமுயற்சி குன்றின்
வருமன்றோ இன்மை வடு. 231

(பொ) வருந்திச் செய்யத்தக்க முயற்சிகளைச் செய்யாமல், 'தெய்வமே எல்லாம் தரும்' என்று ஒடுங்கிக் கிடந்தால் வறுமைக்கேடு வராமல் தீருமா? வந்தே தீரும்.

(வி) ''கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிரித்துக் கொண்டும் கொடுக்கும்'' என்பது பழமொழி. அயராது உழைக்க என்றது இது.

வடுவிற் பெரியது வாய்வறுமை; ஆண்டும்
படியிற் பெரியது பண்பு. 232

(பொ) குற்றங்களில் எல்லாம் பெரிய குற்றமாவது தீரா வறுமையாகும். அவ்வறுமையிலும், இவ்வுலகில் பெரியது பண்பாடு போற்றுதலாகும்.
(வி) வாய் வறுமை - நிலைத்த வறுமை; படி - உலகம். ''வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை'' என்பது நறுந்தொகை.

பண்புடையார் துன்பப் படுவர் படுசூழ்ச்சி
வன்புடையார் உள்ள வரை. 233

(பொ) மிகுந்த சூழ்ச்சியும் கொடுமைத் தன்மையும் உடையவர்கள் உலகில் உள்ளவரைக்கும், பண்புடையவர்கள் துன்பப்படுவர் என்பது உண்மையாம்.
(வி) தமக்கென வரும் துன்பத்தைப் பொருட்டாக எண்ணாப் பெருநிலையினராக இருப்பினும், மற்றையுயிர்கள் படும் துன்பங்கருதித் துன்பப்படுவர் ஆகலின் இவ்வாறு உரைத்தார்; ஏனெனில், ''அல்லல் அருளாள்வார்க்கு இல்லை'' என்பாராகலின் (திருக்குறள்: 245).

வரையறுத்த ஊதியம் வந்தால் செலவைக்
கரையறுத்துச் செய்தல் கடன். 234

(பொ) திட்டவட்டமான வருமானம் வருமானால், அதற்குத் தக்கவகையில் செலவின் அளவையும் வரையறை செய்து கொண்டு செலவிடுதல் ஒருவன் கடமையாகும்.
(வி) ஊதியம் - சம்பளம், வருமானம்; கரை - எல்லை; கடன்- கடமை; இக்கடன் செய்யா ஒருவன் கடனாளியாய்க் கெடுவான் என்பது குறிப்பு.

கடன்பழக்கம் வேண்டாமே காலிப் பழக்கம்
விடும் வழக்கம் ஆகிவிடின். 235

(பொ) கடன் வாங்கும் பழக்கம் வேண்டவே வேண்டா; அதனை விட்டொழிக்க; இல்லாக்கால், அதனை வாங்குதல் வழக்கமாகப் போகிவிடும்; போகிவிட்டால், அது காலிப்பழக்கமாகி இழிவும் பழியும் சேர்க்கும்.
(வி) கடன் வாங்குதல் கேட்டை விரித்தது இது. பழக்க முதிர்ச்சி வழக்கம் ஆகும். ''கடன் பழக்கம் வேண்டாமே; விடும்; வழக்கம் ஆகிவிடின், காலிப் பழக்கம்'' என இயைக்க.

விடத்துணிக அச்செலவு மேல்வரவு போலாம்
மடத்துணிவும் போகும் மறந்து. 236

(பொ) வரவுக்குமேல் செலவு வருமானால் அச்செலவைச் செய்யாமல் விடுவதற்குத் துணிவு கொள்ளல் வேண்டும்; அத்துணிவு மேல்வரவு வந்தது போன்றதாம்; அதனுடன் மடமையாகச் செலவிடும் துணிச்சலும் மறந்துபோய்விடும்.

(வி) மிகு செலவு ஆகாமல் கட்டுப்படுத்துதலால் உண்டாகும் நலங்களை மேலும் அடுக்கிக் கூறியது இது.

மறந்தொழிக வெண்சுருள் வாய்நாற்றம் நோய்தான்
பறந்தொழிக நெஞ்சிற் பரிந்து. 237

(பொ) புகைக் குடியனே, சொல்வதை நெஞ்சிற் கொண்டு, வெண் சுருட்டுப் புகைத்தலை விட்டொழிப்பாயாக; அதனால் உனக்கு வாய் நாற்றமும் நோய்க்கேடும் இல்லாமல் அப்பாற் போவனவாக.

(வி) வெண்சுருள் என்றது சிகரெட்டு; இது பீடி, சுருட்டு, கஞ்சா எனப் புகைப்பனவற்றின் இனம் குறித்து வந்தது.

பரிந்திரப்பன் சாராயப் பாலைப் பருகி
எரிந்திறக்க வேண்டாமே என்று. 238

(பொ) சாராயம் எனப்படும் மதிமயக்க வெறிப்பாலைக் குடித்து, குடல் எரிந்து, உடல் எரிந்து, குடியெரிந்து இறத்தல் வேண்டாமே என்று மனம் உருகிக் கெஞ்சி மன்றாடுகின்றேன்; அதனைக் குடியாதீர்.

(வி) சாராயப்பால் என்றது எள்ளல்! பாலா அது, பாழ் என்றது; சாராயம் மதுவினப் பொதுச் சுட்டு. 'இரப்பன் இரப்பாரை எல்லாம்' என்னும் வள்ளுவ நடை ஒப்பது இது, பிறவும் உண்டு.

என்றும் மதுவூட்டி ஏழை மடிகறத்தல்
கன்றுமுன் காட்டும் கறப்பு. 239

(பொ) நாள்தோறும் மதிமயக்கும் மதுவை ஊட்டி, ஏழை எளியவர் மடியில் இருக்கும் பணத்தைப் பறிப்பது, வைக்கோற் கன்றை முன்னே காட்டி நாள்தோறும் மாட்டில் பால் கறப்பது போன்றதாம்.

(வி) மடி என்பது குடியன் மடியையும், மாட்டின் மடியாகிய மடுவையும் குறிக்கும் இரட்டுறல் (சிலேடை). கன்று என்றது கன்றெனக் மயங்கவைத்த பொய்க்கன்று.

கறக்கும் மதுவால் கருவூலம் ஈட்டல்
சிறக்குமோ காந்தியின் சீர். 240

(பொ) குடியால் பணத்தைப் பறித்துப் பொக்கசத்தில் சேர்த்தல், குடியை ஒழிப்பதற்குப் பாடுபட்ட காந்தியின் கொள்கைச் சிறப்புக்கு ஏற்ற சிறப்பாகுமோ?
(வி) காந்தி பெயரால் ஆள்பவர், 'இது செய்தல் ஆகாது' என்றது இது. தந்தை பெரியார் கொள்கைக்கும் இது தகும்.

காந்திசீர் போற்றுவோம் கள்ளுக் கடைதிறந்து
வாந்திநீர் விற்போம் மகிழ்ந்து. 241

(பொ) சாந்திக்கு விழா எடுத்து அவர் சிறப்புகளைப் புகழ்ந்துரைப்போம்; அதேபொழுதில் மிக மகிழ்ச்சியாகக் கள்ளுக்கடைகளையும் திறந்து, வாயாலெடுக்கும் நாற்றக் குடிநீரையும் விற்போம்; நம் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள நிலை இது!
(வி) கள்ளுக்கடை என்பது மதுக்கடைப்பொது. வாந்திநீர் என்றது குடித்தாரையும் குடியாரையும் குமட்டலெடுக்க வைக்கும் நீர்.

மகிழ்ச்சி ஒருபுறம் மாண்குறளைப் போற்றும்
புகழ்ச்சி மறுபுறம் பூச்சு. 242

(பொ) உயர்ந்த குறள்நெறியோடு கூடாதவற்றைக் கொண்டு மகிழ்வது ஒரு பக்கம். அக்குறளைப் போற்றிப் புகழ்வது மற்றொரு பக்கம்; இச்செயல் நடிப்பாகும்.
(வி) பூச்சு - மாறிமாறிப் போட்டு நடிக்கும் வேடம்; காந்திய வேடம் போலவே வள்ளுவ வேடமும் ஆயதைச் சுட்டியது இது.

பூச்சும் குறியும் புகழ்மதமும் வேதமும்
பேச்சும் செயலும் பிற. 243

(பொ) பூசுதல், சமயக்குறிபோடுதல், உயர்ந்த மதங்களின் பெயரைச் சொல்லல், வேதம் ஓதுதல், மேடையில் பேசுதல் என்பவை எல்லாம் வேறே; அவர் செய்யும் செயல் எல்லாம் அவற்றுக்கு மாறான வேறே.
(வி) பூச்சு முதல் பேச்சும் பிற; செயலும் பிற என இணைக்க. ''வினைவேறு சொல்வேறு'' என்பதை விளக்கியது இது (திருக்குறள்: 819).

பிறந்தோம் இறந்தோம் பெரியோரின் சொல்லை
மறந்தோம் நினைந்தோமா மற்று. 244

(பொ) மாந்தராகத் தலைமுறை தலைமுறையாகப் பிறந்தோம்; இறந்தோம்; அதுபோலவே, பெருமக்கள் சொல்லிய

சொற்களையும் மறந்தோம் அவற்றை நினைந்து பார்த்தோமா? இல்லையே!

(வி) உலகக் கேட்டுக்கு உரிய காரணம் இதுவே என்றது இது. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, இவண் உலகம் தழுவி நின்றது.

மற்றவர்க்குத் தீமை வகைவகையாச் செய்தலே
கற்றவர்க்கு வந்த கலை. **245**

(பொ) கல்வி கற்றவர்கள் என்று சொல்லப்படுபவர்க்குக் கைவந்த கலையாக இருப்பது, பிறர்க்குக் கேடுகளை விதம்விதமாகச் செய்வதேயாம்.

(வி) கல்வியின் சிறப்பையும், கற்றோர் இழிவையும் எண்ணி வருந்தி உரைத்தது இது.

கலையின்பம் மக்கட்கே; காணும் விலங்கிற்கு
இலையின்பம் உள்ளத் தியல்பு. **246**

(பொ) கலையால் இன்பம் அடைதல் உள்ளத்தின் இயல்பாகும்; ஆதலால், அது மக்களுக்கே உரியது; கலைகளைக் காணும் விலங்குகளுக்கு அவ்வின்பம் உண்டோ? இல்லை.

(வி) மாந்தர்க்குச் சிறப்பாக அமைந்த கலையின்பத்தை நுகராத மாந்தர் இயல்பென்ன என எண்ணியது இது.

இயல்பை வடிக்கும் எழிற்கலை மாமல்
பயில்வுக் கடற்புரம் பார். **247**

(பொ) உள்ளதை உள்ளவாறு கல்லில் செதுக்கிக் காட்டிய அழகிய சிற்பக்கலைச் செல்வங்கள் நிரம்பிய கடற்கரை மாமல்ல புரத்தைப் பார்ப்பாயாக.

(வி) ''எழிற்கலை பயில்வுக் கடற்புரம் மாமல்பார்'' என இணைக்க. மாமல்லை என்பது மாமல் எனத் தொகுத்து நின்றது.

பாரிற் கொழுத்த பசுமுட்டு கன்றினை
நேரிற் களிக்கலாம் நின்று. **248**

(பொ) உலகிலே காணுதற்கு அரிய, பெரிய பசு தன் கன்றினை முட்டிக் கொண்டுள்ள காட்சியை நேருக்கு நேர் நின்று நெடும்பொழுது கண்டு களிக்கலாம்.

(வி) கலைச் சிறப்பும், சிற்பத்து வடிக்கப்பட்ட முட்டுபசு என்னும் உண்மையும் விளங்க 'நேரிற்களிக்கலாம் நின்று' என்றார்.

நின்றுமேற் பார்த்தால் நெடுந்தவச் சிற்பங்கள்
என்றுமே இல்லை இணை. **249**

(பொ) நிலத்தில் நின்று பாறையின்மேல் பார்த்தால் தவக்கோலப்

பெருஞ்சிற்பங்களைக் காணலாம்; எக்காலத்தும் அதற்கு ஒப்பான சிற்பப்படைப்பு இல்லை.

(வி) என்றுமே இல்லை என்றது அவ்வடிப்பின் அருமை நோக்கியதாம். 'அருச்சுனன் தபசு' என்பது பற்றியுரைத்தது இது.

இணைந்த குடிமந்தி ஈர்பேன் எடுக்கும்
பிணைந்த உறவோ பெரிது. 250

(பொ) ஆணும் பெண்ணுமாகக் கூடிய குடும்பமான குரங்கு, ஈரும் பேனும் எடுக்கும், விடுதலறியாது ஒன்றுபட்டுள்ள உறவுக்காட்சி பெருமைக்குரியதாகும்.

(வி) இணை, குடி, பிணை, உறவு என்பன அவற்றின் உயிர்நெருக்கம் உணர்த்துவனவாகப் பல்கிய சொற்களாம். இவையெல்லாம் பல்லவவேந்தர் சீர் பரப்பும் காட்சிகளாம்.

பெரிதே உயர்ந்த பெருவுடையார் கோயில்
அரிதேகாண் நந்தி அமைப்பு. 251

(பொ) உயர்ந்து ஓங்கியுள்ள தஞ்சைப் பெருவுடையார் கோயில் பெரிதே யாகும்; அதிலும் அக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள நந்தியின் அமைப்பு மிக அருமையுடையதாகும்.

(வி) சுற்றும் சூழ ஐம்பது கல் தொலைவுக்கு மலை இல்லாமல் இருந்தும் இப்பெருங்கோயிலும், பெருமைதரு நந்தியும் அந்நாளில் அங்கே அமைக்கப்பட்ட பெருமைக்கு வியந்தது இது. மாமன்னன் இராசராசன் வீறுகாட்டுவது இது.

அமைவுடை வள்ளுவர் அன்புருக் கோட்டம்
தகைவுடைச் சிற்பத் தமிழ். 252

(பொ) தமிழகத்தின் தனியுயர்ந்த சிற்ப மேம்பாட்டுக்குச் சான்றாக விளங்குவது, வள்ளுவர்மீது கொண்ட அன்பின் உருவமாக அண்மையில் சென்னையில் அமைத்துள்ள வள்ளுவர் கோட்டமாகும்.

(வி) தகைவு - தகவு; இதனைத் திட்டமிட்டு எழுப்பியவர் கலைஞர் மு.கருணாநிதி ஆவர்.

சிற்பத் தமிழெங்கும் செல்லா இடமில்லை
பொற்பமரிக் காவும் பொலிந்து. 253

(பொ) தமிழகத்தின் சிற்பக்கலை உலகில் சென்று சேராத இடமில்லை; புதுவதாகப் பொலிந்துள்ள அமெரிக்காவும் அதனைப் பொலிவாகப் போற்றுதல் கண்கூடு.

(வி) இதனால் பழமையான நாடுகள் தமிழகச் சிற்பக்கலையைப் போற்றுதல் புதுமை இல்லை என்றது. பொற்பு - அழகு.

பொலிவார் சிலைக்களவு போம்விலை கேட்டால்
மலிவார் கலையன்று மற்று. 254

(பொ) வேலைப்பாடு மிக்க சிலைகளுக்கு, அளவின்றிப் போகும் விலையைக் கேட்போமானால், மலிவமைந்த கலையன்று சிற்பக்கலை என்பது விளங்கும்.

(வி) ஆர் - அமைந்த; அளவு போம் சிலை, களவுபோம் விலை என்னும் சொற்குறிப்பு நயமிக்கது. மற்று - அசைநிலை.

மற்றைக் கலைமேல் மதிமோகம் போனதனால்
பற்று தமிழிசைக்குப் பாழ். 255

(பொ) பிறபிற கலைகளின் மேலும் பிறநாட்டுக் கலைகளின் மேலும் அறிவு வயப்பட்டுப் போனதால் அப்பற்றுதல், தமிழிசையைப் பேணவிடாமல் பாழாக்கிற்று.

(வி) மற்றை - பிற; பிறகலை; பிறநாட்டுக்கலை. "பற்றுக் கொண்டிருந்த தமிழிசைக்குப் பாழாயிற்று" என்றுமாம்.

பாழ்நூல் இசைகண்டு பண்ணாடி ஆனந்தர்
யாழ்நூல் வரைந்தார் நமக்கு. 256

(பொ) பாழ்பட்டு மறைந்துகிடந்த இசை நூல்களையெல்லாம் தேடிக் கண்டு பண்ணோடு ஆராய்ந்த விபுலானந்த அடிகள், நம் நலத்தின் பொருட்டாக 'யாழ் நூல்' என்னும் பெயரிய நூலை வரைந்தார்.

(வி) பண் நாடி - இசை நிலையை ஆய்ந்து, ஈழநாட்டு மட்டக்களப்புக் காரைத் தீவினர் விபுலானந்தர்; மயில்வாகனர் என்பது இவர்தம் முந்தைப் பெயர். காலம் 1892 - 1947.

நமக்கோர் இசைத்தமிழை நாடோடிக் காத்தான்
அவைக்கொரு அண்ணா மலை. 257

(பொ) அவைக்கு ஒப்பற்றுத் திகழ்ந்த அண்ணாமலை வள்ளல், நமக்கு ஒப்பற்றதாக இருக்கும் இசைத்தமிழை அழிந்து படாமல், நாடுநாடாக ஓடி வளர்த்துக் காத்தான்.

(வி) நாடோடிக் காத்தல், நாட்டின் பல இடங்களிலும் தமிழிசையரங்குகளை நடத்தச் செய்து காத்தல். 'மதுரை முத்தையா மன்றம்' தந்தையார் வழியில் மைந்தர் செய்த தமிழிசைத் தொண்டின் விளக்கமேயாம்.

மலைப்பேரான் ஆற்றிய வண்தமிழ்த் தொண்டு
நிலைப்பேரா ஞாயிறு நேர். 258

(பொ) அண்ணாமலை என்னும் பேராளன் ஆகிய அவன் செய்த வளமான தமிழ்த்தொண்டு, அழியாப் பெருமை யமைந்த கதிரோனுக்கு ஒப்பானதாகும்.
(வி) பேர் - பெயர், புகழ். அண்ணாமலை அரசரைக் கதிரொடும் ஒப்பிட்டது இது. கதிரும் மதியும் உள்ளளவும் பெயர் வாழ்க என்ற வாழ்த்தியல் வழியது.

நேர்பகை நந்தமிழ்க்கு யாரெனின் நெஞ்சங்கள்
யார்பகை நாமே நமக்கு. 259

(பொ) நம் தமிழுக்கு வாய்த்த பகைவர் எவரெனின், நம் நெஞ்சங்களே; அதற்கு வேறு எவரே பகை? நாமே நமக்குப் பகை என்பதை அறிக.
(வி) ஆயிரம் புறப்பகையினும் ஓர் அகப்பகை கொடியது அல்லவா!.

நமனாக நாமே இருக்கப் பிறரை
எமனாகக் கூறல் எதற்கு. 260

(பொ) நமக்கு நாமே எமனாக இருக்கும் போது, நமக்கு மற்றவரை எமனாகச் சொல்வது எதற்காகவோ?
(வி) 259 ஆம் பாடலைக் கருதுக. நமன் - எமன். 'வீண்பழி சூட்டல் விழிப்பாக்காது' என்பதை அறிவுறுத்தியது இது.

எதற்கும் தமிழை இளக்காரம் பேசும்
அதற்கு மகிழ்வோம் அசடு. 261

(பொ) எந்த வகைக்காக ஆனாலும் தமிழை இழிவுபடுத்திப் பேசுவார் பேச, அதற்கு மறுப்புக் கூறும் திறங்கெட்டு இழிவினை ஏற்றுக் கொண்டு போலியாக நகைத்து மகிழ்வோம்.
(வி) இளக்காரம் - இழிவுபடுத்திப் பேசுதல்; அசடு - அழுது வழிதல்; அழுது வழிந்து கொண்டு மகிழ்வதாகக் காட்டல் அசடு வழிதலாகும்; வரும் பாடல் காண்க.

அசடு முகம்வழிய அன்மொழி நாறும்
கசடு தொலையாதோ காடு. 262

(பொ) அழுது வழியும் முகத்துடன் அயல்மொழி நாறும் இழிபிறப்புடையது, நாட்டைவிட்டுக் காட்டுக்குப் போய்த் தொலைய மாட்டாதோ?

(வி) அன்மொழி - அயன்மொழி; நாறும் கசடு என்றது தாய்மொழியை வெறுத்து அயன்மொழி விருப்பான பிறப்பை. காடு என்றது செத்துத் தொலையாதோ என்னும் குறிப்பினதுமாம்.

காடுகாண் காதை கடக்க இளங்கோவின்
நாடுகாண் பாதை நடந்து. **263**

(பொ) இளங்கோவடிகளார் பாடிய நாடுகாண் காதையின் வழியில் நடந்து, அதனை அடுத்தே பாடிய காடுகாண் காதையைக் கடப்பாயாக.

(வி) ''நடந்து... கடக்க'' என இயைக்க. நடந்து கடத்தலால் உண்டாகும் பயன் இன்னதெனக் கூறுவது வருங்குறள்.

நடந்தால் உடல்நலம் நன்றாகும்; வாய்மை
கடந்தால் நிலைபோம் கழிந்து. **264**

(பொ) நடக்கும் வழக்கத்தை நாளும் கொண்டால் உடல் நலம் நன்றாக இருக்கும்; ஆனால், வாய்மையைப் போற்றாமல் வாழ்ந்தால் குடிப்பிறப்பு கல்வி முதலிய நிலைகள் எல்லாமும் இல்லாமல் போய்விடும்.

(வி) உடல் நலமும் புகழ் நிலையும் பொருத்திக் கூறியது இது. ''நிலை கழிந்து போம்'' எனக் கூட்டுக.

கழிக்கதில் பொய்ம்மைக் கவர்ச்சி; தலையை
மழிக்கதில் பிள்ளை மயிர். **265**

(பொ) போலிக் கவர்ச்சிகளுக்கு ஆட்படாமல் அவற்றை அகற்றிவிடுக; இளம்பிள்ளைப் பருவத்திலேயே தலைமயிர் வழித்து விடுதலை வழக்கமாகக் கொள்க.

(வி) தில் - அசைநிலை; இளம் பருவத் தலைமழிப்பு மயிர்வளத்தையும் செறிவையும் ஆக்கும் என்பதால் குறித்துரைத்தார்.

மயிர்வளராக் கன்னிமை மானும் தமிழின்
பயிர்வளராப் பள்ளிப் படிப்பு. **266**

(பொ) தமிழாகிய விளைபயிரை வளர்த்தல் இல்லாத பள்ளிப்படிப்பு, தலை பொட்டலாகப் போய்விட்ட கன்னிப் பெண்ணை ஒப்பதாகும்.

(வி) மழுக்கை, முதுமையில் மயிர் உதிர்ந்து போதலால் உண்டாவது. இப்பொட்டல், இளமையிலேயே மயிர் முளையாமையாலும் உதிர்தலாலும் ஏற்படுவது. மானும்- போலும்; உவமை உருபு.

படித்து முழங்கும் பறைஞன்நான் கேளீர்
தடுத்து வளரும் தமிழ். 267

(பொ) நன்றாகக் கற்று அத்தெளிவால் பறைமுழக்குகின்றவன் யான்; என்சொல் கேட்பீராக; அச்சொல், ''பல வகையாலும் தடுத்தமையால்தான் தமிழ் வளர்ந்துள்ளது'' என்பது.
(வி) தடுப்பார் தடை தமிழை வளர்க்கும் என்பது எம்பட்டறிவு என்றார்; பறைஞன் - பறைமுழக்குவோன்; ''யாமெய்யாக் கண்டவற்றுள்'' (300) என்னும் வள்ளுவ நடை அன்னது இது. கேளீர் - கேட்பீராக: (கேளிர் - உறவினர்).

தமிழா பகையா தகையா நகையா
உமிழா பிணமா உணர். 268

(பொ) தமிழா, நீ தமிழை அழிக்கும் பகைப்பிறப்பா? அதனை வளர்க்கும் பண்புப் பிறப்பா? அதனை இகழும் நகைப்புப் பிறப்பா? அதனை ஒதுக்கித் தள்ளும் இழிபிறப்பா? உணர்வே இல்லாத பிணப்பிறப்பா? இவற்றுள் நீ எதுவென்று உணர்ந்து கொள்வாயாக.
(வி) தமிழ்ப் பிறப்பு, தகைமைப் பிறப்பு என்பதை உணர்ந்து நிலைப்படுத்துக என்பது ஆசிரியர் ஆவல்.

உணர்ச்சித் தமிழா ஒருமுறை யேனும்
கிளர்ச்சிச் சிலம்பினைக் கேள். 269

(பொ) உணர்ச்சி மிக்க தமிழனே, உன் வாழ்வில் ஒரே ஒரு முறையாவது, கற்றவர்க்கு எழுச்சியூட்டும் சிலப்பதிகாரத்தை முழுமையாகக் கேட்டறிவாயாக.
(வி) எல்லாம் துறந்தும் தமிழையும் தமிழ்க் கலையையும் துறவாத துறவி இளங்கோ என்பதையும், முடிகெழு வேந்தர் மூவரையும் ஒப்ப மதித்துப் போற்றியது அவர்தம் சால்பு என்பதையும் அறிய வாய்க்குமே என்ற ஆர்வத்தால் கூறியது இது. மற்றொரு குறிப்பு வருவது.

சிலம்பினைக் கற்றால் சிதைமுலைக் கற்பி
புலம்பினைக் கேளாய் புகைந்து. 270

(பொ) சிலப்பதிகாரத்தைக் கற்றால் தன் மார்பகத்தைத் தானே சிதைத்துத் தன் துயரை வெளிப்படுத்திய கற்புடைய கண்ணகியின் தனிமைத் துயரை வருந்திக் கேட்பாயாக.
(வி) அக்கேள்வி, ஆய்ந்து கடமை புரியத் தூண்டும் என்பது. 'புலம்பே தனிமை' என்பது தொல்காப்பியம். கற்பி- கற்புடையவள். அவள் சிதைத்தது, சிலம்பு. 21:43 காண்க.

புகைகுடி யில்லாப் புகழ்நூல் மதுரை
தொகைமடி பட்ட சுருண்டு. 271

(பொ) உள் வருத்தங் கொள்வார் இல்லாதது என நூலால் புகழப்பட்ட மதுரை, மன்னனின் ஆராயாச் செயலால் எண்ணற்ற அளவில் மக்கள் சூடுண்டு இறக்க வகையாயிற்று.
(வி) புகை குடியில்லாமையால் 'தீது தீர்மதுரை' என்று பாராட்டப்படும் பெருமையுற்றது அது (சிலம்பு. 10:58).

சுருண்டு விழுந்தான் சுடர்த்தொடி யோடும்
வெருண்டு நெடுஞ்செழிய வேந்து. 272

(பொ) தான் குற்றவாளி என்பதை உணர்ந்து அஞ்சிய வேந்தன் நெடுஞ்செழியன், தன் தேவியொடும் அரியணையில் இருந்து சுருண்டு விழுந்தான்.
(வி) சுடர்த் தொடி - ஒளியமைந்த வளையல்; அதனை அணிந்த கோப்பெருந்தேவியைக் குறித்தது. விழுந்தான் என்றது மங்கல வழக்கு.

வேந்தனும் வெந்தான் விரிகுழல் ஓர்நங்கை
ஏந்தும் கனலிக் கெதிர். 273

(பொ) விரித்த கூந்தலொடு வந்து நின்ற ஒப்பற்ற கண்ணகி என்னும் அரிய நெருப்புக்கு எதிர்ப்பட்ட பாண்டியன் நெடுஞ்செழியனும் இறந்தான்.
(வி) அறம் சுடுதலும், அல்லல்பட்டு ஆற்றாதார் கண்ணீர் அரசை அழித்தலும் திருக்குறளில் காண்பவை (77, 555). ''கற்பெனும் கனலி'' என்பார் கம்பர்.

எதிர்த்தாள் ஒருத்தி இழந்த தொருகோல்
உதித்தது காப்பியம் ஒன்று. 274

(பொ) எதிர்க்க இயலா அரசை ஒரே ஒருத்தியாக நின்று கண்ணகி எதிர்த்தாள். அதனால் ஓராட்சி வீழ்ந்தது; செந்தமிழ்க் காப்பியம் ஒன்று எழுந்தது.
(வி) கண்ணகி துணிவே காப்பியக் கொடை என்பது கருத்து. கண்ணகியை முதற்கண் அடிகளார் அறிமுகப்படுத்திய இடத்தில், ''இவளை முன் கூறிற்று, கதைக்கு நாயகியாகலின்'' என்றார் அரும்பத உரைகாரர் (சிலம்பு. 1:29).

ஒன்றிய சேரன் உயரிமயக் கல்சுமத்தி
வென்றதமிழ் நாட்டினான் வீறு. 275

(பொ) கண்ணகியை வழிபடுதற்கு ஒருப்பட்ட சேரன்

செங்குட்டுவன், உயர்ந்த இமயத்தில் கல் எடுத்துக் கனக விசயர் தலையில் சுமத்தி வெற்றிகொண்ட தமிழரின் ஆற்றலை மீண்டும் நிலை நாட்டினான்.

(வி) வடவரை முன்னரும் வென்றமை விளங்க 'வென்றதமிழ் வீறு நாட்டினான்' என்றார். ஆரியப்படை கடந்தான், கரிகாலன், இமயவரம்பன் என்பார் வடவரை வென்றவர்.

வீறுடை மாதவி வெண்கற்புக் காதலாள்
மாறுடையாள் தாயின் வழிக்கு. **276**

(பொ) ஆடல், பாடல், அழகு வீறுகள் சுமந்த மாதவி, வெளிப்பட விளங்கும் கற்பையே காதலித்தவள்; அவள், தன் தாய் சித்திராபதியின் வழிக்கு மாறுபட்டவளாக விளங்கினாள்.

(வி) வெண்கற்பு - வெளிப்படையாக விளங்கும் கற்பு நெறி; அவள் 'கற்பையே காதலித்தவள்' என்பது மாதவிக்கமைந்த தனிப்பேறாகும்.

வழிபல காட்டி மணிமே கலையாள்
அழிபசி தீர்த்தாள் அறம். **277**

(பொ) மாதவி, கோவலன் ஆகியவர் மகளாகப் பிறந்த மணிமேகலை, உலகுக்கு அறவழி பலவற்றை அறிவுறுத்தினாள்; அன்றியும், கொல்லும் கொடும்பசித் துயரையும் தீர்த்தாள்.

(வி) அறம் வழியோடு இணைக்கப்பட்டது. 'அழிபசி தீர்த்தல்' வள்ளுவ ஆட்சி; 'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்பது அது.

அறத்திற் பெரிய தழிபசி தீர்த்தல்
மறத்திற் பெரியது மாண்பு. **278**

(பொ) அறங்களில் எல்லாம் பெரிய அறமாவது கொல்லும் பசியை அழிப்பதே. அதுபோல் வீரத்தில் எல்லாம் பெரிய வீரமாவது புலனடக்க மாண்பாகும்.

(வி) புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரமாம் என்பதும், பிறன்மனை நோக்காத பேராண்மை என்பதும் கருதுக.

மாணாக வாழ்தல் மனிதம்; தமிழுக்குப்
பூணாக வாழ்தல் பொருள். **279**

(பொ) புகழ்நிலை பெற வாழ்தல் மனிதம் என்பதாகும்; அதுபோல் தமிழுக்கு அணிகலமாக வாழ்கின்ற வாழ்வே பொருளுடைய வாழ்வு ஆகும்.

(வி) மாண் - மாண்பு, புகழ்; மனிதம் - மனிதத்தன்மை; பூண்- அணிகலம். தமிழுக்குப் பொருளாகார் பொருள், பொருளன்று என்பது குறிப்பு.

பொருள்செய்வார் வேண்டின் பொதியத் தமிழை
இருள்செய்வார் தம்மை இகழ். 280

(பொ) உன்னைப் பொருளாக மதிப்பார் வேண்டும் என நீ விரும்பினால், பொதியம் என்னும் தென்மலைத் தமிழை இருட்டடிப்புச் செய்பவர் இவர் என இனம்கண்டு இகழ்வாயாக.

(வி) ஒளி செய்வாரைக் கண்டு பாராட்டாமை போலவே, இருள் செய்வாரைக் கண்டு ஒதுக்காமையும் கேடு என்று தெளிவித்தது இது.

தம்மை இகழத் தமிழை இகழ்வரேல்
அம்மை உறுக அவர். 281

(பொ) தமிழுக்கு இருட்டடிப்புச் செய்பவரை இகழ, அதற்கு அவர், தமிழை இகழ்வாரானால் வெதுப்புமிக்க அவர் அம்மை நோய் உறுவாராக.

(வி) தம்மை இகழ என்றது முந்தைப் பாடற் செய்தி. தம்மேல் குற்றம் உண்டாகியிருப்பவும் அவர் தமிழ்மேல் வெதும்பி உரைப்பது அடாச்செயல் ஆகலின், இவ்வாறு நொந்துரைத்தார். அவர் அவ்வாறு செய்யாராக என்பது உட்கிடை.

அவரும் இவரும் உவரும் எவரும்
கவரும் தமிழினைக் காண். 282

(பொ) அவராயினும் இவராயினும் இவ்விருவர்க்கும் இடையே இருப்பவராயினும் எவராயினும் அவரை யெல்லாம் கவரவல்ல தமிழைக் காக்கவும் வளர்க்கவும் கருதுவாயாக.

(வி) அவர்க்கும் இவர்க்கும் இடையே இருப்பவர் உவர்; அக்கரைக்கும் இக்கரைக்கும் இடைப்பட்டது உக்கரை; அதுபோல்வது. காண் என்பது கருது என்னும் பொருளது.

காண்போம் முழுக்குறள் கற்போம் வரப்பண்ணிப்
பூண்போம் ஒழுக்கப் பொறை. 283

(பொ) திருக்குறளை முழுமையாகக் கருதிப் பார்ப்போம்; அதனை மனப்பாடமாகக் கற்போம்; அதனை ஒழுக்க நெறியாகக் கொண்டு போற்றுவோம்.

(வி) வரப் பண்ணல் - மனப்பாடம் செய்தல். பூணல் - அணிகலம் போல் அணிதல்.

பொறையின்றி இல்லறப் பூட்டகம் செல்லா
உறையின்றி இல்லை ஒளி. 284

(பொ) பொறுமைக்குணம் இல்லாமல் இல்லறம் எனப்படும் வண்டி செல்லாது; அதுபோல், மாசகற்றும் நீர் இல்லாமல் பொருளுக்கு ஒளி இல்லை.
(வி) பொறை - பொறுமை; பூட்டகம் - பூட்டுதலை உடையது; அது வண்டி. 'இல்லறச் சகடம்' என்பது அறிக. உறை-அழுக்கை அகற்றும் நீர். 'புறந்தூய்மை நீரான் அமையும்' என்பது வள்ளுவம் (298).

ஒளிவாழ்வு வேண்டின் ஒருகுறளை யேனும்
தெளிவாழ்ந்து செய்தல் திறம். 285

(பொ) ஒளியுடைய வாழ்வு வேண்டுமென ஒருவர் விரும்பினால் அவர், ஒரோ ஓர் குறளையாவது தெளிவுடன் ஆழமாகக் கற்று, அதனைக் கடைப்பிடித்தல் சிறந்த முறையாகும்.
(வி) ஒரு குறளைக் கடைப்பிடித்தால் அதன் வழியே பல குறள்களின் பயன் கூடிவரும் என்பது உண்மையாகலின் அங்ஙனம் உரைத்தார்.

திறமை அடைவார் திருக்குறளைக் கற்பார்
குறைமை குறைவார் கொதித்து. 286

(பொ) திருக்குறளைச் செம்மையாகக் கற்பவர், வேண்டும் திறமைகளை யெல்லாம் அடைவார்; அதனோடு, செய்யும் தவறுகளுக்கு வருந்தி அத்தவறுகள் இல்லாதவரும் ஆவார்.
(வி) கொதித்தல் - இது செய்தோமே என வருந்துதல்; குறைமை-குற்றம். கொதிப்பு, குறையைக் குறைக்கும் வழியாகும்.

கொதிப்பு குறையின் குடும்பம் வளரும்
மதிப்புக் குறைவை மறந்து. 287

(பொ) ஒருவருக்கு ஒருவர் மதிப்புக்குறைவாக நடந்து கொண்டாலும் அதை மறந்து, மனவெதுப்புக் கொள்ளாது அரவணைத்துக் கொண்டால், குடும்பம் பலவகையாலும் பாராட்டுமாறு வளரும்.
(வி) இதனைக் கொள்ளாக்கால் குடும்பம் வளராததுடன் பழிப்புக்கும் பகைக்கும் இடமாகி நிற்கும் என்பதாம்.

மறந்தனம் என்னும் மனநினைவும் இல்லார்
சிறந்தனர் இல்லச் சிரிப்பு. 288

(பொ) குடும்பத்தில் பிறரால் உண்டாகிய மதிப்புக் குறையை

மறந்துவிட்டோம் என்னும் எண்ணமும் இல்லாமல் மறந்தவர் மிகச் சிறந்தவராவர்; அவர் இல்லம், எப்பொழுதும் மகிழ்வுடையதாக இருக்கும்.

(வி) 'மறந்தனம் என்பதும் இல்லார்' என்பது மிக அருமையாம்; சிரிப்பு - மகிழ்ச்சி.

சிரித்துக் கலகலெனும் செவ்வாயார் இல்லம்
அரித்துக் கரையாத ஆறு. **289**

(பொ) மகிழ்வாகச் சிரித்துக் கலகலப்பாக வாழும் சிறந்த வாயையுடையவர் கூடிவாழும் இல்லம், கரையை அரித்து அடித்துக் கொண்டு ஓடாத ஆறுபோல் அமைவுடையதாக விளங்கும்.

(வி) செவ்வாயார் என்றது, கடுமையில்லா இனிமை (இன்சொல்) வாயினர் என்று குறித்தது; காட்டாற்று வெள்ளம் கரையும் ஊரும் வயலும் தோப்பும் பாழாக்கல் அறிக.

ஆறும் வறளும்; அடுப்பும் அணையுமால்;
ஏறும் இறங்கும் இயல்பு. **290**

(பொ) நீர்ப் பெருக்குடைய ஆறும் ஒரு காலத்தில் வறண்டு கிடக்கும்; அணையாத அடுப்பும் வறுமையால் அணைந்து போகும். வாழ்வும் இவ்வாறே ஏற்றமும் இறக்கமும் இயல்பாக உடையதேயாம்.

(வி) ஏறுதல் இறங்குதல் உலகம் காணாத தன்று என்றும், அந்நிலையிலும் திடமாக வாழ்வதே வேண்டுவது என்றும் குறித்தது இது.

இயல்புக் கெதிர்ப்பும் எதிர்ப்புக் கியல்பும்
செயல்நலம் பார்த்துச் செயல். **291**

(பொ) இயல்பாக நிகழ்வதை எதிர்ப்பதும், எதிர்ப்பாக நிகழ்வதை இயல்பாகக் கொள்வதும் ஆகியவற்றைச் செய்வார் செயல்விளைவை எண்ணிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.

(வி) நலம் விளைப்பதை எதிர்ப்பதும், தீமை விளைப்பதை ஊக்குவதும் ஆகிவிடுதல் ஆகாது என்னும் எச்சரிப்பு இது.

செயலென எண்ணிச் சிறியனவும் செய்யேல்
கயலென ஆகுமோ கண். **292**

(பொ) எதையாவது செய்ய வேண்டுவதுதானே என்று எண்ணிச் சிறுமையான செயலையும் செய்தல் ஆகாது; கண்ணும் கயல்மீனும் தோற்றத்தால் ஒப்பாக இருப்பினும், செயல் நிலையால் ஒப்பானதாகுமோ?

(வி) 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்பது எண்ணிச் செய்க என்றார். கண்ணோட்டமிலாக் கண்ணே புண் எனின், கயல் ஒப்பிடத்தக்கதோ?

கண்ட படியெழுதும் கைவணக்கம் கொள்ளற்க
மண்டு தமிழ்கெடுக்கும் மை. 293

(பொ) மனம் போன போக்காக எழுதும் கைத்தாழ்ச்சியைச் கொள்ளாதிருப்பாயாக; அது, புகழ்மிக்க தமிழைக் கெடுக்கும் குற்றமாகும்.

(வி) கண்டபடி என்பது உள்ளது உள்ளபடி என்னும் பெயராலும், மனம்போன போக்காலும் எழுதுதல்., மண்டு தமிழ் - செறிந்த தமிழ்; மை - குற்றம்; இரட்டுறல் வகையால், எழுதும் மையையும் சுட்டியது.

மைதொட் டெழுதுமுன் மண்தொட் டெழுதுக
பொய்விட் டெழுதுக பொன். 294

(பொ) மையைத் தொட்டு எழுதுவதற்கு முன்னாக, திண்ணைப் பள்ளி வழக்கம் போல் மண்ணில் விரல் ஊன்றி எழுதப் பழகுவாயாக; அப்பொழுதே பொய்யிலா மெய்யையே எழுதிப் பழகுக; அதுவே பொன்னெழுத்தாம்.

(வி) எழுத்து அழகாக அமைதற்கு மண்ணில் எழுதும் பயிற்சி மிக உதவும். எழுத்துப் பயிற்சி இவ்வகையில் தருக என்றது இது.

பொன்னுடையார் எல்லாம் பொருளுடையார் ஆகாரே
என்னுடையர் ஈயா தவர். 295

(பொ) செல்வம் மிகவுடையவர் எல்லாரும் பொருட்டாக எண்ணத் தக்கவர் ஆவது இல்லை; ஈயாத கருமியர் எவ்வளவு செல்வம் உடையவர் எனினும் என்ன உடையவர் ஆவர்?

(வி) பொருட்டாக எண்ணத்தக்க செயலைச் செய்தற்கே பொருள் உள்ளது என்று கடமை புரிபவரே பொருளுடையவர் என்றது இது.

ஈயா தவரென் றிருப்பவர் சொல்லுவார்
ஈயா தவராயின் என். 296

(பொ) 'இவர் ஈகை இல்லாதவர்' என்று, பணம் இருப்பவர் சொல்லுவார்; பணம் இல்லாதவரை, 'ஈயாதவர்' என்று கூறுவதால் என்ன குற்றம்? இருந்தும் ஈயாமை அல்லவா குற்றம்?

(வி) செல்வம் இல்லாதவரை 'இவர் ஈயாதவர்' எனச் செல்வம் இருப்பவர் பழிப்பது பற்றிக் கவலைப்பட வேண்டியது இல்லை; அது குற்றம் ஆகாதே.

என்னென்ன சொல்லினும் இன்தமிழைக் கல்லாதார்
முன்னின்றாற் பொங்கும் முகம். **297**

(பொ) என்னென்ன காரணங்களைச் சொன்னாலும், இனிய தமிழைக் கல்லாதவர் வந்து முன்னே நிற்கும் போது, முகத்தில் சினம் பெருகவே செய்கின்றது.
(வி) கல்லாரைப் பற்றிய கடுப்பு அன்று; பன்மொழி கற்றுத் தமிழ் கல்லாரைப் பற்றிய வெறுப்பு இது.

முகமுடையார் எல்லாம் மொழியுடையார் அல்லர்
அகமுடையார் ஆழ்வார் தமிழ். **298**

(பொ) முகப்பொலிவுடையவர் எல்லாரும் மொழித் தேர்ச்சியும் உடையவரோ? அல்லர்; ஆனால், மனம் உடையவரோ தமிழில் ஆழ்ந்த பயிற்சி உடையவராக இருப்பர்.
(வி) முகப்பொலிவு மொழித்திறம் காட்டாது; அகப்பற்றுதலே மொழித் திறத்தைக் காட்டும் என்றார்; ஆழ்வார் - ஆழ்ந்து கற்பார்.

ஆழ்வார் தமிழிலும் ஆண்டாள் தமிழிலும்
வீழ்வார்க் குளதோ விதி. **299**

(பொ) ஆழ்வார்கள் பதினொருவர் பாடல்களிலும், ஆண்டாள் பாடல்களிலும் விருப்பங் கொண்டு பயின்றவர்க்குத் துன்புறுத்தும் விதி என்பது ஒன்றும் உண்டோ? இல்லை.
(வி) ஆழ்வார் பன்னிருவர் பாடல்களிலும் ஆழ்ந்தவர்க்குத் துன்பம் என்பதே இல்லை என்றது இது.

விதியில் மொழியெலாம் மேலாளக் காணும்
பொதியில் தமிழைப் புதைத்து. **300**

(பொ) பொதியமலைத் தமிழை மறைத்து, இலக்கண விதிகள் முறையாகக் கொள்ளாத மொழிகள் கூட மேலாண்மை செய்வதைக் காண்கிறோம்! இது என்ன காலக்கேடு?
(வி) இலக்கணம், இலக்கியம், சொல், வழக்கு ஆகியவெல்லாம் சிறந்த மொழியாகிய தமிழும், அவற்றில் எவ்வொரு வளமும் இல்லா மொழியின் ஆளுகைக்கு உட்பட்டு நிற்கும் நிலையுள்ளதே என நொந்துரைத்தது இது.

புதைத்தோம் சிதைத்தோம் புகழ்ந்தோம் தமிழை
உதைத்தோம் பிறர்யார்க் குரித்து. **301**

(பொ) தமிழை நாம் மூடி வைத்தோம்; அழித்தோம்; புகழ்ந்து பாடினோம்; புறக்கணித்தோம். இவ்வாறு செய்வதற்கு நமக்கில்லாத உரிமை வேறு எவர்க்கு உண்டு?

(வி) நம் தாய்மொழி அது ஆதலால் பிறர்க்கு இல்லாத உரிமை நமக்கே உண்டுதானே என எள்ளி நகைத்தது இது. அங்கத நடையது இது.

உரிமை யடைந்தும் உயர்நம் மொழிகள்
சிறுமைப் படுஉம் சிறப்பு. **302**

(பொ) அயலாரிடமிருந்து நாம் நாட்டு விடுதலை அடைந்தோம்; எனினும் உயர்ந்த நம் நாட்டு மொழிகள் சிறுமைப் படுத்தவேபடுகின்றன; இது விடுதலை பெற்றதன் சிறப்புப் போலும்!

(வி) நம்மொழிகள் என்றதால் தமிழேயன்றி நாட்டு மொழிகள் பிறவற்றையும் தழுவியுரைத்ததாம்; படூஉம் - செய்யுளிசை அளபெடை.

சிறந்த வரலாறு செல்தமிழுக் குண்டு;
குறைந்த வரலாறுங் கூறு. **303**

(பொ) உலகளாவப் பரவிச் சென்ற தமிழுக்கெனச் சிறந்த வரலாறு உண்டு. அது கிடக்க, அதன் நிலமும் பரவலும் குறைந்து சுருங்கிய வரலாற்றையும் மறவாது கூறுவாயாக.

(வி) செல்தமிழ் - பரவிச் சென்ற தமிழ்; செல்விருந்து, செலச் சொல்லல் போலும் திருக்குறள் நடையது இது. "குமரியோடு இமயத்து ஒரு மொழிவைத்து உலகு ஆண்ட" வரலாறு சுருங்கியது அறிக (சிலம்பு. 29:1).

கூறிய வேங்கடம் கோனொடும் போயிற்று
மாறிய கேரளம் மற்று. **304**

(பொ) குறைந்து போனது எனக் கூறப்பட்ட நிலப்பரப்பில் தமிழ் வேங்கடம் தமிழ் அரசும் இழந்து மொழியும் இழந்து போயிற்று; அவ்வாறே கேரளமும் மாறிப்போயிற்று.

(வி) தமிழ் மண்ணாக இருந்த பரப்பு ஆந்தரமாகவும், கேரளமாகவும் மாறியது உரைத்தது இது. மற்று - அசைநிலை.

மற்றுங் குமரி மலையொடு மூழ்கிற்று
பற்றும் முதுகோடி பாழ். 305

(பொ) இவ்வளவுதானா? மிக முற்படு காலத்தே குமரிமலை, பன்மலை, பஃறுளி முதலாகிய குமரிக் கண்டப்பரப்பு கடலுள் மூழ்கிப் போயிற்று; அண்மைக் காலத்தே, தொன்முதுகோடி எனப்பட்ட தனுக்கோடியும் பாழாகிப் போயிற்று.

(வி) ''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'' என்பது சிலம்பு (11:19-20). பற்றும்- ஒட்டிக் கொண்டிருந்த; முதுகோடி, புயலால் போயது.

பாழில் பிராகூய் பரவிய எல்லையும்
ஊழின் இழந்தோமோ ஓது. 306

(பொ) பழுதடைதல் இல்லாத பிராகூய் மொழி பரவியிருந்த எல்லையையும், இவ்வாறு கடற்பெருக்கால் இழக்க வேண்டிய நிலை இல்லாதிருந்தும் இழந்து விட்டோமே? ஏன்? கூறுவாயாக.

(வி) தமிழ் வழிப்பட்ட பிராகூய் மொழி வழங்கிய எல்லையையும் இழந்து போனோம். தமிழ் குறைந்த வரலாறு இது என்றது (303). பிராகூய், பலுசித்தானத்து வழங்கும் திராவிட மொழியாகும்.

ஓதுவார் ஓர்வார் உறைவட பாரதம்
ஆதி தமிழின் அணை. 307

(பொ) தமிழ் வரலாற்றைக் கற்பார் வலிய வட இந்தியப் பரப்பும் முன்நாளில் தமிழ் தங்கியிருந்த இடமே என்பதை அறிவார்.

(வி) ஓதுவார் வடபாரதம் தமிழின் அணை (என்பதை) ஓர்வார் என இசைக்க; ஓர்தல் - ஆய்ந்து அறிதல்; அணை - படுக்கை, அணைக்கட்டு; இரண்டும் தங்கியிருத்தல், வீற்றிருத்தல் சுட்டுவன.

அணைக்கட்டுச் சோழர் அயல்கிழக்கிற் கண்ட
துணைக்கட்டும் போயிற்றே தொக்கு. 308

(பொ) ஆற்றில் அணைக்கட்டுக் கட்டுங் கலையில் சிறந்து நின்ற சோழ வேந்தர் தொலைகிழக்கில் (தூர கிழக்கில்) கண்ட துணை இடங்களும் எல்லாமுமாகத் தமிழ் நிலம் எனப்படுதல் நீங்கிற்று.

(வி) கல்லணை சோழர்க்கு அழியாப் பெயர் தருவது ஆகலின், அணைக்கட்டுச் சோழர் எனப்பட்டார். துணைக்கட்டு- ஆட்சிக்கு உட்படுநிலம்.

தொக்குத் தமிழர் தொகைவாழ் இலங்கையும்
கக்குவா னாமோ கருது. 309

(பொ) மிகுதியான தமிழ் மக்கள் தொகையைக் கொண்டுள்ள இலங்கைத் தமிழ்நிலமும், கக்குவான் நோயுற்றானின் ஓயா ஒழியா இருமலெனப் பூசலும் போருமாகப் போகுமோ? அதனையும் எண்ணிப்பார்.

(வி) இலங்கையின் வடக்கும் வடகிழக்கும் முழுமையாகத் தமிழ்நிலமேயாம்; தெற்கும் தமிழர் ஆள் நிலமாக இருந்தமை வரலாறு.

கருதுவார்க் கில்லை கலக்கம் தமிழ்ப்பால்
பருகுவார்க் கில்லை பழுது. 310

(பொ) எந்த ஒன்றையும் எண்ணிப் பார்த்து முடிவு செய்ய வல்லவர்க்குக் கலங்குதல் இல்லை; அதுபோல், தமிழ் என்னும் உயர்ந்த பாலைப் பருகுபவர்க்குக் கேடு என்பது இல்லை.

(வி) தமிழைப் பால் என்றது, இளமை தொட்டு இறக்கும் வரையும் பருகும் இயற்கையது என்னும் குறிப்பினது.

பழுக்கா மொழியாளர் பார்பரவக் கண்டும்
இழுக்காத் தமிழாளர் என். 311

(பொ) முதிர்ச்சி யடையா மொழியினரும் உலக மெல்லாம் பரவுதலைக் கண்ணாரக் கண்டும், அந்நிலைக்குத் தம்மை இழுத்துச் செல்லாத தமிழர் என்ன தமிழரோ?

(வி) பழுத்தல் - முதிர்தல்; தமிழாளர் - தமிழால் ஆட்சிக்கு வந்தவர்; இழுக்காமை (இழுத்துச் செல்லாமை) இழுக்கு என்றது இது.

என்னை வினவின் எதுபடித் தாயென
உன்னை அறைவேன் ஒழுங்கு. 312

(பொ) எதனை நீ படித்தாய் என என்னைக் கேட்டால், யான் ஒழுக்கத்தைப் படித்தேன் என்று உனக்குச் சொல்வேன்.

(வி) உன்னை - உனக்கு; உருபு மயக்கம் எதுகை நோக்கி வந்தது; அறைவேன் - சொல்வேன். ஒழுங்கைப் படித்தலே படிப்பு என்றது இது.

ஒழுங்கு வரலாறு உலகுதமிழ்க் குண்டே
விழுங்கும் உமிழில்லை வெந்து. 313

(பொ) உலகளாவிய தமிழுக்கு ஒழுங்கான வரலாறு உண்டு; அது,

வெந்ததை விழுங்கி வெளியேற்றுவதுபோல் ஒழிவது அன்று.
(வி) விழுங்குதல் - உட்கொளல்; உமிழ்தல் - வெளியேற்றல்; வெந்து - சமைக்கப்பட்டு. 'வேளை உணவன்று; நாளை வென்றது தமிழ்' என்றது இது.

வெந்த சினத்தோடு வெற்பிமயம் விற்பொறித்து
வந்த புகழ்காண் வரவு. *314*

(பொ) கொதிக்கும் சீற்றத்தொடு இமயமலைக்குப் படையுடன் சென்று, அங்கே விற்குறியைப் பொறித்துவந்த புகழ்ப் பெருமையுடையது தமிழ் வரலாறாகும்.
(வி) இது சேரன் செங்குட்டுவன் செய்தி. 'தென்னகத்தார் படைகொண்டு வந்த போது எம்போலும் வேந்தர் இலரோ?' என்று பேசிய பழிச்சொல் கேட்டு இப்படையெடுப்பு நிகழ்ந்தது (சிலம்பு. 29:1).

வரவுக்கு மிஞ்சிய வள்ளல்கள் நாட்டின்
புரவுக்குத் துஞ்சினர் போர். *315*

(பொ) நாட்டு வருவாய்க்கு மேற்பட்ட அளவில் கொடைபுரிந்த வள்ளல்களாகிய அரசர்கள், நாட்டைக் காக்கும் காவற் கடமைக்காகப் போர்க்களம் சென்று போரிட்டு இறந்தனர்.
(வி) வரவுக்கு மிகுந்த வண்மையும், காவலுக்காகச் சாவதும் கருதிப் பார்த்துத் தெளிவு பெற வேண்டியவை என்றது இது.

போராடி வென்ற பொருள்கள் இசைஞர்க்குச்
சீராடிச் சென்ற செழித்து. *316*

(பொ) போர்க்களத்தில் பகைவரை வென்று கைப்பற்றிய பொருள்கள், புகழ்ந்து ஆடிப்பாடும் கலை வல்லவர்களுக்குச் சீர் சிறப்போடு வளமாகச் சென்றன.
(வி) புலவர், பாணர், கூத்தர் என்பார் இசைஞர் எனப்பட்டார். இத்தகு காட்சிகள் புறநானூற்றில் எண்ணற்றவை.

செழியன் எழுவரையும் சின்னப் பருவத்து
அழியப் பொருதான் அடர்த்து. *317*

(பொ) தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பான் தன் இளைய பருவத்திலேயே பகைத்து வந்த வேந்தர் எழுவரும் ஒருங்கே அழியுமாறு வலிமையாகப் போரிட்டு வென்றான்.

(வி) ''எழுவர் நல்வலங் கடந்தோய்'' என்பது செழியனைக் குடபுலவியனார் பாடிய புறப்பாட்டு (19). அவன் இளையன் என்பது அவன் சொல்லே (புறம். 72).

„அடர்த்தெழு கண்ணகி அல்லற வேந்தை
இடர்ப்படச் செய்தாள் எதிர்த்து. *318*

(பொ) கணவன் கொலைப்பட்டான் என்பதால் சீறி எழுந்த கண்ணகி, அறநெறி தவறிய வேந்தனை எதிரிட்டு வழக்காடி இறந்துபடச் செய்தாள்.

(வி) அல்லறம் - அறம் அல்லது; வேந்தன் - ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்; இடர்ப்படச் செய்தல் - சாவச் செய்தல்.

எதிர்ப்புக் கடங்கா இராமப் பெரியார்
கொதிப்புறு தன்மானம் கொள். *319*

(பொ) எத்தகைய எதிர்ப்புகள் கிளம்பினாலும் அவற்றுக்காக அஞ்சி அடங்கிப் போகாத இராமசாமிப் பெரியாரின் உணர்வுமிக்க தன்மானக் கொள்கையை நீயும் கடைப்பிடியாகக் கொள்வாயாக.

(வி) இராமப் பெரியார் - பெரியார் இராமசாமி; கொதிப்பு-உணர்ச்சி வேக்காடு; 'சுயமரியாதை' என்பது தன்மானத் தமிழ் ஆயிற்று.

கொள்கைப் பெரியார் குறித்த நெறிகூறித்
தள்ளினார் மூடம் தகர்த்து. *320*

(பொ) கொள்கையே உயிர்மூச்சாகக் கொண்ட பெரியார், தமிழர் உயர்வுக்குரிய வழிகளை எல்லாம் எடுத்துரைத்ததுடன், கண்மூடித்தனங்களை யெல்லாம் அழித்து அகற்றினார்.

(வி) பெரியார் - இராமப்பெரியார் (319); தகர்த்து - அழித்து; தள்ளுதல் - அகற்றுதல். நீயும் அப்பணி செய் என்றது இது.

தகரக் குழாய்போல் சடங்கு மதங்கள்
சிகரம் இழந்த சிதைந்து. *321*

(பொ) காது வெடிக்கக் குரலெழுப்பும் ஒலிபெருக்கிக் குழாய்களைப்போல் சடங்காகச் செயல்படும் மதங்கள், கொள்கைகளை இழந்து, சிறப்பையும் இழந்தன.

(வி) தகரக் குழாய் - ஒலிபெருக்கிக் குழாய்; உரைத்ததைப் பெருக்கி உரைக்கும் அது; அப்படிச் சொல்வதே கொள்கையான சமயங்கள். சிகரம் - உயர்வு.

சிதைந்தன நல்ல திரவிடச் சீர்மை
புதைந்தன ஆரியம் புக்கு. **322**

(பொ) ஆரிய மொழியும் ஆரிய நெறியும் புகுந்தமையால் சிறந்த திராவிடப் பண்பாடுகள் சிதைந்து போய்விட்டன; சிதைவோடு புதைந்தும் போய்விட்டன.
(வி) ஆரியம்புக்கு, திராவிடச் சீர்மை சிதைந்தன; புதைந்தன என இயைக்க; புக்கு - புகுந்து. இதன் விளக்கம் அடுத்து வருகிறது.

புக்கன சாதிகள் போய சமனிலை
நக்கன ஆரிய நச்சு. **323**

(பொ) ஆரியம் புகுதலால், சாதிப் பிரிவுகள் புகுந்தன; 'பிறப்பொக்கும்' என்னும் சமநிலை ஒழிந்தது; ஆரியம், தன் நச்சுப் பற்களைத் திறந்து வெற்றிச் சிரிப்பும் சிரித்தன.
(வி) நக்கன - நகைத்தன, சிரித்தன; சிரித்தன என்பதால் நச்சு என்பது நச்சுப் பற்கள் என்பதாம்.

நச்சு வருணங்கள் நற்றமிழ் ஏறின
துச்சப் புராணம் தொடர்ந்து. **324**

(பொ) ஆரிய வழிப்பட்ட பொய்ப் புராணங்கள் பெருக்கெடுத்து, நஞ்சனைய சாதிப் பிரிவுகள் நல்ல தமிழிலும் ஏறிப் பாழ் செய்தன.
(வி) புராணம் - தொன்மை; துச்சம் - பொய்மை, இழிமை; 'புராணம் இல்லையேல் புகழில்லை' என்று பரப்பப்பட்டுத் தமிழ்நெறிக்கு இழிவாக்கிய செய்தியைச் சுட்டியது இது.

தொடர்ந்தன வேள்விகள் தோற்றது பௌத்தம்
படர்ந்தன வேதப் படிப்பு. **325**

(பொ) ஆரிய வழக்குப் பரவுதலால் அழலோம்புதல் எனப்படும் வேள்விகள் எங்கும் நிகழ்ந்தன; அதனால் அதனைக் கண்டித்த பௌத்தம் இந்திய மண்ணில் தோல்வி கண்டது; அதற்கு மாறான வேதக்கல்வி விரிவடைந்தது.
(வி) படர்தல் - விரிதல்; வேதப்படிப்புக்கும், வேதம் படித்தவர்க்குமென அரசால் வழங்கப்பட்டவையே 'சதுர்வேதி மங்கலங்கள்' எனப்படும் ஊர்கள்.

வேதப் படிப்பில் வெறுப்பில்லை மேலோர்தம்
சாதித் தடிப்பே சழக்கு. **326**

(பொ) வேதப்படிப்பு என்பதும் ஒரு படிப்புத்தானே; அதனால், அதன்மேல் வெறுப்பு ஏற்படவில்லை; வெறுப்பாவதெல்லாம்

அதனைக் கொண்டவரின் சாதிவெறிக் கீழ்மைச் செயல்களேயாம்.

(வி) மேலோர் நூலில் இக்கீழ்மை ஆகாது என்பது இது. சழக்கு-பொய்; மாறாட்டுச் செயல்.

சழக்குகள் ஒன்றல சாதிப் பரதம்
உழக்கும் இகலை ஒழி. **327**

(பொ) நாட்டுக்குள்ள தொல்லைகள் ஒன்றல்ல; பல; அவற்றுள் சாதி எனப்படும் வெறியாட்டத்தால் உண்டாகும் போரை உடனே ஒழிப்பாயாக.

(வி) ஒன்றல என்றது பல என்பதாம். சாதிப்பரதம் - சாதிப்பிரிவு எனப்படும் கூத்து, உழத்தல் - உண்டாதல், வருந்தல். இகல்-போர்.

ஒழிந்தது சாதி உறுமத மாற்றம்
அழிந்தது கேட்பின் அழகு. **328**

(பொ) சாதி வெறி ஒழிந்தது; வல்லாண்மையாகச் செய்யப்படும் மதமாற்றமும் அழிந்தது; என்பதைக் கேட்க வாய்த்தால், அதுவே அழகாகும்.

(வி) உறு மதமாற்றம் - நலிதலாலும், வலித்தலாலும் மதமாற்றம் நிகழப்பெறுதலின் 'உறு' என்றார்; மிக என்றுமாம்.

அழகுடைமை யாதெனின் யாரொடும் ஒன்றிப்
பழகுடைமை பாரதப் பற்று. **329**

(பொ) அழகுடைமை என்பது எது என்றால் எவரொடும் உள்ளம் ஒன்றிப் பழகுதலை மேற்கொள்வதேயாம்; அது, பாரதம் ஒருநாடு என்னும் ஒருமித்த பற்றால் உண்டாவதாகும்.

(வி) தனித்தனி மண்பற்றும், பிரிவு பிளவுப் பற்றும் உண்டானால் அது பாரதம் என்னும் ஒருமையைக் கெடுத்துவிடும் என்றது இது.

பற்றுடையார் தேர்தற் பகட்டுடையார்; செந்தமிழை
விற்றுடையார்; நாட்டின் விதி. **330**

(பொ) பற்றுடையவர்களாக இருப்பவர்களும் தேர்தல் மினுக்கிகளாக உளர்; அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும் செந்தமிழை விற்று முதலாக்குபவர்களாகி விடுகின்றனர்; இதுதான் இந்நாட்டின் விதிபோலும்!

(வி) மொழி நாடு நலங்கருதிய பற்றும் நாளடைவில் தன்னலப் பற்றாகிவிடும் கெடு நிலையைச் சுட்டிக் காட்டியது இது.

விதியென்று பேசி வினைமடிந்து சாவார்
நிதியறியார் ஏழை நிலை. **331**

(பொ) எல்லாம் விதியே என்று சொல்வார்; செயலாற்றுதல் இல்லாமல் இறப்பார்; இவர் செல்வம் என்பதும் அறியார்; ஏழ்மையையே நிலையாக்கிக் கொண்டவர் இவர்.

(வி) "வெந்ததைத் தின்று விதி வந்தால் போக" என்பவர்க்கு முயற்சி உண்டாகுமா? வினை - செயல்; ஊழையும் வெல்லும் முயற்சி இவர்க்கு எப்படி உண்டாகும்? அதற்குச் சான்று வரும்பாட்டு.

ஏழை நிலையறிந்தார் எந்தை பெரியாரை
ஊழை மறுத்தாரை ஒப்பு. **332**

(பொ) ஏழை நிலை என்பது விதியால் வருவது அன்று என்பதை அறிந்தவர், எம் தந்தையாராம் பெரியார் இராமசாமியாரை- ஊழையும் மறுத்த துணிவாளரை ஒப்புக்கொண்டு துணிந்து வெல்க.

(வி) அறிந்தார், பெரியாரை, மறுத்தாரை ஒப்பு(க) என இயைக்க. ஊழ் என்பது ஆசிரியரால் வினை (விதி) என்னும் பொருளிலேயே ஆளப்படுகிறது.

ஒப்புக்குக் கூடி உயர்சாதி என்பாரின்
தப்புக்கு வேதமோ சான்று. **333**

(பொ) போலியாக ஒப்பானவர்போல் கூடிக்காட்டி, மனத்துள் நாங்கள் உயர்ந்த சாதியினர் என்பவர்களின் தவறான வழிகளுக்கு வேதம் சான்றாகாது.

(வி) இவர் தப்புக்கு வேதம் சான்றாகாது என்றது இது. இவர் தப்பை வேதத்தின் மேல் தப்பாகக் காட்டுதல் தப்பு என்பதும், அதனைக் காட்டித் தப்பித்துக் கொள்ளுதல் தப்பு என்பதும் இவர் கருத்து.

சான்றாகச் சொல்வதெலாம் தாந்தழைக்க என்பதலால்
ஊன்றாக நில்லார் உணர். **334**

(பொ) வேதத்தைச் சான்றாகக் காட்டுவதெல்லாம் தாம் நன்மைபெற வேண்டும் என்னும் தன்னலமே அல்லாமல், அவ்வேதத்தில் கூறிய பிற கருத்துகளை ஏற்று நிற்கவும் மாட்டார்; இதனை உணர்வாயாக.

(வி) வேதச் சான்று என்று கூறுவது தன்னலத்திற்காகவே என அவ்வாறு கூறுவாரை மறுத்தது இது.

உணர்ந்தால் எதிர்ப்பரோ உன்தமிழால் கோயில்
வணர்ந்து வழிபடும் வாழ்வு. 335

(பொ) உன் தாய்மொழியாம் தமிழால் கோயிலைச் சுற்றி வழிபடும் நலத்தை மெய்யாக அறிந்தால், வழிபாட்டுக்கு அது ஆகக்கூடாது என்று எதிர்ப்பார்களோ? மாட்டார்.

(வி) உன்தமிழ்; உன் கோயில்; உன் வழிபாடு; இதில் அவர்க்கென்ன இடையாட்டம்? என்றது இது. ''உணராமல் எதிர்க்கவில்லை; தம் நலம் உணர்ந்தே எதிர்க்கின்றனர்'' என்பது குறிப்பு.

வாழ்வுக் குகவா வறட்டு மரபுகள்
பாழ்வுக் கிணற்றின் படி. 336

(பொ) வாழ்க்கைக்குப் பொருந்தி வராத பயனற்ற வழக்கங்கள், பாழுங்கிணற்றுக்கு உள்ளபடிகளைப் போன்றனவாம்.

(வி) பாழுங்கிணற்றுப் படிகளின் பயன் உள்ளிறங்க வழிகாட்டி உள்வாங்கி அழிப்பதேயாம். பாழ்வு - பாழ் செய்யும்; தான் பாழ்பட்டுப் பிறரையும் பாழ்படுத்துவது.

படிக்க வழிசெய்தார் பார்புகழ் காமர்
அடிக்கவோ மூடவோ அன்று. 337

(பொ) நாடு புகழ் காமராசர், மூடப்பட்ட பள்ளிகளைத் திறந்து படிப்பதற்கு வழி செய்தார்; பள்ளி என்பது படிக்கவந்தவரை அடிப்பதற்கோ, படிக்கவிடாமல் மூடி விடுவதற்கோ ஏற்பட்டது அன்றே.

(வி) ஒருவேளை பள்ளியும் ஒரு வேளை குடும்பத் தொழிலும் (குலத்தொழில்) என அறிஞர் இராசாசியால் கொண்டுவரப்பட்ட கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பள்ளிகள் எல்லாம் மூடப்பட்ட போது, அவற்றை மீண்டும் திறக்கச் செய்தவர் காமராசர்.

அன்றன்று பாடம் அறிவோடு கற்பித்தால்
என்றென்றும் வாழும் இனம். 338

(பொ) அன்றன்று படிக்க வேண்டும் பாடத்தை அறிவுத் திறத்தோடு மாணவர்க்குக் கற்பிப்பதைக் கடமையாகக் கொண்டால், நம் இனம் என்றென்றும் நன்றாக வாழும்.

(வி) ஒரு நாளில் ஒன்பது நாள் பாடம் கற்பித்தலும், பின்னர்ப் பாடத்தைத் தொடாமலே பலநாள் கழித்தலும் என்னும் கற்பிப்பு நிலைக்கேட்டைக் கருதி உரைத்தது இது.

இனப்பற் றிலாஅத இந்தியன் நாயார்
சினப்பற்று தேர்வான் சிறுத்து. **339**

(பொ) இந்தியன் என்னும் ஒருமித்த நாட்டுப்பற்று இல்லாதவன், நாய் கொள்கின்ற பொருளற்ற குரைப்புப் போலச் சினத்தில் தலைப்பட்டுச் சிறுமையுறுகின்றான்.

(வி) இந்தியன் என்னும் இனப்பற்று இருப்பின், பல்பிரிவுத் தன்னல வெறியனாய் இருக்க மாட்டான் என்றது இது; நாயார் -ஆர்; சிறப்பு ஈறு; இலாஅத - செய்யுளிசை அளபெடை.

சிறுமை தமிழெனச் செப்புவார் வீந்து
மறுமையை எய்தாரோ மற்று. **340**

(பொ) தமிழ் இழிந்தோர் பேசும் சிறுமொழி என்று சொல்லுபவர் இன்றும் உள்ளனரே; அழிந்து தொலைந்து போகமாட்டாரோ?

(வி) தமிழ் வட்டார மொழி என்றும், இழிசனம் மொழி என்றும், ஒலிநிரம்பா மொழி என்றும், வடிவு திருந்தாமொழி என்றும், கோயிலுக்கும் இசைமேடைக்கும் அறிவியலுக்கும் ஆகா மொழி என்றும் சிறுமைப் படுத்துவாரை நினைந்து நொந்துரைத்தது.

மற்ற மொழிகள் மயக்கறக் கற்கதன்
சுற்ற மொழியைத் தொடர்ந்து. **341**

(பொ) தன்மொழியுடன், தன் மொழியின் சுற்றமாய் அமைந்த மொழிகளைக் கற்று, அதன்பின் அயல்மொழிகளையும் தெளிவுடன் கற்பாயாக.

(வி) தாய்மொழியை முதன்மையாகவும், அதன் தொடர்பான மொழிகளை அடுத்தும், அதன்பின் அயல்மொழிகளையும் கற்க என மொழிகற்கும் முறை கூறியது இது.

தொடர்பு வடமொழி தொன்றுதொட் டுண்டால்
இடருடன் ஆக்கம் இணைந்து. **342**

(பொ) பழங்காலந் தொட்டே தமிழுக்கும் வடமொழிக்கும் தொடர்பு உண்டு; அதே பொழுதில் அதனால் தீமையும் நன்மையும் இணைந்திருத்தலும் உண்டு.

(வி) தொல்காப்பியர் நாளிலேயே வடசொல் தமிழில் வருவதற்கு வரம்பு கட்டப்பட்டுள்ளமையால் அதன் பழந்தொடர்பு விளங்கும்; இடருடன் ஆக்கப் போராட்டம் என்றும் இருந்தே உள்ளது. 'தனித்தமிழ் இயக்கம்' என்னும் எம் நூல் காண்க. இப்பதிப்பக வெளியீடே அது.

ஆக்கம் சிலவால் அழிவு பலவாமால்
போக்கும் வரவும் புதிர். 343

(பொ) வடமொழி வரத்தால் தமிழுக்கு உண்டாகிய ஆக்கம் (நன்மை) சிலவேயாம்; ஆனால், அதனால் நேரிட்ட அழிவோ மிகப் பலவாம்; அதன் வரவும் செலவும் விடுகதையாகவே உள்ளது.

(வி) ஆக்கம் x அழிவு; போக்கு x வரவு; புதிர் - வெளிப்பட விளங்காதது. தொல்காப்பியத்தில் வரும் 'பிசி' - 'பிதிர்' ஆகிப் 'புதிர்' என்றாகியது. ஆல் - அசைநிலை.

புதிர்களுள் ஒன்று பொருந்தா வருணம்
எதிரும் தமிழின் இடத்து. 344

(பொ) வெளிப்பட விளங்காமல் புகுந்த சிக்கல்களுள் ஒன்று பொருந்தாச் சாதிப் பிரிவாகும்; தமிழகத்து வழக்குக்கு அது எதிரானதாகும்.

(வி) வருணம் - நிறம்; சாதி. எழுத்துகளுக்கும் பாக்களுக்கும் கூட வருணப் பகுப்புச் செய்தனர் என்றால் மக்களை விட்டு வைப்பாரா? இன்றும் விட்டொழிக்க இயலாச் சிக்கலாக அல்லவோ உள்ளது.

இடத்தால் திணைகண்ட எந்தமிழர் சாதி
மடத்தால் இழந்தார் மதிப்பு. 345

(பொ) மலை, காடு, வயல், கடல் என இடத்தால் ஒழுக்கப்பிரிவும் தொழிற்பிரிவும் கண்ட எம் தமிழ் மாந்தர், வடக்கின் வழிப்பட்ட சாதியை மேற்கொண்ட மடமையால் தமக்கிருந்த பெருமையை இழந்துபோனார்.

(வி) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலப் பிரிவும், வாழ்வியல் தொழில் ஒழுக்கப் பிரிவுகளும் கண்ட இம்மண், மாற்றுவழிக்கு இடந்தந்து மடம்பட்டமை உரைத்தது இது.

மதிப்புக் குரிய வடமொழி நம்மால்
புதிப்பிக்கப் பட்ட பொருள். 346

(பொ) மதிப்புக்கு உரியதாக இன்று சொல்லப்படும் வடமொழி, நம் தமிழ் மொழியால் புதுப்பிக்கப்பட்ட பொருளே ஆகும்.

(வி) சமற்கிருதம் என்பதன் பொருள் புதுப்பிக்கப்பட்டது என்பதேயாம். இதனை விரிவாகப் பாவாணர் எழுதிய வடமொழி வரலாற்றில் காண்க.

பொருளென எண்ணும் புலமைத் தமிழர்
தெருளெனக் கற்றார் சிறந்து. *347*

(பொ) புதுமையைப் பொருளாக எண்ணிய புலமைமிக்க தமிழர்கள், அதில் தெளிவுற வேண்டுமெனச் சிறப்பாகக் கற்றனர்.

(வி) புதுமையை விரும்புதல் எவர்க்கும் பொது எனினும் தமிழர்க்கோ பொருளற்ற புதுமைப் பற்றுண்டு என்பது, அவர் அப்பற்றால் கெடும் கேடுகளாலேயே நன்கு புலப்படும். தெருள் - தெளிவு.

சிறந்த வடநூல்கள் தென்தமிழ்ப் பட்ட
துறந்த தனிமை தொலைந்து. *348*

(பொ) சிறந்த வடநூல்கள் எனப்படுவன எல்லாம், இனிய தமிழ்வழி வெளிப்பட்டனவே. அதனால் தன் தனித்தன்மை நீங்கி அகன்றன.

(வி) தென்கலைச் செல்வங்களும் கருத்துகளும் வடமொழிச் சொல்லில் வடிக்கப்பட்டமையால் பொருளால் அதன் தனித்தன்மையும், சொல்லால் இதன் தனித்தன்மையும் கெட்டன. இது முன்னதற்கு ஆக்கமும் பின்னதற்குக் கேடும் ஆயிற்று.

தொல்லைச் சகுந்தலை சொற்றமிழ் ஆயினாள்
வல்லை மறைமலை வாய்த்து. *349*

(பொ) மும்மொழிப் புலமையில் தேர்ந்த மறைமலையடிகளார் பிறப்பால், பழமையான வடமொழிச் சகுந்தலையாள், தென்தமிழ் வடிவுடையவளானாள்.

(வி) வடமொழியால் தமிழ்பெற்ற ஆக்கம் குறித்தது இது. தமிழ் ஆங்கிலம் வடமொழி என்னும் மும்மொழிப் புலமையர் அடிகளார்.

வாய்த்த பொருள்நூல் வளர்தமிழ் வந்தநற்
கூர்த்த மணியினைக் கொண்டு. *350*

(பொ) இருமொழியில் நல்ல கூர்மையான புலமையைக் கொண்ட பண்டித மணியைக் கொண்டு, வடமொழியில் பிறந்த பொருள் நூல் வளர்ந்த தமிழுக்கு எய்திற்று.

(வி) தமிழ் வடமொழி என்னும் இருமொழிப் புலமையும் நூல்நயம் நுனித்துக் காணும் திறமும் பெற்றவர் பண்டிதமணி மு.கதிரேசனார். சாணக்கியரின் அர்த்த சாத்திரத்தைப் பொருள்நூல் என மொழியாக்கம் செய்தவர் அவர்.

கொண்டபோர்க் கீதை குளிர்தமிழ் ஆயிற்று
தொண்டர் பவனாந்தர் தொட்டு. 351

(பொ) பாரதப் போர்க்களத்தில் எழுந்த பகவத்கீதை, வேதநெறித் தொண்டர் சித்பவானந்தர் கைப்படுதலால், குளிர்ந்த தமிழ்க் கீதையும் ஆயிற்று.

(வி) கண்ணன் பாரதப் போர்க்களத்தில், செயலொழிந்து நின்ற அருச்சுனனுக்கு அருளியது எனப்படுவதால் 'கொண்ட போர்க்கீதை' என்றார்.

தொட்டுக் கிடந்த தொலைவில் புராணங்கள்
மட்டுத் தமிழாம் மலிந்து. 352

(பொ) புனைந்து கூறுதலை இடமாகக் கொண்டமைந்த எண்ணிலாத் தொன்ம (புராண) நூல்கள் பெருகியதால் தமிழ் வளராத நிலையில் மட்டுப்பட்டு நின்றது.

(வி) தொலைவு இல் - எண்ணத் தொலையாத; மட்டு - எல்லை; வளராமல் ஓர் எல்லையில் நின்ற நிலை; மட்டு என்பதற்குத் 'தேன்' பொருள் கொள்ளல் கூடாது என்பதற்கு அடுத்துவரும் குறள் சான்று.

மலிவுப் புராணம் மடமை தரினும்
வலிவு மொழிக்கு வளம். 353

(பொ) திருக்கோயிலுக்குப் பெருமை புராணப் புகழே என்னும் பிற்காலக் கருத்தால் பெருக்ய புராணம் அறியாமையைத் தந்தது எனினும், மொழிக்கு வலிமையான வளமாகவும் அமைந்தது.

(வி) சொல்லாட்சி, அணிநயம், பொருள் விளக்கத் திறம் என்பவை அவை தந்த மொழிவளமாம்; அகற்ற முடியா அறியாமைக்கு இடம் தந்தது கேடாம்.

வளஞ்சால் வடமொழி வாய்வழக் கற்றும்
துளங்கா தமிழின் துணை. 354

(பொ) வளம் நிரம்பிய வடமொழி பேச்சு வழக்கில் இல்லாமல் போகியும், தமிழ்பட்ட அலைக்கழிப்பு அளவுக்கு அலைக்கழிப்புப்படவில்லை.

(வி) இருவகை வழக்கிலும் என்றும் சிறந்து விளங்கும் தமிழ், தெய்வத் தமிழ் எனப் போற்றப்படும் தமிழாகவும் இருந்தும், திருக்கோயில் மொழியாக இன்றும் இல்லாத அளவு வடமொழிக்கு அலைப்பு இல்லையல்லவா!

துணையென வந்த தொகைமொழிகள் வீட்டுள்
மணையென லான மகிழ்ந்து. **355**

(பொ) தமிழ்நிலமே வாழ்வுக்குத் துணையென வந்து இவண் தங்கிவிட்ட மொழிகள், தமிழ் வீட்டினுள் (நாட்டினுள்) இருப்பு - படுக்கை-க் கட்டில்களைப் போட்டு, இருந்தும் படுத்தும் மகிழலாயின.

(வி) தமிழர்க்குள் ஏற்பட்ட பிணக்கைத் தீர்க்க ஒருவர் சார்பில் துணையாக வந்து தங்கிய என்பதுமாம். வரலாறு காட்டும் செய்தி இது. கருநாடக தெலுங்கு இசைகள் தமிழிசையைத் 'துக்கடா' வாக்கியமை அறிக.

மகிழ்வு கொடுத்தனர் மற்றையோர் அல்லர்
புகழ்வுத் தமிழர் புரி. **356**

(பொ) மற்றையோர் மொழிக்கும் வழிக்கும் வாழ்வுக்கும் இடந்தந்து மகிழ்வித்தவர் அயலார் அல்லர்; புகழ்ச்சிக்கு உரியவர் எனச் சொல்லப்படும் தமிழர்களே என்பதைப் புரிந்து கொள்வாயாக.

(வி) மகிழ்வு கொடுத்தனர் என்பதன் முன் இடந்தந்து என இயைக்க; புகழ்வு - புகழ்ச்சி.

புரியாத் தமிழர் பொதுவாய்த் தமிழர்
வெறுவாய்த் தமிழர் விளம்பு. **357**

(பொ) செய்வது என்னவென்று விளங்காத தமிழராகவும், பொதுபொது என்று பேசும் வாய்வீச்சுத் தமிழராகவும், எதுவும் செய்ய இயலாத வெட்டித் தமிழராகவும் இன்று தமிழர் உள்ளனர்; இந்நிலையில் என்ன செய்வதெனக் கூறு.

(வி) வெறுவாய் - வெறுமை; வெட்டித்தனம்; பொதுபொது என்று சொல்லித் தமிழைக் கெடுப்பவர் பொதுவாய்த் தமிழர்.

விளம்பரம் செய்தென்கொல் வெல்தமிழே யாண்டும்
களம்பரம் ஆக்கல் கருத்து. **358**

(பொ) பெரிதாக இவ்வாறு எடுத்துச் சொல்வதால் என்ன பயன்? வெற்றி பெறத்தக்க தமிழே எங்கும் தனக்குரிய உயர்ந்த இடத்தைப் பெறுமாறு செய்தல் வேண்டும் என்பதே கருத்தாகும்.

(வி) விளம்பரம் என்றது இவ்வாறு தமிழ் பற்றிப் பன்னிப் பன்னி எடுத்துக் கூறுவது; களம் - இடம்; பரம் - உயர்வு.

கருத்துடையார் செந்தமிழ்க் கண்ணுடையார் நெஞ்சம்
பருத்துடையார் ஒல்லார் பணிக்கு. 359

(பொ) சிந்தனையாளரும், செந்தமிழ்ப் பணிக்கண் உள்ளாரும், நெஞ்சத்தில் தடிப்புடையாரும் தமிழ்ப்பணியில் பொருந்தினார் அல்லர்.

(வி) தமிழ்த் தொண்டில் தலைப்பட வேண்டுவாரும் தலைப்படாதிருக்கும் தமிழக நிலை சுட்டியது இது; தம் தொழிலே தமிழ் கற்பித்தலாக உடையவர் 'செந்தமிழ்க் கண்ணுடையார்' எனப்பட்டார்.

பணிக தமிழ்முன் பயில்க அவைநூல்
துணிக ஒருசட்டத் துப்பு. 360

(பொ) தமிழ் கற்றார் - தமிழ்த் தொண்டர் - முன், பணிவு கொள்வாயாக; சங்க நூல்களைக் கற்றுத் தெளிவாயாக; தமிழ் வளர்ச்சிக்குரிய ஒப்பற்ற சட்டத்தின் பாதுகாப்பைத் துணிந்து தருவாயாக.

(வி) தமிழ்முன் பணிக என்றது, தமிழ் வல்லாரையும் தொண்டரையும் என்பதாம்; ஆகுபெயர். அவை - சங்கம்; கழகம். துப்பு - வலிமை; என்றது பாதுகாப்பு.

துப்பாக வேண்டின் தொடர்தமிழ்ச் சட்டங்கள்
உப்பாக வேண்டும் உணர். 361

(பொ) தமிழ் உரிய வலிய பாதுகாப்புடன் விளங்க வேண்டுமானால், அதற்குத் தக்க சட்டங்கள் உரிய அளவால் உண்டாக்கப்படல் வேண்டும்; இதனை உணர்வாயாக.

(வி) தொடர் - தொடர்பான; உரிய. உப்பு - சுவை. 'அளவில் குன்றின், ஆகாது நலம்' என்பாராய், அளவு சுட்ட உப்பு என்றார்.

உணர்வார் உடன்படுவர் ஒண்தமிழ்க்கு ஈண்டை
இணையாகும் சட்டம் எதற்கு. 362

(பொ) உணர்வுடையவர்கள், "ஒளிதமிழுக்கு ஒப்பாக மற்றொரு மொழிக்கும் பாதுகாப்புச் சட்டம் எதற்காக" என்று யான் வினாவுதற்கு (அவரும்) உடன்படுவர்.

(வி) இருமொழித் திட்டம் என்று சட்டமாக்கவும் வலியுறுத்தவும் வேண்டுவதில்லை; ஒரு மொழித் திட்டம் - தாய்மொழித் திட்டம் - என்பதே ஆசிரியர் கொள்கை. 133-காண்க.

எதற்கும் தமிழ்ச்சட்டம் இந்நிலத்து வேண்டின்
அதற்கும் எதிர்ப்போ அறிவு. **363**

(பொ) தமிழைப்பற்றிய எதனை நடைமுறைப்படுத்தவும் இத்தமிழ் நாட்டிலே சட்டம் வேண்டும் என்றால், அதற்கும் எதிர்ப்புக் காட்டுவதோ? ஈதென்ன அறிவாகும்!

(வி) இந்நிலத்து மொழிக்கும் சட்டம் வேண்டியநிலை, அதற்கும் எதிர்ப்பாம் நிலை; பொருந்தா இவ்விரு நிலைகளைப் பற்றி வருந்திக் கூறியது இது.

அறிஞர் கொதிப்பார் அகன்தமிழ் நாடு
குறுகிச் சிறுகிய கூன். **364**

(பொ) அகன்று விரிந்து கிடந்த தமிழ்நாடு காலம் காலமாகக் குறுகலாகியும் சிறுத்தும் கூனிப்போனதை அறியும் அறிஞர், அதற்காகக் கொதிப்பு அடையவே செய்வர்.

(வி) அப்படிக் கொதிப்பதன் பயன், அதன் குறுகலுக்கும் சிறுகலுக்கும் கூனலுக்கும் மேலும் இடமாகிவிடக் கூடாதே என்பதேயாம்.

கூனாய்க் குறையாய்க் குறிசுருக்குப் பையளவாய்ப்
போனாய் தமிழகமே பொய்த்து. **365**

(பொ) கூனலாகவும் குறைந்து போனதாகவும் குறுகிய சுருக்குப்பை அளவாகவும் தமிழகமே பொருளற்றுச் சுருங்கிப் போனாய்.

(வி) பணம் வைப்பதற்காக நாட்டுப்புறத்தார் பயன்படுத்தும் சுருக்குப்பை அளவு என்றார். இன்றும் அப்பை மறந்துவிடவில்லை;- பணம் வைக்கும் பரியமடிப்புப் பையும் உண்டாகலின் அதனை விலக்கக் 'குறிசுருக்குப் பை' என்றார். குறுகியது குறி.

பொய்யில் புலவோர் புகழ்பொதிந்த பெட்டகமே
மெய்யில் தமிழினமே மீள். **366**

(பொ) பொய்யில் புலவர் எனப்படும் வள்ளுவனாரின் புகழ்மிக்க அறிவுத்திரள் பொதிந்து கிடக்கும் திருக்குறளையுடைய மொழியே, தமிழினமே உன் மெய்யான நிலைக்கு மீள் வாயாக.

(வி) ''பெட்டகமே இனமே மெய்யில் மீள்'' என இயைக்க. பெட்டகம் - பேழை; திருக்குறளைத் தன்னிடத்துக் கொண்ட பேழை தமிழாகலின், பெட்டகமே என்றது மொழியைக் குறித்ததாயிற்று.

மீட்சி யுளதோ மொழிக்கலப்பால் வேங்கடத்தின்
ஆட்சி யிழப்பை அறி. **367**

(பொ) மொழிகளைக் கலந்து பேசுவதாலும் எழுதுவதாலும்

வரப்பெறும் நன்மை எதுவும் இல்லை; மீளாத் தீமை உண்டு. மொழிக் கலப்பால் வேங்கடப் பகுதி ஆட்சியை நாம் இழந்து போனதை அறிவாயாக.

(வி) ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்'' எனப்பட்ட வேங்கடம் நம்மை விட்டுப் போனதை அறிக என்கிறார்.

அறிவாய் கலந்த அயலொலியால் சேரல்
தனியாய்ப் பிரிந்த தவறு. 368

(பொ) அயலொலி கலந்தமையால், தமிழகத்தின் சேரநாடாக இருந்த மலைநாட்டுப் பகுதி, கேரளமாகப் பிரிந்து போன தவற்றையும் அறிவாயாக.

(வி) ஆந்திரம் கேரளம் ஆகியவற்றைக் குறிப்பிட்டமை கொண்டு கருநாடகம் பிரிந்து சென்றதும் கொள்க.

தவற்றுக் கலப்பால் தமிழ்நிலம் விட்டோம்
கவற்றுப் படையெடுத்தோ காட்டு. 369

(பொ) தவறாக ஏற்றுக் கொண்ட மொழிக் கலப்பினால்தானே தமிழ்நிலமாக இருந்தவற்றை ஆந்திரம் கருநாடகம் கேரளம் எனத் தனியே செலவிட்டோம்; அவை வஞ்சத்தால் படையெடுத்து வந்தோ பிரிந்தன? இல்லையே. இவை மொழிக்கலப்பு ஆகாது என்பதற்கு எடுத்துக்காட்டு அல்லவோ!

(வி) கவற்றுப்படை எடுத்தோ - சூழ்ச்சிப்படை எடுத்தோ; வருத்தும் படை எடுத்தோ என்றுமாம். காட்டு-எடுத்துக்காட்டு.

காட்டும் பயனென் கலப்பொலி நீங்காதேல்
மீட்டும் நிலக்குறை வெட்டு. 370

(பொ) எடுத்துக் காட்டுவதால் என்ன பயன்? அக்கலப்பொலி நீங்காது இருக்குமானால் தமிழ்நிலம் மீளவும் குறைந்து பிரிந்து போகவே செய்யும்.

(வி) கலப்பொலி - மொழிக்கலப்பு; நீக்கப்பட வேண்டும் மொழிக் கலப்பை; இல்லையேல், நிலப்பரப்புக் குறையாமல் போகாது என்று வற்புறுத்திக் கூறியது இது.

வெட்டி நிலங்கரைய வேண்டேல் மொழித்தூய்மை
கட்டித் தலைக்காக்கை கற்பு. 371

(பொ) மொழிக் கலப்பால் நிலப்பகுதி பிரிந்து குறைந்து போவதை விரும்பாதே; மொழித் தூய்மையைத் தலைமையாகக் கட்டிக் காத்தலே கற்ற கல்விப் பயனாகும்.

(வி) ''செய்தக்க அல்ல செய்க்கெடும்; செய்தக்க செய்யாமை

யானும் கெடும்'' (குறள். 466) என்பதை வலியுறுத்தியது இது. கற்பு - கற்றுக் கொண்டது.

கற்புடைமை யாதெனின் கைந்நிலமும் குன்றாமல்
நிற்புடைமை நீண்ட பொறுப்பு. 372

(பொ) ஒரு மொழியின் மைந்தர் கடைப்பிடியாகக் கொள்ள வேண்டியது எது எனின், அம்மொழி வழங்கப்படும் நிலப்பரப்பில் ஒரு கையளவு நிலம் தானும் குறையாமல் நிலைபெறக் காக்கும் பெரும் பொறுப்பேயாம்.

(வி) கற்புடைமை - உறுதிப்பிடி, திண்மை; கைந்நிலம் - கையளவு நிலம்; நிற்பு உடைமை - நிற்றல் உடைமை; ''தண்டமிழ் வேலித் தமிழ்நாடு'' என மொழிப்பரப்பே நிலப்பரப்பு என்னும் பரிபாடல் கருதுக.

பொறுப்பின்றிச் சொல்வார் பொதுமை தமிழுக்கு
உறுப்பின்றித் தைக்கும் உடை. 373

(பொ) தமிழுக்கு எனச் சிறப்புத் தரவேண்டியது இல்லை; பொதுப்பார்வை போதும் என்பவர் பொறுப்பற்றுச் சொல்பவர் ஆவர்; மேலும் உறுப்புகளுக்குரிய தனித்தனிப் பகுதி இல்லாமல் தைத்த உடைபோன்றது அவர் உரை.

(வி) தலைக்கு என கைக்கு என காலுக்கு என அளவெடுத்துத் தைக்காமல் பொதுவாக ஒரு பையாகத் தைத்த உடை, உறுப்பின்றித் தைத்த உடை.

உடைய தமிழ்நூல்கள் உள்ளும் புறத்தும்
அடைய வழித்திட்டம் அன்பு. 374

(பொ) அழிந்தவை போகக் கிடைத்த தமிழ் நூல்கள் அகவாழ்விலும் புறவாழ்விலும் போற்றிக் கொள்வதற்கு வழியாக அமைந்த திட்டம், அவற்றின் மீது கொள்ளும் பற்றேயாகும்.

(வி) உள்ளும் புறத்தும் - அகத்தும் புறத்தும். 'அன்பீனும் ஆர்வமுடைமை அது வீனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு' (குறள். 74) என்பாராதலின் வழித்திட்டம் அன்பு என்றார்.

அன்புக் குடன்நிலை அன்னையைக் கற்பது
முன்பு வளர்ப்பது மொய்ம்பு. 375

(பொ) அன்புக்கு அடையாளமாக உடனே செய்ய வேண்டுவது அன்னை மொழி நூல்களைக் கற்பதாகும். அதன்பின்னர், அதனை வீறுமிக வளர்ப்பது நம் வலிமைச் செயற்பாடாகும்.

(வி) தாய்மொழி நூல்களைக் கற்பது முதற்பணியாகும்; அம்மொழி சிறக்கப் பணி செய்தல் நம் திறத்தைப் பொறுத்ததாகும்; அவரவர் திறத்தில் கடமை புரிதல் வேண்டும் என்றது இது.

மொய்யெனக் கற்க முதுதமிழ் பண்தமிழை
நொய்யென மீட்டல் நொடித்து. 376

(பொ) பழைமையான தமிழின் ஒரு பகுதியான இசைத் தமிழை மொய்க்கும் தேனீ எனப் பாடி யிசைத்துக் கற்பாயாக; அதுவே, நொடித்துப் போய்க் கிடக்கும் அதனை மீட்டுதலுக்குரிய உடனடி வழியாகும்.

(வி) மொய்த்தல் - கூடிச் சேர்தல். நொய் - ஒலிக்குறிப்பு; உடனே. இசையின் இனிமை விளங்க முதுதமிழ் பண்தமிழ் என இருகால் தமிழ் கூறினார்; பார் எனக் கைந்நொடித்து வஞ்சினத்துடன் மீட்டலுமாம்.

நொடியை அளவாய் நுனித்தறிந்து கொண்டான்
துடியை வெறியாகத் தொட்டு. 377

(பொ) துடிப்பறையை முறையாக முழக்கிக் கொண்டு வெறியாடிய வகையால் நொடிப் பொழுதைக் கால அளவு என நுண்மையாக அறிந்து கொண்டான் முந்தைத்தமிழன்.

(வி) நாடித் துடிப்புத் துடிப்பதெனத் துடித்தாடல் துடி; அதற்கு முழக்கும் பறை துடிப்பறை. குறிஞ்சி நிலத்து வேலனுக்குத் துடிகொட்டி ஆடும் ஆட்டம் வெறியாடல்.

தொட்டக்கால் தீட்டெனும் தொல்வேத நாகரிகம்
பட்டக்கால் அன்றோ பழம். 378

(பொ) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என வாழ்ந்த தமிழ் மண்ணில் தன்னொத்த மாந்தன் ஒருவனைத் தொட்டால் தீட்டு என்று சொல்லப்படும் பழமையான போலி நாகரிகம் ஒழிந்து போனால் அல்லவோ வெற்றியாகும்.

(வி) தீட்டு - அழுக்கு, மாசு; பழம் - வெற்றி; காய் - தோல்வி; விளையாடல் வழக்கமாகவும், குழு வழக்காகவும் வழங்கப்படுவன காயும் பழமும்.

பழுத்த தமிழிருக்கப் பாங்கு கெடுத்த
உழுத்த மொழிக்கலப்பேன் ஓர். 379

(பொ) பல்வகைக் கலைத் துறைகளுக்கும் ஏற்றவாறு முதிர்ந்த தமிழ் இருக்கவும், அதன் சிறப்பைக் கெடுத்ததாகிய அழிவு மொழிக் கலப்பு எதற்காக? நீ ஆராய்வாயாக.

(வி) பாங்கு - சிறப்பு, உயர்வு; உழுத்தல் - துளைத்துக் கெடுத்தல்; மொழிக் கலப்பு மொழியை உழுத்துப் போகச் செய்யும் என்றார்.

ஓர்ந்தார் ஒளிக்கார் உயர்தமிழ்க் கேடெல்லாம்
சேர்ந்த கலப்பால் தெளி. *380*

(பொ) வழிவழியாக வந்து சேர்ந்த மொழிக் கலப்பால், உயர்ந்த தமிழ்மொழி அடைந்துள்ள - அடைந்து வருகின்ற-கேடுகளையெல்லாம் ஆராய்ந்தவர், அக்கேட்டை மறைத்து விடமாட்டார்; தெளிவாயாக.

(வி) உண்மையாக ஆராய்ந்தார் மொழிக் கலப்புக் கேட்டை மறைக்க மாட்டார் என்றது இது.

தெளிந்தேம் பகர்வேம் செறிந்த கலப்பால்
விளிந்தோம் இழந்தோம் விழி. *381*

(பொ) யாமும் மொழிக் கலப்புக் கேட்டைத் தெளிவாகத் தெரிந்து கொண்டேம்; அதனால் சொல்கிறோம்; விலக்க முடியா வகையில் கலந்த மொழிக் கலப்பாலேயே நாம் நம் எண்ணிக்கையில் குறைந்தோம்; இடப்பரப்பை இழந்தோம்; இவற்றைக் கண்டேனும் விழிப்படைவாயாக.

(வி) ஆசிரியர் தற்கூற்று இது. விளிந்தோம் என்பது இறந்தோம் என்னும் பொருளது; ஆயினும், மக்கள் எண்ணிக்கை குறைந்தமை சுட்டுவதே கருத்தாம்.

விழித்துப் பயனென் விதியில் தமிழைக்
கழித்துப் படிப்பவரைக் கண்டு. *382*

(பொ) விதிவிலக்குகளைக் காட்டித் தமிழைக் கல்லாமலே விலக்கி மேல்மட்டக் கல்விவரைக் கற்பவரைக் காணும்போது, நாம் விழிப்படைவதால்தான் என்ன பயன் உண்டாகும் என்றே தோன்றுகின்றது.

(வி) மாநில மொழியை விலக்கிக் கற்க விதி விலக்கு இல்லாத விதி ஏற்பட்டால் அல்லாமல் நம் விழிப்பால் பயன் இல்லை என்றது இது.

கண்டு சுவைக்கும் கனிதமிழ்க் கல்லாதார்
மண்டுகள் வாழும் மடம். *383*

(பொ) கண்ட அளவில் சுவைக்க வைக்கும் இனிய தமிழைக் கல்லாதவர், உணவே குறியாக வாழும் மடைமை வாழ்வினர் ஆவர்.

(வி) 'வாயுணர்வின் மாக்கள்' என்றும் 'கழிபேரிரையான்' என்றும் சொல்லப்படுபவர் இம்மடவர் ஆவர். மடம், மடை,மடைப்பள்ளி, மடுத்தல் என்பன உணவு வழிப்பட்ட சொற்கள்; அறவூண் சாலையே மடம் எனப்பட்டதாம்.

மடைமைக் களவுண்டோ வன்கண் தமிழர்
கடைமைக் களவுண்டோ காட்டு. 384

(பொ) மொழிப் பற்றுமை இல்லாத கொடிய தமிழர்களின் மடைமைச் செயல்களுக்கும் அளவு இல்லை; கீழ்மைச் செயல்களுக்கும் அளவு இல்லை. இது மாறுபட்ட செய்தி எனின், எடுத்துக் கூறுவாயாக.

(வி) கடைமை - கடையாம் தன்மை, கீழ்மை; வன்கண்-கொடுமை. வயிற்றுப் பாட்டையே பார்த்துக் கொண்டு அழிவுக்கு இடந்தந்த குற்றம் உடையவராகலின் 'வன்கண்' என்றார்.

காட்டும் திருக்கோயில் கல்லால் கலையழகு
பூட்டும் சிலைகள் புடைத்து. 385

(பொ) திருக்கோயில்கள் என்பவை வெறும் வழிபாட்டிடங்கள் மட்டும் அல்ல; கல்லால் கலையழகு செய்யப்பட்ட சிலைகள் மிகக் கொண்டு கலைக்கோட்டம் என்பதையும் காட்டுவனவாம்.

(வி) கோயில் காவல் என்பது, கலைக் காவல் என்பதுமாம் என்றது இது. பூட்டுதல் - அணிதல். அமைதல், புடைத்தல் - பருத்தல்.

புடையான சிற்பங்கள் பொந்தாய் உதிர்ந்த
அடையான ஆட்சிகள் அற்று. 386

(பொ) தொடர் தொடராகக் கலைகளைக் காக்கும் அரசு ஆட்சியும், திருக்கோயில் ஆட்சியும் ஆகியவை அற்றுப்போகிவிட்டமையால், புடைப்புச் சிற்பங்களாக அமைந்தனவும், கல்லும் காரையும் உதிர்ந்து பொந்தாகவும் புடையாகவும் போய்விட்டன.

(வி) ஆட்சிகள் என்ற பன்மை கருதுக; அடையான - தொடர்பான; புடை - புடைத்தலும், பள்ளமாதலும்; பொந்து - உள்ளீடு இல்லாது போதல். பொந்துபுடை - இணைச் சொல்.

அற்றற் றிழந்தன ஆயிரம் கோபுரம்
எற்றுக்குச் சோற்றூண் எமக்கு. 387

(பொ) ஆயிரக் கணக்கான கோபுரங்கள் மீளப் பேணாமையால் உதிர்ந்தும் இடிந்தும் பாழ்பட்டுப் போயின. அதனைப் பேணுதற்கு இல்லாமல், மடைப்பள்ளி என வைத்தும் அறச்சோறளிப்பு என வைத்தும் சோம்பரைப் பெருக்கும் செய்கை எமக்கு எதற்காகவோ?

(வி) எமக்கு என்றது அதனைப் பேணும் கடன் செய்யாது ஊணே கடனென்று இருப்பாரை உட்கொண்டு கூறியது; அதற்கு ஆட்பட்டார் சொல்வரா? ஆதலால் அவரை அடக்கிக் கூறினார்.

எமக்குத் தெரியும் எனைப்பல் கலைகள்
நமக்குள் அழிந்த நடப்பு. 388

(பொ) எத்துணையோ பல கலைகள் நமக்கு உரியவையாக இருந்து, நமக்குள்ளேயே அழிந்துபோன உண்மை, எமக்கு மிக நன்றாகவே தெரியும்.

(வி) கோயிலார் கலையையும் காத்திலர் என்று இரங்கியது இது. நடப்பு - நடைமுறை உண்மை. எனைப்பல் - எத்தனையோ பல.

நடப்புக் கணக்கொரு நாடிக் கலையும்
அடுப்புக் கலையும் அறிவு. 389

(பொ) அழிந்துபோன நடப்புக் கலையின் கணக்கில் ஒன்று நாடிக்கலை; மற்றொன்று சமையற்கலை, இவ்விரண்டும் அறிவியற்கலைச் செல்வங்களாக விளங்கியனவாம்.

(வி) நாடிக்கலையும் சமையற்கலையும் மருத்துவ அறிவியற் கலையாய் விளங்கின. அவையும் முறையுற அறிந்தார் அருகிப் போனதைச் சுட்டுதல் இது. இனிச் சமையற் கலைநூல்கள் பெருகுகின்றனவே எனின், அவை நாத் தினவுக்குரியனவன்றி, நாடி நலம்காப்பன அல்ல என்க.

அறியும் அயலோர் அருவியப்புக் கொள்வர்
தெரியும் கடல்மல்லைத் தேர். 390

(பொ) கலைக் கருவூலமாக விளங்கும் மாமல்லபுரக் கடற்கரைக் கற்றேர்களைக் காணும் அயல்நாட்டோர், தம்மை மறந்து மிக வியப்புக் கொள்ளுதல் நாள் வழிக் காட்சியாம்.

(வி) தேர் - ஒற்றைக்கல் தேர். மாமல்லன் பெயரால் மல்லை எனப்பட்டதாம்; கடற்கண்ணது ஆகலின் 'கடல்மல்லை' ஆயிற்று. மாமல்லன் என்பான் முதலாம் நரசிம்மவர்மன்.

தேர்த்தொழில் கைவந்த தென்னாடு யானையால்
போர்த்தொழில் கண்ட புறம். 391

(பொ) தேர் செய்தலிலும் அதனை ஊர்தியாகவும் படையாகவும் கொள்ளுதலிலும் சிறந்த தமிழ்நாடு, யானைகளைக் கொண்டு போர்த் தொழில் நடாத்திய புறப்பொருள் சிறப்பு உடையதுமாகும்.

(வி) யானைப்போர் மாண்பு புறநானூறு, பதிற்றுப் பத்து ஆகிய புறப்பொருள் நூல்களில் விரியக் காணலாம். தேர்த்தொழில் சிறப்பும் ஆங்கு விளங்குவதே.

புறமதில் காட்டும் பொறிக்கலை வன்மை
மறமதிர் சூழ்ச்சி வரைந்து. 392

(பொ) அரசர்தம் பெருநகரங்களின் வெளிமதில்களில் செய்யப்பட்டிருந்த போர்க் கலைப் பொறிகளின் வலிமையையும் வீரம் விளங்கும் சூழ்ச்சித் திறங்களையும் வரைந்துவைத்த ஓவியம் போல் நூல்கள் காட்டுகின்றன.

(வி) வரைந்து - ஓவியமாக்கி; எல்லைப்படுத்தி என்றுமாம். மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் இவற்றை விரியக் காணலாம்.

வரைபடம் இன்றி மனப்படங் கொண்டு
திரைக்கடல் ஓடினான் திக்கு. 393

(பொ) பழங்காலக் கடலோடியாக இருந்த தமிழ்ப் பரதவன் நாடு கடல் வரை படம் இல்லாமல் தன் மனத்துக் கொண்ட பட்டறிவுப் படமே படமாகத் திசைதோறும் அலைகடலில் உலாவந்தான்.

(வி) ''திரைகட லோடியும் திரவியம் தேடு'' என்பதும், ''முந்நீர் வழக்கம்'' என்பதும் நினைவில் வருவன. கடல் வணிகமேயன்றிக் கடற்படையும் கொண்டவர் தமிழர் என்பது பண்டை உலகவரலாறு.

திக்குத் தெரியாத தென்கிழக்கில் நாவாய்கள்
புக்குக்கல் வெட்டினான் போந்து. 394

(பொ) திசையும் அறிதற்கு அரியதாம் தொலைகிழக்குத் தீவுகளுக்குக் கப்பல்களோடு சென்று, தான் அவற்றைப் பற்றிக் கொண்டதற்குச் சான்றாகக் கல்வெட்டு அமைத்தும் மீண்டான் தமிழன்.

(வி) நாவாய் - கப்பல்; புக்கு - புகுந்து. இத் தென்கிழக்குத் தீவுகள் தொலை கிழக்குத் தீவுகள் என்பனவாம்.

கல்வெட்டிற் காண்க கடுங்குடுமி யான்மலைத்
தொல்லெட் டிசையின் தொகை. 395

(பொ) தொன்மையாகவே தமிழன் கொண்டிருந்த இசைக் கலையின் வளத்தை, உயர்ந்த குடுமியான் மலைக் கல்வெட்டுகளின் வழியே கண்டு கொள்வாயாக.

(வி) தொல் எட்டு இசையின் தொகை என்றது அக்கல்வெட்டில், ''எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய'' என்று எழுதப்பட்டதைச் சுட்டியதாகும். 'குடுமியான் மலை'. நூலின் பக்கம் 100 காண்க.

தொகையாகக் காணலாம் தொல்காஞ்சி ஓங்கும்
வகையான சிற்ப வளம். **396**

(பொ) பழமையான காஞ்சி மாநகரில் வகை வகையாகவும் தொகுதி தொகுதியாகவும் சிற்பச் செல்வங்கள் உள்ளதைக் காணலாம்.
(வி) வகையான சிற்ப வளம் தொகையாகக் காணலாம் என்க; பழம்புகழும் பல்கலை வளமும் கொண்ட இடமாகலின் ஆங்கு அப்பெருக்குள.

வளத்துப் பழமை மகஞ்சோ தெரிக்கும்
உளத்துப் புதுமையும் உண்டு. **397**

(பொ) பண்டைத் தமிழரின் பழமை வளத்தைத் தெரிவிப்பது மொகஞ்சதாரோ; அப்பழமையில் உள்ளத்திற்குப் புதுமை ஊற்றெடுக்கும் சிறப்பும் உண்டு.
(வி) ''புதுமைநிலா அழகுநிலா பூத்ததுவின் மேலே- பழமையிலே புதுநினைவு பாய்ந்தெழுந்தாற் போலே''
என்பது போன்ற உள்ளப் புதுமையாம்.

உண்டாய வள்ளுவர் ஓங்குநிலைக் கோட்டத்தைக்
கொண்டாடிக் கற்க குறள். **398**

(பொ) அண்மைக் காலத்தே உருவாக்கப்பட்ட உயர்ந்த புகழ்வாய்ந்த வள்ளுவர் கோட்டத்தின் சிறப்பைக் கொண்டாடி, திருக்குறளையும் அப்பெருமையுடன் கற்பாயாக.
(வி) குறள்கள் எல்லாமும் கல்லெழுத்தில் ஆங்கே பொறிக்கப்பட்டுள்ளமையால் கோட்டத்தைக் கொண்டாடிக் கொண்டே கற்கவும் வாய்ப்பாம்.

குறளை உணராக் கொடுந்தமிழன் வீதிச்
சரளைப் பொடிக்குச் சமம். **399**

(பொ) திருக்குறள் பிறந்த மண்ணின் பிறப்பியாக இருந்தும் அதனைக் கல்லாத கொடிய தமிழன், நடைபாதைக்குப் போடப்படும் சரளைக் கல்லுக்கு ஒப்பானவன் ஆவன்.
(வி) நடக்க வேண்டிய அவன், சரளைக் கல்லாகக் கிடக்கலாமோ? என்ற இழிவு சுட்டியது இது.

சமமெனல் ஆமோ சரளை தெருவுக்கு
அமைவுடைத் தாகும் அறி. **400**

(பொ) வீதிச் சரளைக் கல்லுக்கு அவனைச் சமமெனலும் ஆகாது; ஏனெனில், தெரு நடைக்கு ஏற்ற அமைவுடையதாக அல்லவோ அச்சரளை உதவுகின்றது! இவன் அவ்வகைக்கும் உதவானே!

(வி) சமமென முன்னே கூறியதை (399) மறுத்தது இது. ஒப்பெனக் கூறி ஒப்பில்லை என மறுப்பது வேற்றுமை அணியாம்.

அறியாதான் முப்பால் அறிந்தறிந்தும் பொய்ம்மை
முறியாதான் வெந்த முளை. 401

(பொ) திருக்குறளைக் கற்று அறியாதவனும், நன்றாகக் கற்றறிந்தும் பொய் கூறுதலை விடாதவனும் கருகிப் போன முளைபோன்றவன் ஆவான்.

(வி) கருகிய முளையில் இருந்து விளைவு பெற முடியாமை-போல் இவனிடம் எப்பயனும் பெற இயலாது; உவமை அணி. முறிதல் - விட்டொழித்தல்; அறிந்தறிந்தும் என்றது நன்றாகக் கற்றும் என்னும் பொருளது.

முளையா மொழியெலாம் முன்னேற்றம் காண
இளையாத் தமிழ்க்கோ இடர். 402

(பொ) தமிழ்மொழி தோன்றிச் செழித்திருந்த காலத்தில் முளைத்தலும் இல்லாமல் பின்வந்த மொழியெல்லாமும் கூட, முன்னேறிக் கொண்டிருக்கவும் அக்குறையாத் தமிழ் முன்னேற்றத்திற்கோ இடர் செய்வது!

(வி) இளையா - மெலியாத, குறையாத; முதிய என்றுமாம்; 'இவ்விடர் ஆகாது' என்பது உட்குறிப்பு.

இடருற்ற ஞான்றும் இலக்கணம் காத்துத்
தொடருற்ற நூலன்றோ தொல். 403

(பொ) தொல்காப்பியம் என்பது பலப்பல நெருக்கடிகள் உண்டாகிய காலங்களிலும், மொழி வாழ்வு இலக்கண மரபு அழியாமல் காத்து இந்நாள் வரை அம்மரபு தொடர உதவும் நூலே யல்லவோ.

(வி) தொன்மையான நாள் தொட்டு இன்றுவரை நம்மரபு காக்கும் நூலேயல்லவோ தொல்காப்பியம் என அதன் சிறப்புரைத்தது இது.

தொல்முதற் காப்பியம் தொட்டுத் தொழாதவன்
பல்முதிர்ந்து என்னோ பயன்? 404

(பொ) தொன்மையையும் முதன்மையையும் ஒருங்கே உரிமையாகக் கொண்டுள்ள தொல்காப்பியத்தை முறையாகப் போற்றிப் படியாதவன், அகவை பெருகிப் பல் முதிர்வதால் என்ன பயன்?

(வி) தொட்டுத் தொழுதல் என்பது 'தொழுது படித்திடடி' என்னும் பாரதி நடையையும், 'மரபினால் தொழுது வாங்கி' என்னும் சிந்தாமணி நடையையும் தழுவியது; அகவை முதிர்ச்சி முதிர்ச்சி அன்று; அறிவு முதிர்ச்சியே முதிர்ச்சி என்றது இது.

பயனிலை என்பானோர் பாவிக்கு மூளை
வயமிலை கீழ்ப்பாக்கம் வா. 405

(பொ) 'தொல்காப்பியத்தால் நாம் அடையும் பயன் இல்லை' என்பவன், தனக்கு ஒப்புத்தானே ஆன பாவியாவான்; அவன் மூளை உரிய வழியில் செயல்பட வில்லை; அத்தகையனே, நீ கீழ்ப்பாக்கம் செல்வாயாக.

(வி) வா என்பதற்குத் தக விளி அமைக்கப்பட்டது; கிறுக்கர் மனநோயர் மருத்துவமனை ஆங்குண்மையால் அவ்வாறு கூறினார்; 'போ' எனத்தக்கது 'வா' என்றது மோனை கருதியது.

வாலியென் சொற்றமிழ் வான்மீகம் ஏறிற்று
பாலியுட் புக்க பல. 406

(பொ) வெண்மை யுடைமையால் 'வாலி' என்னும் பொருள் குறித்த தமிழ்ச் சொல், வான்மீகத்திலும் புகுந்தது; அவ்வாறே பாலி மொழியுள் புகுந்த தமிழ்ச் சொற்களும் பலவாம்.

(வி) 'வடமொழியுள் பிற சொல் புகாது' என்பாரை மறுத்து, அதில் தமிழ்ச் சொல்லுண்டு என்றதுடன், அதற்கு முந்தை மொழியிலும் தமிழ்ச் சொல் உண்டு என்று தமிழின் தொல்பழமை உரைத்தது இது.

பலநாடு சென்றனம் பற்றுத் தமிழா
நிலைநாடி நல்லுறவை நேர்ந்து. 407

(பொ) பற்றுமை தமிழாக, அதனை நிலைநாட்டுதலை விரும்பியும், இனிய உறவை விரும்பியும் நாம் கடல் கடந்து பலப்பல நாடுகளுக்கும் சென்றோம்.

(வி) கொள்ளையடித்தலைக் குறியாகக் கொண்டு சென்றோம் அல்லோம் என்றது இது. முந்தையோர் செயலைத் தம் செயலாகக் கொண்டு உரைத்தார்.

நேர்ந்த இலங்கை நெடிதுவாழ் இந்தியர்
தேய்ந்தனர் நூலகம் தீய்ந்து. 408

(பொ) உரிமையமைந்த இலங்கையில் நெடுங்காலமாக வாழ்ந்து வரும் இந்தியத் தமிழர் தம் அறிவுக் களஞ்சியமாகக் கொண்டிருந்த அரிய நூலகம் எரிந்து தம் கலைவளம் இழந்தனர்.

(வி) இந்தியர் - இந்தியத் தமிழர்; ஒரு காலம் பரந்த தமிழகப் பகுதியாக இருந்த மண் அது; சிங்களர் தமிழர் உரிமைப் போரால் எரியுண்ட யாழ்ப்பாண நூலக வளம் அழிந்தமைக்கு இரங்கியது இது. தமிழர் தம் படைஎடுப்பில் என்றும் இவ்வழிவு நேர்ந்திலது என்றது இது.

தீச்சுவை கண்டறியாச் செந்தமிழ் அல்லவே
பூச்சுவை யின்று பொறு. 409

(பொ) நம் செந்தமிழ் இதுகாறும் தீயின் தழுவுதலை அறியாதது அல்லவே; எத்தனை தீயூட்டுக்கு இரைப்பட்டும் அழியாதது தானே; இத்தீச்சுவை, உலகுக்குச் சுவையற்ற செய்தியே; பொறுப்பாயாக.

(வி) அனல்வாதம் என்ன, அயலார் படைஎடுப்பென்ன, ஆகுதி செய்தது என்ன, அறியாமல் பற்றி எரிந்தவை என்ன- தீச்சுவை அறியாததா இத்தமிழ் என்றார். பூ - உலகம்; சுவை - இன்பம்.

பொறுத்துக் கறுத்தார் புலமாள்வர் தம்முள்
நிறுத்தும் இனவொருமை நீண்டு. 410

(பொ) பொறுத்துக் கொண்டு, வஞ்சினக் குறிக்கோளாகக் கொண்டவர் உறுதியாக நாடாளவே செய்வர்; இத்தகைய அயலின அழிவுச் செயல், நமக்குள் இன ஒருமைப்பாட்டை உண்டாக்கி நெடுங்காலம் நிலைபெறச் செய்யும்; ஆகலின் பொறு.

(வி) 409 இன் தொடர்ச்சி இது; ஆங்குள்ள, 'பொறு' என்பது இவண் இணைத்துக் கூறப்பட்டது; கறுத்தல் - வஞ்சினம் கொள்ளல்; புலம் - நாடு, இடம். அயலினம் செய்யும் அழிவு, தம்மின ஒருமைக்கு வழி என்றார்.

நீண்ட கொடையால் நிலைநூ லகங்காணத்
தூண்டும் தமிழரசுத் தோள். 411

(பொ) மிகுந்த கொடையால் மீளவும் ஈழத்து நூலகத்தைக் காண்பதற்குத் தமிழ்நாட்டு அரசு தூண்டும் துணையாக அமையும் என்பது உறுதியாம்.

(வி) எரிந்து போன நூல் நிலையத்தை மீளவும் உருவாக்குவதற்குத் தமிழ்நாட்டு அரசும் மக்களும் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பாராட்டி உரைத்தது இது.

தோளும் கொடுப்போம் தொலைவாழ் தமிழர்க்கு
நாளும் கொடுப்போம் நலம். 412

(பொ) தமிழகத்துக்கு அப்பால் தொலைவில் வாழும் தமிழர்க்குத் தோள் கொடுப்பதுபோல் துணை நிற்போம்; அவர்களுக்கு நன்மையானவற்றை எந்நாளும் செய்வோம்; இவை நம் கடன்.

(வி) தாங்காச் சுமையை ஒருவர் சுமக்கும் போது தோள் கொடுத்தல் பாரத்தைக் குறைத்து நிமிரச் செய்யுமல்லவா! அதுபோல் துணையாதல் தோள் கொடுத்தலாம்.

நலஞ்சால் திருச்சிங்கை நல்லரசு என்றும்
வலஞ்சால் தமிழுக்கு வாய்ப்பு. 413

(பொ) நன்மை நிரம்பிய வளமான சிங்கப்பூரின் நல்ல அரசு, எந்த நாளும் தமிழுக்கு வளமான வாய்ப்பாகவே அமைந்துள்ளது.
(வி) 'இது பாராட்டுக்குரியது' என்றது இது; சிங்கையில், தமிழ் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக இருப்பதும், நாட்டு மொழிக்குரிய எல்லாச் சிறப்புகளுக்கும் உரியதாக இருப்பதும் பாராட்டியுரைத்தார்.

வாய்க்கினிய சாரங்க பாணியார் வன்தொண்டு
தாய்க்கினிய செல்வத் தளிர். 414

(பொ) சொல்லும் வாய்க்கு இனிமை சேர்க்கின்ற சாரங்கபாணியாரின் உறுதியான தொண்டு, தமிழ்த் தாய்க்கு இனிமை சேர்க்கும் வளப்பெருக்குடையதாகும்.
(வி) சிங்கைச் செந்தமிழ் அன்பர் நலப்பணி பாராட்டிய நன்றி இது; வன்தொண்டு என்றது உறுதிப்பாடான தொண்டினை ஆகும். 'வன்தொண்டர்' என்ற பெயருடையார் தமிழகத்தில் இருந்ததை நினைவூட்டுவது இவ்வாட்சி.

தளிர்த்த மலேயா தமிழ்க்கலைகள் காக்கும்
அளித்த செவிலி அவள். 415

(பொ) வளமோங்கும் மலேயா என்பது தமிழ்க் கலைகளைக் காக்கும் நிலமாகும்; அம்மலேயா, தமிழைக் காப்பதற்குத் தன்னை வழங்கும் செவிலி ஆவள்.
(வி) அளித்த - அருளால் தன்னைக் கொடுத்த; 'மலேயா செவிலி அவள்' என இணைக்க. சிங்கை, மலேயாச் செலவுகளில் கண்ட நலங்களை நன்றியால் உரைத்தவை இவை; அடுத்து வருவதும் அது.

அவள்தமிழ் நேசனும் அன்பார் முரசும்
இவள்தமிழ் போற்றும் எழுத்து. 416

(பொ) மலேயாச் செவிலி தந்துவரும் தமிழ் நேசனும் தமிழன்புமிக்க தமிழ்முரசும் இத்தாயகத் தமிழைப் போற்றி வளர்க்கும் எழுத்துக்களை உடையவையாம்.
(வி) இவள் தமிழ் என்றது இத்தாயகத் தமிழை; தமிழகச் செய்தியை அம்மக்கள் உணரத் தட்டின்றித் தருவன நேசனும் முரசும் என்றார்.

எழுதின் எழுதலாம் எல்லாத் திசையும்
உழுத தமிழ்க்கலையின் உந்து. 417

(பொ) எல்லாப் பக்கங்களிலும் விரிந்து வேளாண்மை செய்த தமிழ்க்

கலைகளின் எழுச்சியை, எழுத வேண்டும் எனின் எவ்வளவு விரிவாகவும் எழுதலாம்; அவ்வளவு விரிவுடையது அது.

(வி) ''எழுதின் எழுதலாம்'' என்றது, அவ்வாறு யான் எழுத விரும்பவில்லை; சான்று காட்டிய அவ்வளவில் அமைகிறேன் என்றது இது. இன்னும் இதழ்களும், தொண்டர்களும், செயற்பாடுகளும் எல்லாம் விரிவானவை என்று சுட்டினார்.

உந்திக் குடிவாழ் உரிமைத் தமிழொன்றே
இந்தியப் பன்மொழியுள் ஏறு. *418*

(பொ) இந்திய நாட்டில் வழங்கப்பெறும் மொழிகளுள் எல்லாம், மேலோங்கிய குடியுரிமை வாழ்வுடையவற்றுள் தமிழ் ஒன்றே முதன்மை உடையதாகும்.

(வி) பன்மொழியுள் ஏறு தமிழ் ஒன்றே; உந்துதல் - மேலெழுதல், ஓங்குதல்; குடிவாழ் உரிமை - குடியுரிமை வாழ்வு.

ஏறுபோல் ஓடிய எந்தமிழ்ப்பால் காவிரி
ஆறும் வறளும் அடைந்து. *419*

(பொ) அரிமாவைப் போல் பாய்ந்து வந்ததும் எந்தமிழ் வாழ்வுக்குப் பால் போல் அமைந்ததும் ஆகிய காவிரியாறும், தன்னலத்தார் அடைத்தடைத்துத் தடுத்துவிட்டதால் வறண்டு போவதாகின்றது.

(வி) ''சடையன் தந்த சோற்றுப் பெருக்கு இராமகாதை'' என்றான் கம்பன்; ''இல்லை, காவிரி ஆற்றுப் பெருக்குத் தந்தது'' என்றான் சடையன்; இத்தகு காவிரிச்சீர் கருதியது இது. பட்டினப்பாலையின் பெருக்கு காவிரிப் பெருக்காவதைக் காண்க.

அடைத்து வறண்டால் அணிவயல் தஞ்சை
துடைத்தவோர் பாலையாம் தொட்டு. *420*

(பொ) மேலும் அணையைக் கட்டி நீர்வரத்தைத் தடுத்துவிட்டால் காவிரி வறண்டு போம். போனால், வளமான வயல்களையுடைய தஞ்சைப் பகுதியின் பசுமை எல்லாமும் துடைத்து எடுத்துவிட்டாற் போன்ற பாலை நிலமாகிவிடும்.

(வி) பசுஞ்சோலை வளம் பாழும் தன்னலத்தால் பாலையாதல் ஆகாது என்றது இது. அரசின் கடமை இக்காவல் கடமை என்று வலியுறுத்தியதுமாம்.

தொட்டு வணங்கித் தொழுதால் வருமோநீர்
பட்டோம் வெறும்பேச்சுட் பட்டு. *421*

(பொ) காவிரிச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வெற்றுப் பேச்சு, வெட்டிப் பேச்சு என ஈடுபட்டுக் கெட்டோம், 'நீர் விடோம்' என்னும் வன்கண்மை உடையவர்களிடம் நெருங்கி வணங்கி

வழிபட்டதாலும் தண்ணீர் வந்து விடுமோ? வாராதே.

(வி) ஆற்றைத் தொழுதாலோ ஆளைத் தொழுதாலோ நீர் வாராது; வெற்றுப் பேச்சாலும் நீர்வாராது; உரிய அரசியல் நடவடிக்கையே வேண்டும் என்றது இது.

பட்டதைச் சொன்னால் பழங்கதை என்பரால்
விட்டதைச் சொன்னால் வெறி. 422

(பொ) உண்மையாக அமைந்த வரலாற்றைச் சொன்னால், அது பழங்கதை என்பர்; நாம் இழந்து போனதைச் சொன்னால், அது வெறி என்பர்.

(வி) என்பர் என்பது பழங்கதைக்கும், வெறிக்கும் கூட்டப்பட்டது. ''உண்மையை மதிப்பார் இலர்; அவர் குறி தன்னலம் ஒன்றே'' என்றது இது.

வெறிப்பட் டிருந்தால் விரிதமிழ் நாடு
குறுப்பட் டிருக்குமோ கூறு. 423

(பொ) நாம் வெறியுடையவராய்ச் செயல்பட்டிருப்போம் என்றால், நாம் கொண்டிருந்த விரிந்து பரந்த தமிழ்நாடு, இவ்வாறு குறுகுதலுக்கு ஆட்பட்டிருக்குமோ? மனச் சான்றோடு கூறுவாயாக.

(வி) தமிழன் வெறியுடையன் அல்லன் என்பதற்குச் சான்று அவன் நாடு குறுகிக் குறுகி வரும் ஒன்றே என்று தெளிவுரைத்தது இது.

கூறுவ தல்லது கூடித் தமிழ்காக்கும்
வீறு நமக்கில்லை வீண். 424

(பொ) இதனை இதனைச் செய்வோம் என்று வாய்கிழியக் கூறுவது அல்லாமல், ஒன்றுபட்டுத் தமிழைக் காக்கின்ற பெருமிதம் நமக்கு இல்லை; ஆதலால், நம் கூறுவது வீணாய் ஒழிகின்றது.

(வி) தமிழ்காக்கும் என்றது தமிழ்நிலம், தமிழினம், தமிழ்க்கலை ஆகியவற்றை யெல்லாம் தழுவியதாகும்.

வீணாரம் செய்வோம்; வெறுஞ்செயலைப் போற்றுவோம்
பூணாரம் பூட்டுவோம் பொய்த்து. 425

(பொ) நாம் வீணாக ஆரவாரம் செய்வோம்; பயனற்ற செயலைப் பாராட்டிக் கூறுவோம்; அத்தகு செயல் செய்வார்க்குப் பொய்யாகப் பூமாலையும் பொன்மாலையும் பூட்டி மகிழ்வோம்.

(வி) இவை ஒன்றன்மேல் ஒன்று கேடாகும் செயல்களாம்; நம் செயல்கள் பயனற்றவையும் பாழ்பட்டவையுமாம் என்றது இது.

பொய்சொல அஞ்சோம் புகழ்க்குறள் போற்றுவோம்
மெய்செய மாட்டோம் விதிர்த்து. 426

(பொ) நாம் பொய்யுரைக்க அஞ்சமாட்டோம்; அதே பொழுதில் பொய்யாமொழிக் குறளையும் போற்றிக் கொள்வோம்; மெய் சொல்ல வேண்டும் இடத்திலும் நடுக்கம் கொண்டு மெய்யுரைக்க மாட்டோம்.

(வி) விதிர்த்து - நடுங்கி, சொல்வேறு செயல் வேறாம் நம் நிலையை விளக்குவது இது; மேலும் வருவனவும் இவ்விளக்கங்களே (427-430).

விதிர்த்துப் பிறர்மேல் விடுபழி தூற்றி
உதிர்த்து வசைப்போம் உயர்ந்து. 427

(பொ) நடுநடுக்கம் கொண்டு மற்றவர்மேல் வேண்டாப் பழிகளைச் சொல்லி, உச்சநிலையில் வசைமொழிகளையும் முத்து முத்தாக உதிர்த்துக் கொண்டிருப்போம்.

(வி) பழிதூற்றவும் வசை மொழியவும் வந்த பிறப்பு என்று காட்டுவதே பலர் வாழ்வாக இருத்தலைச் சுட்டியது இது. தமிழ்ப் பிறப்பு என்பதால் தம்மையும் இணைத்துக் கொண்டு பேசினார்.

உயர்ந்த குறிக்கோள் உளங்கவர் பேச்சாம்
அயர்ந்த செயலாம் அடுத்து. 428

(பொ) உயர்வுடைய குறிக்கோள் என்று சொல்லப்படுவது உள்ளங் கவர்ந்து வெளிப்படும் சொல்லாக வருதல் முதல்நிலை; அடுத்துத் தன்னை மறந்து அதில் ஈடுபட்டுச் செயலாற்றி நிறைவேற்றுதலாகும்.

(வி) உலகில் பிறரெல்லாம் கொள்ளும் குறிக்கோளும், செயற்பாடும் இத்தகைத்தே என்று கூறி, இதனை எம் தமிழர் கொண்டிலரே என்றது இது.

அடுக்கி மொழிவோம் அடடாஅ என்போம்
தடுக்கி விழுவோம் தடித்து. 429

(பொ) அடுக்கடுக்காகத் திட்டங்களைக் கூறுவோம்; அதனை அடடா! அடடா! என்று பாராட்டவும் செய்வோம்; மனம் செருக்கி நாம் சொன்னவற்றுக்கும் பாராட்டியவற்றுக்கும் மாறாகக் குப்புறத் தடுக்கி விழுவோம்; இது நம் தொடர் நடைமுறை.

(வி) 'அடடாஅ' - சொல்லிசை அளபெடை. தடித்தல் - மனம் செருக்குதல்; தடித்தனமாய் என்றுமாம்.

தடிகொண் டடிப்பினும் தன்மானம் இல்லார்
அடிகொண்டு வாழ்வர் அயல். **430**

(பொ) தடி கொண்டு அடித்தாலும் நம்மவர் தன்மானத்தைக் கொள்ள மாட்டார்; ஆனால், அயலாரின் அடிகளைப் பற்றிக் கொண்டு மீளா அடிமையாகக் கிடத்தலே வாழ்வெனக் கொள்வர்.

(வி) தன்மான முண்டாக்கத் தந்தை பெரியார் அடித்த அடிக்கு அளவு உண்டா? ஆயினும் இன்றும் அயலடிமை அகன்றதா? இதனை எண்ணியது இது.

அயலே அவாவும் அறிவில் தமிழர்
புயலென மாறாரோ போழ்ந்து. **431**

(பொ) அயலாரையும் அயல்நெறியையும் விரும்பிப் பற்றும் நல்லறிவில்லாத தமிழர், இற்றைக்கு இல்லை எனினும் ஒருநாள் கிளர்ச்சியுடன் எழும்பும் புயற்சூறையென மாற மாட்டாரோ?

(வி) ஒருநாள் மாறவே செய்வர்; அன்று அயன்மை, சூறையில் பட்ட சருகாகச் சுழற்றப்படுதல் உறுதி என்ற உள்ளக்குறிப்பு இது.

போழ்ந்த பனைபோல் பொருகளிற்றைத் துண்டித்துச்
சூழ்ந்த மறக்குலமே சொல். **432**

(பொ) பிறர் போகட்டும், வெட்டப்பட்ட பனைமரத்தைப் போல் போரிடவந்த யானையின் கைகளைத் துண்டித்துப் போட்டு வெற்றி கொண்டாடிய மறகுடிக் கூட்டமே, நீ என்ன சொல்கிறாய்?

(வி) உன்னிலையும் தாழ்ந்துபோன இது, மிகமிக நாணத்தக்கது என்றது இது. போழ்ந்த - அறுத்துத் துண்டிக்கப்பட்ட, இக்காட்சி புறநானூற்றுக் காட்சியாகும்.

சொல்லில் உயர்வு தொழுதமிழ் என்றானே
பள்ளியில் அஃதுண்டோ பார். **433**

(பொ) "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா" என்று கூறிய பாரதியின் வணங்கத்தக்க தமிழ், பள்ளியில் உள்ளதோ? பார்ப்பாயாக.

(வி) பாரதிக்கு நூற்றாண்டு கொண்டாடினோம்; அவன் கொள்கைகளையும் ஆழமாகப் புதைத்துக் கையெடுத்து வணங்கினோம் என்றது இது. வழிபடுதல் என்பது வழி நடத்தல் அல்லவோ? கை தூக்குதலா?

பாரெங்கும் வீசும் பசுந்தமிழ் நம்நகர்
ஊரெங்கும் இல்லை உணர். 434

(பொ) உலகமெல்லாம் தமிழ் இந்நாளில் பசுமையாகப் பரவுதல் காண்கிறோம்; ஆனால், நம் நகரங்களிலும் ஊர்களிலும் அதற்கு இடமில்லை; இதனை உணர்ந்து கடனாற்றுவாயாக.

(வி) பார்பரவும் பசுந்தமிழை நம்மிடத்துப் பார்க்கக்கூடவில்லை எனின் எவ்வளவு இரங்கத் தக்கது இது.

எங்கும் தமிழென்போம் எல்லாம் தமிழென்போம்
கங்குல் பகலாமோ கட்கு. 435

(பொ) எங்கேயும் தமிழே என்று முழங்குவோம்; எல்லாத் துறைகளிலும் தமிழே என்றும் கூறுவோம்; நம் கண்களுக்கு என்ன இரவும் கூடப் பகலாகத்தான் தெரியுமோ?

(வி) இருளைக் காட்டி வைத்து, இதோ ஒளியைப்பார் என்று கூறவும், 'ஆமாம் ஆமாம்' என்று தாளம் போடவும், எம் தமிழர்க்கே வாய்த்த பேறு போலும்! இவர் கண்ணுக்கு இரவு பகலாமோ என்றது நல்ல அங்கதம் (எள்ளல்!).

கட்கினிய செப்புக் கடவுள் திருமேனி
மட்கினிய செம்பாம் மறைந்து. 436

(பொ) கண்ணுக்கு விருந்தாகும் கலைத்திறம் அமைந்த கடவுளின் செப்புத் திருவுருவங்கள், மண்ணுக்கு இனிய செம்பாக மறைந்து போகின்றனவே.

(வி) ஆக்கத் திறமில்லை எனினும் காக்கவுமா இயலாது என்றது இது. கடவுள் திருமேனி களவாடல் கடத்தல் கள்வரால் மட்டுமோ நிகழ்வது? அறங்காவலர் பூசகர் ஆயோராலும் நிகழாததா? "கோயில் பூசை செய்வோர் சிலையினைக் கொண்டு விற்றல் போலும்" என்றது பாரதி சொல்.

மறைந்தநூல் இவ்வென்று மாணூல் தெரித்தான்
சிறந்த மயிலை சினந்து. 437

(பொ) மறைந்துபோன தமிழ் நூல்கள் இவை இவை என்று சிறந்த நூல் ஒன்றனைப் புலமைமிக்க மயிலை சீனி வேங்கடசாமி இயற்றி வெதும்பி உரைத்துளான்.

(வி) நூற் பெயர், 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்பது. சினம் - உள் வெதுப்பு. மாண் நூல் - சிறந்த நூல். மயிலை, அரிய கலை நூல்கள் பல இயற்றிய தொண்டர். வரும் பாட்டின் சினம் (437) இதன் பொருளால் தொடர்பற்றது.

சினத்திற் பயனென் திருக்குறள் கண்ட
இனத்திற் பிறந்தும் இது. 438

(பொ) திருக்குறள் தோன்றிய இனத்திற் பிறந்தும் சினங்கொள்வதை விட்டொழியாமல் கொண்டிருந்தால் என்ன பயன்?
(வி) "சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனமென்னும் ஏமப்புணையைச் சுடும்" (306) என்பது திருக்குறள் ஆகலின், சினத்திற் பயனென் என்றார்.

இதுநெறி என்ற இயல்குறள் கற்றும்
மதுவெறி புக்கான் மலிந்து. 439

(பொ) 'கள்ளுண்ணாமை' என்னும் இதுவே சான்றோர் நெறி என்ற அறக்குறளைக் கற்றும், தாராளமாக மதுவெறியில் புகுந்தவன், கற்றோன் தானா?
(வி) இயல் குறள் - அறத்தின் - வாழ்வின் - இயல்பு கூறும் குறள். மதுவெறி புக்கான் கற்றான் அல்லன்; குறிப்பாகக் குறள்கற்றான் அல்லன் என்றது இது. மலிந்து - மிகுந்து.

மலிவு விலையில் மதுக்கள் திறப்போம்
பொலிவு வரியின் பொருட்டு. 440

(பொ) மேலும் மேலும் பெருகும் வரித் தொகையின் பொருட்டாக, மலிவு விலையில் மதுக்கடைகளைத் திறப்போம். இதுவா குறள்நெறி.
(வி) திருக்குறளைக் கற்றவன் செய்வானா? செய்யலாமா? என்றது இது. மதுக்கள் என்றது பல்வகை மதுக்களை; திறப்போம் என்றது கடைகளையும் தொழிலகங்களையும்.

பொருளூட்டம் ஆமோ பொதுநல் லரசு
மருளூட்டி வாங்கும் வரி. 441

(பொ) பொதுநலம் விரும்பும் நல்ல அரசு எனின், மயக்கும் மதுவகைகளை உண்ணச் செய்தலால் பெறும் வரி அதற்குப் பொருள் வளம் என்பது ஆகுமோ?
(வி) குடியைக் கெடுத்து நாட்டு வருவாயைப் பெருக்குவது வருவாய் எனப்படுமா? ஆகாதே என்றது இது. மருள்- மயக்கம்.

வரியென்னாள் கள்வருவாய் வாய்நாறு தண்ணீர்
சரியென்னாள் பாரதத் தாய். 442

(பொ) பாரத அன்னை மதுவகையால் வரும் வருவாயை வரி என்று கொள்ள மாட்டாள்; வாய் நாற வைக்கும் மதுவைப் பருகுதலைச் சரி என்று கொள்ளவும் மாட்டாள்.
(வி) அன்னை, மக்கள் கெடவும் கருதாள்; கெடுவகையால் நாடு வாழவும் கருதாள் என்றது இது.

தாயின் வறியோர் சமநலம் வேண்டுமேல்
பேய்மதுக் கள்ளைப் பிரி. **443**

(பொ) தாய்நாட்டில் வாழும் வறுமையாளர் அந்நிலை நீங்கி மற்றையோர்க்கு ஒப்பான பொருள் நிலை பெற வேண்டுமானால், பேய் பிடித்தவன்போல் வெறிக்கூத்தாட வைக்கும் மதுவை அவனிடமிருந்து பிரிப்பாயாக.

(வி) வறியோர் சமநலம் பெற வழியாவது மதுவிலக்கே என்றது இது; தள்ளாடி உளற வைக்கும் மதுவைப் 'பேய்மது' என்றார்.

பிரியத் தெரியாத பேதைகாள் உண்ணற்கு
உரிய உணவன் றுணர். **444**

(பொ) மதுவை விட்டொழித்தற்குரிய வழி தெரியாத அறிவிலிகளே, மது உண்ணுதற்குரிய உணவுப் பொருள்களுள் ஒன்று அன்று என்பதை உணர்ந்து கொள்வீராக.

(வி) பேதைகாள் என்னும் பன்மைக்கு ஏற்ப முடிபுரைக்கப்பட்டது. அழிக்கும் நஞ்சை உணவு எனக் கொள்ளலாமா என்றது இது.

உணர்ந்தாரைக் கட்கடை உள்ளேவா என்று
புணர்ந்து வலிக்குமோ போர்த்து. **445**

(பொ) மதுவின் தீமையை உணர்ந்து கொண்டவரை, அம்மதுக்கடை 'உள்ளே வா' என்று தோளைத் தழுவிக் கொண்டு போய்த் தள்ளி மறைத்து விடுமோ?

(வி) உணர்ந்து கொண்டவரை எந்தக் கடையும் இழுத்துவிட முடியாது; எவரும் தள்ளிக் கொண்டு போக முடியாது என்றது இது.

போரில் புரண்டால் புகழுண்டு சாராய
நீரில் புரண்டால் நினை. **446**

(பொ) போர்க்களம் சென்று பொதுநலம் காக்கும் களப்போரில் வீழ்ந்து புரண்டால் புகழுண்டு; ஆனால், சாராயம் (மது) எனப்படும் நீரில் புரண்டால் புகழுண்டா; நினைத்துப்பார்.

(வி) நினைத்துப் பார்த்தால் நீயே விட்டுவிடுவாய் என்றது இது. நீரில் புரளல் - இடைவிடாக் குடியனாக இருத்தல், குடிப்பார் மயங்கிப் புரளலின் அப்புரளலும் பொருந்தும்.

நினைமறித்து வேண்டுவன் நின்வாக்கைக் கள்ளின்
நனைவிலக்குங் கட்சிக்கு நல்கு. **447**

(பொ) உன்னைத் தடுத்து நிறுத்தி வேண்டுகின்றேன்; அது, ''தேர்தலில் நீ அளிக்கும் வாக்குரிமையை மதுவை விலக்குவதற்கு உறுதி கூறும் கட்சி எதுவோ அதற்கே தா'' என்பது.

(வி) கள்ளின் நனை - ஒரு பொருள் பன்மொழி, இனிய கள்ளாகிய நனை. மறித்து - தடுத்து; நல்கு - தா.

நல்கின் புரியும் நலங்கொல் வருவாயைப்
புல்கல் ஒழுக்கத்துப் புற்று. *448*

(பொ) 'மதுவிலக்குவார்க்கே எம்வாக்கு' என்று வழங்கினால்தான் உண்மை புரியும்; நாட்டு நலத்தைக் கொன்று வருவாயைப் பெருக்குதல் ஒழுக்கம் என்பதற்கே புற்று நோய் வந்தது என்பதும் விளங்கும்.

(வி) புல்கல் - பெறுதல்; நல்கின் புரியும், புற்று புரியும் என இரண்டு இடங்களிலும் இணைக்க.

புற்று வளர்க்கும் புகைப்பிடிப்பு விட்டக்கால்
வற்றுமே நெஞ்சு வலி. *449*

(பொ) புற்றை உண்டாக்கி வளர்ப்பதாகிய புகை குடித்தலை விட்டுவிட்டால், நெஞ்சுவலி என்பது இல்லாமல் ஒழிந்து போகும்.

(வி) கவலையை மறப்பதற்குக் குடித்தேன் புகையை என்பார் இந்நோயும் வலியும் பெறுதற்கோ குடிப்பார் என இரங்கியது இது.

வலியென் றறிந்தறிந்தும் வாயூதிக் கற்கும்
எலியர் தமக்கே எமன். *450*

(பொ) நெஞ்சு வலியுண்டாக்கும் என்று நன்றாக அறிந்தும் வாயில் புகை வைத்து மறைந்து குடிக்கும் இளைஞர் தமக்குத் தாமே எமனாக அமைந்தவர் ஆவர்.

(வி) வாயூதிக் கற்கும் எலியர் - வாயூதுதலையும் கலைபோல் செய்யும் இளைஞர்; கற்கும் பருவத்தர். அவர் பெற்றோரும் ஆசிரியரும் அறியக் கூடாதென மறைத்துக் குடித்தலால் 'எலியர்' எனப்பட்டார். ''எலி முயன்றனையர்'' என்பது புறநானூறு.

எமனும் முகம்பாரான் ஈக்கள் சுவைக்கும்
கமழ்வாய்ச் சடலத்தைக் கண்டு. *451*

(பொ) மது நாறும் வாயையுடைய உடலைக் கண்டு எமனும் ஏறிட்டுப் பாராமல் போவான்; ஈக்கள் மொய்த்து இன்புறும்.

(வி) எமனும் இப்பிறவி எதற்குரியது என்று அருவருப்படைந்து பாராமல் போவான் என்றது, கூற்றுவனும் விரும்பாப் பிறப்பு என்று இழித்தது. நாறும் வாயைக் 'கமழ் வாய்' என்றார். சடலம் - உடல்.

கண்டபடி ஊதிக் கரித்தூள் உறிஞ்சற்க
உண்டபடி மாறும் உடல். 452

(பொ) கருதியபடியெல்லாம் புகை வகைகளைக் குடித்து, கரித்துகள் உட்புகுமாறு உறிஞ்சுவதை விடுக; ஏனெனில், உண்ட கரித்துகள் போலவே உடலும் நிறமாகிப் போகும்.
(வி) துகள் - தூள்; நஞ்சு உடலைக் கருநிறமாக்கும்; இப்புகையும் அவ்வாறு ஆக்கும் என எச்சரித்தது இது. நீ மறைப்பினும் நிறம் காட்டிக் கொடுக்கும் என எடுத்துக் கூறியதுமாம்.

உடலே சிறந்த உடைமை மதுவின்
குடமாதல் அன்புக் கொலை. 453

(பொ) நம் உடைமை என்பவற்றுள் எல்லாம் சிறந்த உடைமையாவது நம் உடலேயாம்; இதனை மதுக்குடமாகக் குடியால் ஆக்கிவிடுதல் நாம் செய்யும் அன்புக் கொலையேயாம்.
(வி) ''அன்பின் வழியது உயிர் நிலை'' ஆதலின் குடியால் அழித்தல் அன்புக்கொலை ஆயிற்று.

கொலையிற் கொடியது கூடாப் பழக்கம்
விலையிற் பெரியது வீம்பு. 454

(பொ) சேரக் கூடாதவரிடத்துச் சேரும் நட்பு கொலையினும் கொடியது ஆகும்; அதுபோல் விலை கொடுத்து வாங்கும் பொருள்களில் எல்லாம் மிகுதியான விலை கொடுத்து வாங்கும் பொருளாவது வீம்பேயாம்.
(வி) வீம்பால் ஏற்படும் வெட்டிச் சண்டை, கைகலப்பு, கொலை, முறைமன்று, தண்டனை என்பவற்றை எண்ணினால் அதன் விலைமானம் விளங்கும்.

வீம்பு தமிழினத்தின் வேண்டாப் பிடியாகும்
நாம்புகல்வ தென்னோ நடப்பு. 455

(பொ) தமிழ் மக்களின் விரும்பத் தகாத கடைப்பிடி வீம்பு என்பதே யாகும்; இதனை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை; நாட்டு நடப்பே இதனை நன்றாகக் காட்டிவிடும்.
(வி) பிடி - கடைப்பிடி; 'நாம் புகல்வது என்னோ' என்றது புகலவேண்டுவது இல்லை என்பதாம்; நடப்பைப் பார் என்றார்; நாளிதழ்களைத் திருப்பினால் போதாதா? இதற்கு, மாணிக்கக் குறளா வேண்டும்?

நடப்பு மொழியிலும் நல்லதமிழ் இல்லை
படிப்பும் தமிழில்லை பார். 456

(பொ) நல்ல தமிழ், நடப்பு மொழியாகிய பேச்சு மொழியிலும் இல்லை; பள்ளிகளில் படிக்கும் படிப்பும் தமிழில்லை; இவற்றை எண்ணிப் பார்.

(வி) நடப்பு என்றது நாட்டு நடப்புக் காட்டும் செய்தித் தமிழையும் குறிக்கும்; 'பயிர் பாராமல் கெட்டது' என்பதுபோல் ஆகக் கூடாது என்றது இது.

பாராள் துறையெல்லாம் பண்பார் தமிழ்மொழியில்
ஊராள் கொணர்வாரோ ஒப்பு. 457

(பொ) உலகில் விளங்கும் துறைகள் எல்லாமும் எல்லா நலங்களும் அமைந்த தமிழ் மொழியில் கொண்டுவருவதற்கு, ஊராட்சியை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள் ஒப்புவார்களோ? ஒப்புவார்கள் எனின் நீ அவர்கள் ஆட்சியையும் ஒப்புக.

(வி) 'ஊராள்' என்றது, 'பாராள்' எதுகை கருதியது; நாட்டாட்சி சுட்டுவது அது; 'தமிழாளச் செய்வாரை ஆளவிடு' என்றது இது.

ஒப்புக்குக் கத்தும் உயர்தமிழா ஒல்காசுச்
செப்புக்கு விற்பாய் சிறப்பு. 458

(பொ) ஊரோடு ஒப்புக்காக முழக்குகின்றதே உயர் தொண்டு எனக் கொண்ட தமிழனே, நீ அற்பமான செப்புக் காசுக்காகவும் உன் சிறப்பை விற்று விடுவாயே!

(வி) ஒல் - சுருங்கிய; ஒல் செப்புக்காசு - சிறிய செப்புக்காசு; சல்லிக்காசு. ''நீ கத்துதலும் ஒப்புக்கு இல்லை; காசுச் செப்புக்கு'' என்றது இது.

சிறப்பைப் பழித்தாற் சினங்கொள்வாய் நீயே
மறப்பாய் தமிழை மடித்து. 459

(பொ) தமிழின் சிறப்பை அயலான் பழித்தால் உடனே சீறுவாய்; ஆனால், நீயே அத்தமிழை அழியச் செய்து, அழித்தோம் என்பதையும் மறந்து போவாய்.

(வி) உன் சினத்தால் என்ன பயன் என்று இடித்தது இது. மடித்தல் - அழித்தல்.

மடித்தநாள் போதும் வளர்தமிழா பிள்ளை
படித்தநாள் அன்றே பழம். 460

(பொ) வளரும் தமிழுக்கு உரிமை கொண்டவனே, நீ அதனை அழித்த நாள்கள் போதுமானவை; இன்னும் அவ்வழியைத் தொடராதே; உன் மக்களேனும் அத்தமிழைப் படிக்கும் நாளேதான் வெற்றி நாளாகும்.

(வி) போன நிலை போயொழியட்டும்; எதிர்கால மக்களேனும் தமிழ் கற்க வழிவகை காண் என்றார்.

பழம்போலும் சங்கப் பனுவலைக் கற்றால்
கிழம்போகும் கீழ்மையும் போம். 461

(பொ) சுவையும் ஊட்டமும் அமைந்த நல்ல பழத்தைப் போன்ற சங்க நூல்களைக் கற்றால் கற்பவரின் முதுமையும் ஒழியும்; இழிமையும் நீங்கும்.

(வி) கிழம்போகும் என்றதால், முதியோர் தம் முதுமை நீங்கிப் புத்திளமை கொள்ளப் பொருந்திய வழி இது என்றார் ஆயிற்று.

கீழ்க்கணக்கு நூலைக் கிளர்வொடு கற்றக்கால்
ஊழ்க்கணக்கு நன்றாம் உயர்ந்து. 462

(பொ) நாலடி முதலாகப் பதினெண் கீழ்க்கணக்கு என்று சொல்லப்படும் நூல்களை ஆர்வத்தொடும் கற்றால், முறையான நூற்கல்வி சிறந்து நன்மையாகும்.

(வி) கிளர்வு - விருப்பு, ஆர்வம்; ஊழ் - முறைமை; கணக்கு- நூல், தனியுயர் மாமணியாம் திருக்குறளையும் இப்பதினெட்டனுள் ஒன்றாக்கியது, ஈரடி என்னும் பா அளவு ஒன்று கொண்டேயாம்.

உயர்திணை அஃறிணை உட்பால் அனைத்தும்
பயில்நிலை கண்ட பகுப்பு. 463

(பொ) தமிழின் உயர்திணை அஃறிணை என்பனவும், அவற்றின் உட்பகுப்பாகிய பால்களுமாகிய எல்லாம், வழக்கொடும் பொருந்தக்கண்ட பிரிவுகள் ஆகும்.

(வி) ஆண்பால், பெண்பால், பலர்பால் என்பவை உயர்திணைப்பால்கள்; ஒன்றன்பால், பலவின்பால் என்பவை அஃறிணைப்பால்கள்; இவற்றின் பகுப்பு, அறிவு நிலையில் அமைந்தவை அன்றிச் சொல்லொலியால் ஏற்பட்டவை அல்ல என்பதாம்.

பகுத்தறி காரணம் அன்றி வருணம்
வகுத்தல் தமிழுக்கு மாறு. 464

(பொ) பகுத்தறிவுடைய பிறப்பு, அஃதிலாப் பிறப்பு எனப் பகுத்தறிந்த காரணம் அல்லாமல், உயர்வு தாழ்வு காட்டும் சாதிப்பிரிவு சொல்லுதல் தமிழுக்கு மாறுபட்ட வழக்காகும்.

(வி) வருணம், நிறவழிச் சாதி; திணை என்பது ஒழுக்கம் என்னும் பொருளது; உயர்திணை - உயர் ஒழுக்கம்; அஃறிணை - அவ்வுயர்வல்லாத ஒழுக்கமுடைய உயிரும், உயிரில் பொருள்களும்.

மாறுபா டொன்றோ வடமொழி சொல்லுக்குக்
கூறுபால் ஒவ்வாக் குறை. 465

(பொ) ஒருவகையால் தானோ வடமொழிக்கும் தமிழுக்கும் மாறுபாடு? வட மொழிச் சொற்களுக்குச் சொல்லப்படும் பால் பிரிவு, ஒத்துக் கொள்ள இயலாத - ஒன்றொடும் ஒன்று பொருந்தாத - குறைபாடு உடையதாம்.

(வி) ஆண் பெயர் பெண்பாலில் வருவதும், பெண் பெயர் ஆண்பாலில் வருவதும், அலிப்பால் எனச் சொல்வதும் எல்லாம் அவ்வடமொழி அமைப்பாகும்.

குறைநிறை ஆங்கிலம் கும்மாளம் போடும்
நிறைசெந் தமிழின் நிலத்து. 466

(பொ) நலங்கள் அமைந்த செந்தமிழ் நிலத்திலே, குறைகள் பலவற்றுக்கும் இடமாக அமைந்த ஆங்கிலம் குதியாட்டம் போடுவது விந்தையேயாம்!

(வி) குறைநிறை ஆங்கிலம் 'நிறை செந்தமிழ்' நிலத்துக் கும்மாளம் போடல் முரண்பட்டது என்பது சொற்போக்காலேயே வெளிப்படுத்தும் நடைநலம் அமைந்ததாகும் இக்குறள்.

நிலத்தோர் கடமை நிலமொழி போற்றித்
தலைமொழி யாக்கல் தலை. 467

(பொ) ஒவ்வொரு நிலத்தின்கண்ணும் பிறந்து வாழ்வார்தம் கடமை, அவ்வந் நிலத்து மொழியைக் காத்து, அதனையே முதன்மையான நிலையில் வைத்து வளர்த்தல் ஆகும்.

(வி) நிலத்தோர் என்றது பிறந்தோரையும், குடிபுகுந்து நிலைபெற்று வாழ்வோரையும் குறித்தது; வயிற்றை ஓரிடத்துக்கு ஆக்கி, நெஞ்சை வேறோர் இடத்துக்கு வைப்பின் எப்பாலும் கேடேயாம்.

தலையார் பொறுப்பு தமிழ்மொழி வாழப்
பலவாம் புதுநூற் படைப்பு. 468

(பொ) தமிழ் மொழியில் தலைமையான புலமையுடையவர்களின் கடமை, அம்மொழி பல துறைச் செழிப்பும் கொண்டு வாழுதற்கு வேண்டிய பலதுறைப் புதுநூல்களையும் படைத்துத் தருவதாகும்.

(வி) தலையார் - தலைமையாயார்; ஆட்சித் தலைமையார் அதனை ஊக்குதல் வேண்டும் என்பது இதன் தொடர்புச் செய்தி.

படைக்க புலத்தொகுதி பாரறி வெல்லாம்
கிடைக்கும் கிளர்தமிழில் என்று. 469

(பொ) உலகத்தில் அறிய வேண்டும் அறிவுக் கூறுகள் எல்லாமும் விளங்கும் தமிழில் உண்டு என்னுமாறு அறிவுநூல் தொகுதிகளை இயற்றுதல் வேண்டும்.

(வி) ''பாரறிவெல்லாம் கிளர் தமிழில் கிடைக்கும் என்று படைக்க புலத்தொகுதி'' என இயைக்க. புலம் - அறிவு.

என்றும் தமிழால் எதுவும் பெறலாகும்
என்னும் புதுப்பெருமை ஈட்டு. 470

(பொ) எந்நாளும் தமிழால், வேண்டும் எத்துறையையும் பெறுதற்குக் கூடும் என்னும் புதியதாம் பெருமையைத் தேடிச் சேர்ப்பாயாக.

(வி) புலமையாளனே என்னும் விளியை இணைத்துக் கொள்க; ஈட்டு - தேடிவைப்பாயாக; அப்பேறு தமிழுக்கு இல்லை என்பாரின் வசை போக்கல் வேண்டும் என்றார்; அது மொழித் தேவையும்தானே.

ஈட்டுக ஆங்கிலத்திற் கீடாய்த் தமிழ்மொழியைத்
தீட்டுக நம்குறை தேர்ந்து. 471

(பொ) நம் மொழிக்கு எவை எவை வேண்டும் என்னும் குறைவைத் தெரிந்து நூல்கள் இயற்றுவாயாக; அதே பொழுதில் ஆங்கிலத்திற்கு ஒப்பாகப் பலதுறை அறிவு நூல்களையும் திரட்டி வைப்பாயாக.

(வி) முன்னது குறைவு நீக்கப்பணி; பின்னது நிறைவு ஆக்கப்பணி; இரண்டும் வேண்டும் என்றார்.

குறைமை தமிழென்று கூறிலார் கூறும்
மடைமைகட் கென்னோ மறுப்பு. 472

(பொ) அறிவு ஆராய்வு இல்லாதவர் தமிழ் குறையுடையது என்று சொல்லும் அறிவின்மைகளுக்கு, என்ன மறுப்புத் தான் சொல்வது?

(வி) கூறு இலார் - அறிவு இல்லாதவர்; அறிவுக் கூறும் குறைந்து, கூறும் வகையும் அறியாதவன் கூறுகெட்டவன். மறுப்பு வேண்டாமைக்கு விளக்கம் வரும்பாட்டு (473).

மறுக்கும் பொழுதை வளர்ச்சிப் பணியில்
நறுக்கெனச் செய்தல் நலம். 473

(பொ) அறிவின்றியோ, பொறாமையும் அழிவு நோக்கும் கொண்டோ மறுப்பார்க்கு, மறுப்பு எழுதிக் கொண்டிருக்கும்

பொழுதை வளர்ச்சிக்கு வேண்டிய பணியில் ஈடுபட்டு உடனுக்குடன் முடித்தல் நலமாகும்.

(வி) நறுக்கென - உடனடியாக; ''காணாதாற் காட்டுவான்'' என்னும் குறள் (849). வழியாக அமைதி கண்டு கொள்க.

நலங்கூர் தமிழென நம்பிக்கை யூட்டல்
வலந்தரும் வாழ்வு தரும். 474

(பொ) கற்பார்க்கு நலஞ்செய்யும் தமிழ் என்னும் நம்பிக்கை உண்டாக்கின், அது தமிழுக்கு வெற்றியையும் சிறந்த வாழ்வையும் தரும்.

(வி) நலங்கூர் தமிழென ஆக்கல் அரசின் கடமையாம்; தமிழ் கற்றார்க்கு இவ்விந் நலப்பேறு உண்டு என்று காட்டினால், அதுவே தமிழின் வெற்றியும் வாழ்வுமாம்; பிற வெற்றுரையே.

வாழ்வுத் தமிழர் வலிபெறச் செய்யாக்கால்
தாழ்வுக்குக் கற்பாரோ தாம். 475

(பொ) தமிழைக் கற்று அதனால் வாழ்வு பெறக் கருதும் தமிழர், வலிமை பெறுதற்குத் தக்க ஊக்குவிப்புகளைச் செய்யாவிடின், தாம் தாழ்வு அடைவதற்காகக் கற்பாரோ அவர்?

(வி) வாழ்வுக்கும் வளத்துக்கும் உதவுவது எதுவோ அதனைப் பற்றிக் கொள்ளல் உலகியல்பு என்று தெளிவித்தார்.

தமக்கு வருவாய் தமிழ்தரும் என்றால்
எமக்குமக் கென்பார் இடித்து. 476

(பொ) தமிழ்க் கல்வி தமக்கு நல்ல வருமானத்தைத் தரும் என்பது நடைப்படுத்தப்பட்டால் மோதி இடித்துக் கொண்டு எமக்கு இடம் உமக்கு இடம் என்று ஓடி வருவர்.

(வி) தமிழ் வருவாய் தரும் என்றால் எமக்கு உமக்கு என்பார் என்க. 478, 479 ஆம் பாடல்களைக் காண்க.

இடியப்பம் போலும் இனிமைத் தமிழைப்
படியப்பா என்பார் பரிந்து. 477

(பொ) தமிழ் ஆர்வமுடையவர்கள் அவ்வார்வம் இலாரைப் பார்த்து இரக்கத்துடன், ''இடியப்பத்தைப் போன்ற இனிமையுடையது தமிழ்; ஆதலால் படியப்பா'' என்று வேண்டும் நிலைமை இன்று உள்ளது.

(வி) இற்றை நாட்டு நிலை இன்னது என்று கூறியது இது. தமிழுக்கு இவ்வுவமை புதுமையானது.

பரிந்துரைக்க வேண்டா படிதமிழ் என்று
வரிந்தீட்டும் செல்வம் வரின். 478

(பொ) மடியில் வரிந்து கட்டுமாறு பெருஞ்செல்வம் தமிழால் வருமென்றால், தமிழைப் படி என்று மன்றாடி உரைக்க வேண்டிய நிலை இராது.
(வி) வரிந்து ஈட்டும் செல்வம் - கட்டுக்கட்டாக வரும் பெருந்தொகை என்றுமாம். "செல்வம் வரின் படி என்று உரைக்க வேண்டா."

வருவாய் வரவெனின் வன்மொழியும் ஏற்பர்
நரிவாயின் ஊனையும் நன்று. 479

(பொ) நரி வாயில் கௌவப்பட்ட ஊனையும் நல்லது எனின் ஏற்பர்; அது போல், வருவாய் மிக வருமெனின் கரடுமுரடான மொழி என்றாலும் கற்க விரும்புவர்.
(வி) "நாய் கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு" என்னும் பழமொழி நானூறு (87), "நரிவாயின் ஊனையும் நன்றேற்பர்" என்பதனொடு ஒப்பிட்டுக் காணத்தக்கதாம்.

நன்று தமிழ்தான் நடைபள்ளி ஆளாமல்
தின்று கொழுத்தல் திமிர். 480

(பொ) நல்ல தமிழானது தொடக்கப்பள்ளி ஆட்சியையும் கொள்ளாத நிலையில், சோறுண்டு கொழுத்தல் தடித்தனம் என்றே கருதப்படுவதாகின்றது.
(வி) மொழிக்கடனாற்றா உண்டியும் உண்டியோ என நொந்தது இது. நடைபள்ளி, பள்ளிநடை. நடை - நடை வாயில், வழி.

திமிராக ஆங்கிலம் தில்லியில் இந்தி
நிமிராக வாழும் நிலத்து. 481

(பொ) நாம் கடமையைச் செவ்வனே செய்யாத தடிப்பால், இங்கே ஆங்கிலமும், தில்லியில் இந்தியும் நிமிர்ந்து கோலோச்சுவனவாக உள்ளன.
(வி) இங்கே தமிழாட்சியும் தில்லியில் கூட்டாட்சி மொழியாகவும் இருக்க வேண்டிய தமிழ், நம் செயற்பாடு இன்மையால் அவற்றை இழந்துள்ளது என்றது இது.

நிலவுரிமை பெற்றென் நிலத்துப் பிறந்த
தலமொழிகட் கில்லை சமம். 482

(பொ) விடுதலை என்னும் பெயரால் அயலாரிடமிருந்து நிலவுரிமையைப் பெற்று என்ன பயன்? இந்நிலத்துப் பிறந்த

மொழிகளுக்குள்ளேயே ஒத்த ஒரு நிலை இல்லையே! இதுதான் உரிமைப்பேறோ?

(வி) தலமொழி - மண்ணின் மொழி; மாநில மொழி. இந்தியின் வல்லாண்மையால் நிலத்து மொழிகளுக்குச் சமனிலை இல்லாமல் ஆயிற்று.

சமனிலை இல்லை தமிழ்மொழிக் கென்னின்
எமனிலை வேறுண்டோ எண். *483*

(பொ) பிறந்த மண்ணிலேயே தமிழ் மொழிக்குப் பிறமொழிகளோடு ஒத்தநிலை இல்லை என்றால் அதற்கு அழிவுநிலை என வேறு ஏதாவது உண்டா? இதனை எண்ணுவாயாக.

(வி) எமன்நிலை - அழிவு நிலை; என்னின் - என்றால்; ஒப்பிலா ஒரு நிலை வேண்டிய ஒன்றுக்கு, ஒத்த நிலையும் இல்லை என்றால் எண் என்றார்.

எண்ணுந் தமிழ்க்குறிகள் எங்கோ மறைந்தன
பண்ணுந் திறங்களும் பாழ். *484*

(பொ) எண்ணுதற்காக இருந்த தமிழ்க் குறியீடுகளும் இல்லாமல் ஒழிந்து விட்டன; அதுபோல் பண் என்றும் திறம் என்றும் சொல்லப்படும் இசைத் தமிழ்க் கூறுகளும் இல்லாமல் ஒழிந்தன.

(வி) தமிழ் எண்கள் பெருவழக்கொழிந்தன. இக்குறளில் தமிழ் எண்களும் தமிழ்ப் பண்களும் போற்றப்படுதல் அறிக.

பாழ்கண்டு ஞாலம் பரப்பிய எண் தமிழ்
சீழ்கொண்ட தென்னோ தெளி. *485*

(பொ) சுழி எனப்படும் எண்ணிலா எண் ஒன்றனைக் கண்டு, உலகெல்லாம் பரப்பிய தமிழ், தன் எண் வடிவை இழந்து புண்கொண்டதாகியது எதனாலோ? தெளிவாயாக.

(வி) ஆட்சியாளரும் கல்வி நிலையமுடையவரும் மேனிலை அறிஞரும் கருதிச் செயல்படாக் குறையே இதற்குக் காரணம் என்பது தெளிவாம்; பாழ் என்றது '0' சுழியை.

தெளிந்த மருத்துவச் சித்த முறையும்
நலிந்தது காணாய் நசித்து. *486*

(பொ) தெளிவு மிக்கதாக விளங்கிய சித்தமருத்துவ முறையும் வழக்கில் குறைந்து நலிவடைந்ததை அறிவாயாக.

(வி) நாடி பார்த்தல் கலையை இழந்து போனதை முன்னே சுட்டினார்; இது, எளிய இனிய இயற்கையான சித்த மருத்துவமும் சிதைவுற்றதே என்று வருந்தியது.

நசிக்கும் தமிழன்று நாடி பிடித்துப்
பசிக்கும் வலுவூட்டும் பண்டு. *487*

(பொ) அழிந்து போகவிடும் தமிழ் மருத்துவமன்று சித்த மருத்துவம்; நாடியைப் பிடித்துப் பார்த்துப் பசிக்கச் செய்தலும் வலுவூட்டலும் கூடிய மருத்துவமாக முன்னே இருந்தது அது.

(வி) பசிக்கச் செய்தற்கென ஒரு மருந்தும் வலுவூட்டற்கென ஒரு மருந்தும் இல்லாமல், பசியெடுத்தலும் வலுவேற்றலும் ஒருங்கே உண்டாக்கும் மருத்துவம் அது என்று சிறப்பித்தது இது.

பண்டைய சித்தர்கள் பச்சிலை கைக்கொண்டு
மண்டுநோய் தீர்ப்பர் வடித்து. *488*

(பொ) முந்தைச் சித்த மருத்துவர்கள் பச்சிலைகளைப் பறித்து அதனை வடிநீர் (கழாயம்) ஆக்கித் தீரா நோய்களையும் தீர்த்தனர்.

(வி) வடித்தல் - கழாயமாக்கல் (கழாயம் - கசாயம்); மண்டு நோய் - நீங்காது வருத்தும் நோய்.

வடுவாழ் எலும்பு மடைமுறியும் தைலக்
கடுசார நீங்கும் கடுப்பு. *489*

(பொ) குழியாக ஆழ்ந்துபோன மூட்டு, எலும்பு முறிவு ஆகியவையும் கடிய மருந்து எண்ணெய் விட்டுக் கட்டுதலால் சீர்பட்டு வலி நீங்கலாயின.

(வி) மடை - எலும்பு மூட்டு; தைலக் கடு - மருந்து எண்ணெய்; கடுப்பு - வலி. எலும்பு முறிவின் வலியை நீக்கி, வலுவை ஆக்கும் எண்ணெய்க் காப்பு சித்த மருத்துவத்தில் சிறப்புடைய ஒன்றாம்.

கடிவாய்த்த நஞ்சும் கணவேப் பிலையால்
அடிவாய்த்துப் போகும் அற. *490*

(பொ) வலுவாகக் கடித்த நச்சுயிரிகளின் கடியும் வெப்புக்கால வளமான வேப்பிலையால் அடிவாங்கிக் கொண்டு அறவே ஓடிப்போகும்.

(வி) கணவேப்பு - வெப்பக் காலத்தில் வளமாகத் தளிர்க்கும் வேம்பு; அடிவாய்த்தல் என்பது மந்திரித்தல் குறித்தது; அற - முழுதாக. மந்திரம் என்றது தமிழ் மந்திரம். அது, "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம்" என்பதால் விளங்கும் தொல். 1434.

அறவிலை வாணிகம் ஆற்றார் மருந்தின்
குறுவிலைக்கே செய்வார் குணம். 491

(பொ) சித்த மருத்துவர்கள் தம் மருத்துவ அறப்பணியை வாணிக விலைப்பணி போலச் செய்தார் அல்லர்; மருந்துக்குரிய சிறிய விலை வாங்கிக் கொண்டே நலப்படுத்தினர்.

(வி) சித்தமருத்துவம் வறியவர்க்கு வாழ்வளிக்கும் மருத்துவம் என்றது இது. ''அறவிலை வாணிகம்'' என்பது புறநானூற்று ஆட்சி.

குணமாகா தென்பர் கொடுபணத்தால் வித்தை
மணமாகா தென்பர் மதித்து. 492

(பொ) கொடுக்கும் பணத்தையே குறியாகக் கருதிச் செய்தால், நோய் குணமாகாது என்று கூறுவர்; மேலும், தாம் கொண்ட மருத்துவக் கலைக்கும் புகழுமாகாது என்றும் பெருமையாகக் கூறுவர்.

(வி) கொடு பணத்தால் என்றது கொடுக்கும் பணத்தைக் கருதி மருத்துவம் செய்தால் என்னும் பொருளது. தம் வாழ்வை எளிமையாக்கிக் கொண்டு உயிர்ப்பிணி தீர்க்கும் அருளாளராக விளங்கியமை விளக்கியது இது.

மதிமகள் அவ்வைக்கு வாழ்நெல்லி ஈந்தான்
அதிமகன் தன்மை அறிந்து. 493

(பொ) அதியமான் என்னும் நன்மகன், நல்லியல் புலமையாட்டியாக விளங்கிய ஔவைக்கு நெடுநாள் வாழச் செய்யவல்ல நெல்லிக்கனியின் இயல்பை அறிந்துகொண்டு தந்தான்.

(வி) நீடு வாழ்வு தரும் என்பதை அறியாமல் தந்தான் அல்லன் என்று அவன் பேருளப் பெருங்கொடை உரைத்தது இது. ''தீங்கனி குறியாது, ஆதல் நின்னகத்தடக்கிச் சாதல்நீங்க எமக்கீத்தனையே'' (புறம். 91)என்பது ஔவையார் மொழி.

அறிந்த தமிழ்மக்கள் அங்கையுட் போற்றிப்
பொதிந்தனர் நெல்லிப் பொருள். 494

(பொ) நெல்லிக் கனியின் சிறப்பறிந்த தமிழ் மக்கள், தம் கையகத்துப் பொருளாக அதனைக் கொண்டு வைத்துப் போற்றினர்.

(வி) ''உள்ளங்கை நெல்லிக் கனிபோல'' என்னும் உவமையை உட்கொண்டு உரைத்தது இது. அகம் கை - அங்கை; உள் அகம்கை - உள்ளங்கை.

நெல்லிக் கனியை நெடுநாள் சுவைத்தக்கால்
புல்லு பனையாம் புடைத்து. 495

(பொ) நெல்லிக் கனியைத் தொடர்ந்து நெடுநாள்களுக்கு உண்டு வந்தால், புல்லுப்போல் வாரும் பனையே போல் பருத்துவிடுவர்.

(வி) நெல்லிக்கனி என்றது அதன் சாறு, பொடி, வடிநீர், ஊறல் எனப் பலவகைக்கும் பொருந்தும். புல்லும் பனையும் ஓரின நிலைத்திணை ஆகலின், உவமையிலும் இனமாறாது அமைத்தார்.

புடைகீழா நெல்லியால் போயொடுங்கும் என்ப
மடைதாழா மஞ்சட்கா மால். 496

(பொ) அடங்கித் தணியாத மஞ்சட்காமாலையும் கீழ் வாய் நெல்லி அரையல் உண்ணுதலால் இருந்த இடம் தெரியாது ஒடுங்கிப் போகும் என்பர்.

(வி) கீழ்வாய் நெல்லியின் தனிப்பெரும் சிறப்புரைத்தது இது; மருத்துவத்தைக் கூறியவர் மருந்துச் சீர் உரைத்தது 493 - 499.

மாலுக்கும் என்மிச்சை வாய்மருந்து கைந்நகச்
சூறுக்கும் நல்ல துணை. 497

(பொ) பித்தமயக்கு, படபடப்பு ஆயவற்றுக்கு வாய்த்த மருந்து எலுமிச்சையாகும்; கைவிரலில் வரும் உகிர்ச்சுற்று என்னும் நகச் சுற்றுக்கும் அவ்வெலுமிச்சை நல்ல மருந்துத் துணையாகும்.

(வி) மால் - மயக்கம்; என்மிச்சை - எலுமிச்சு; நகச்சூறு - நகச்சுற்று; வாய் மருந்து - வாய்த்த மருந்து.

துணைத்து வளர்த்த துறைவிளக் கெல்லாம்
அணைத்துக் குறைத்தோம் அழித்து. 498

(பொ) செழிப்பாக வளர்க்கப்பட்ட மருத்துவத் துறையின் விளக்கங்களை யெல்லாம், மறைத்தும் வழக்கொழித்தும் குறைத்துவிட்டோம்.

(வி) துணைத்து - திரண்டு, தொண்டின் துணை கொண்டு. பெயர் சொன்னால் பயன் தராது என்று மறைத்தும், செய்வகை காட்டாதும் குறைத்ததை, ''அழித்து அணைத்துக் குறைத்தோம்'' என்றார்! இதனை 'மருந்தறைகோடல்' என்னும் கலித்தொகை.

அழியும் மருந்தல்ல ஆரா எளிமை
இழியும் நிலைபயந்த தின்று. 499

(பொ) ஆரை எனப்படும் கீரை அழிந்துபடும் வகையது அன்று; எளிமையாய் நீர்வளப் பகுதியில் வளர்வது; அது, இந்நாளில் நம்மிடமில்லாமல் போகும் நிலையுடைய தாயிற்று.

(வி) ஆரா - ஆரை; ''ஒருகால் நாலிலைப் பந்தல்'' என்பது நீராரை; இது வல்லாரை. இழிதல் - நம்மை விட்டு அகன்று போதல்.

இற்றைக் கவர்ச்சி எளிமையில் இல்லையே
கற்றைக் குதிசெருப்பு காட்டு. **500**

(பொ) இந்நாளில் கவர்ச்சி என்பது எளிய பொருளாகவா உள்ளது? இல்லையே! அதன் அருமைக்குப் பின்னுயர்ந்து முன் தாழ அமைக்கப்படும் குதி செருப்பே எடுத்துக் காட்டாகும்.

(வி) கற்றை - திரண்டது. விலை ஏற்றமும் போலித் தோற்றமும் உடையது ஆகலின் ''எளிமையில் இல்லையே'' என்றார்.

காட்டும் தரமன்று கற்ற மடவார்க்கு
மாட்டுவாய்த் தீவனத்தை வை. **501**

(பொ) கற்பன கற்றும் மொழி அறிவில்லாதவர்க்கு ஒப்பாகக் காட்டும் தகுதி எதற்கும் இல்லை; அவர்க்கு மாடுண்ணும் தீவனத்தையே உணவாக வைப்பாயாக.

(வி) மொழி அறிவும் பற்றும் இல்லாதவர் இக் கற்ற மடவார் என்பது மேல்வரும் பாடல்களால் (502 - 505) அறியப்பெறும்.

வைத்தாலும் தின்று வருமொழிக்குக் கைகொடுப்பர்
எத்தாலும் வாழ்வர் இவர். **502**

(பொ) மாடு தின்னும் தீவனத்தையே வைத்தாலும் அதையும் தின்று, அயல்மொழிக்கே கைகுலுக்குவர்; இவர் எத்தகைய நிலையிலும் எக்கேடும் செய்து வாழ்வர்.

(வி) வருமொழி - அயல்மண்ணில் இருந்து வரும் மொழி; கை கொடுத்தல் - வரவேற்றல், எத்தாலும் - எவ்வகையாலும்,

இவர்போல் தமிழர் இருத்தலால் முட்டும்
சுவர்போல நின்றோம் சுமந்து. **503**

(பொ) இவரைப் போன்ற பற்றில்லாத் தமிழரே பலராய் இருத்தலால், தொல்லையைச் சுமந்து கொண்டு மோதும் சுவர்போல நின்று விட்டோம்.

(வி) சுவர்க்குத் தேய்தல், சரிதல், இடிதல் உண்டே யன்றி வளர்தல் இல்லையே; அவ்வாறு ஆனோம் என்றார்.

சுமந்த அயல்மொழிகள் சும்மாட்டில் ஏறும்
அமைந்த நிலத்தமிழை அற்று. **504**

(பொ) நம்மேல் வந்து சுமையான அயல்மொழிகள், உரிமை யமைந்த இம்மண்ணின் மொழியாகிய தமிழை அற்றுப் போகச் செய்து, நம் தலைச்சுமையடையின்மேல் ஏறிக் கொண்டன.

(வி) சும்மாடு என்பது சுமையடையின் திரிபு. அற்று - அறச் செய்து. இருக்க வேண்டியதைக் கெடுத்து, இருக்க வேண்டா நிலையில் இருப்பதை உரைத்தது இது.

அற்ற வருமொழிகள் ஆட்சி அணையேறும்
சுற்ற மொழியைத் துடைத்து. 505

(பொ) சுற்றமாய் அமைய வேண்டிய மொழியை அகற்றி, உரிமை யற்ற அயல்மொழிகள் அரியணை ஏறிக் கொண்டுள்ளன.

(வி) மொழிகள் என்ற பன்மை 481 ஆம் பாடலில் சுட்டிய மொழிகளை; ஆட்சியணை - அரியணை; அரசு கட்டில்.

மொழிப்பறிக்கு ஒப்பில்லை மூவாக் கடுப்போல்
நிலப்பறியும் உள்ளடங்கும் நீண்டு. 506

(பொ) தாய் மொழியை இல்லாமல் பறித்துவிடும் பறிப்புக்கு ஒப்பானதொரு பறிப்பு இல்லை; என்றும் முதிர்ந்து போகாத நஞ்சேபோல் பரவி, நிலத்தைப் பறிக்கும் பறிப்பும் அம்மொழிப் பறிப்பின் உள்ளே அடங்கிக் கிடக்கும்.

(வி) மொழிப்பறி என்பது மொழிப்பறியோடு நில்லாது; அது நிலப்பறியேயாம் என்று அறைகூவி நிறைந்தது இப்பாட்டு.

தமிழாயிரமாகக் கிளர இருந்தது மாணிக்கக்குறளாய் இவ்வளவில் அமைந்தது.

மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார் பாடலுக்குப் புலவர் இரா.இளங்குமரன் இயற்றிய பொருளும் விளக்கமும் முற்றும்.

பாட்டு முதற் குறிப்பு அகராதி

118 எண் : பாடல் எண்.

470 அசடு 262
239 அட்டுண்க 146
74 அடர்த்தெழு 318
17 அடுக்கி 429
52 அடைத்து 420
135 அணைக்கட்டு 308
297 அதுவன்றோ 155
312 அமைவுடை 252
104 அயலே 431
அரண்சிறந்தும் 54
332 அவரும் 282
419 அவள்தமிழ் 416
32 அவள்பிறந்த 117
18 அவைமூன்று 29
அழகுடைமை 329
458 அழியும் 499
333 அளக்கும் 221
217 அற்ற 505
66 அற்றற் 387
328 அறத்திற் 278
313 அறவிலை 491
285 அறிஞர் 364
22 அறிந்த 494
275 அறியாதான் 401
105 அறியார் உள 38
அறியார் எவர் 4
307 அறியார் நரி 113
205 அறியும் 390
85 அறிவாய் 368
380 அறிவு 75
அன்புக் 375
அன்றன்று 338

ஆக்கஅறி 62
ஆக்கஞ் 343
ஆமென 77
ஆய்வு வளம் 197
ஆழ்வார் 299
ஆறும் 290

இடத்தால் 345
இடருற்ற 403
இடியாப்பம் 477
இணைந்த 250
இதுநெறி 439
இயல்பாக 147
இயல்புக் 291
இயல்பை 247
இரப்பேன் 79
இருமொழிக் 133
இல்லாத 228
இவர்போல் 503
இழந்தேம் 26
இழிவை 145
இற்றைக் 500
இனப்பற் 339
இனிப்பு 93

ஈட்டுக 471
ஈயாதவ 296
உடலே 453
உடைய 374
உண்டாய 398
உண்டு தமிழ் 138

462	உண்டுமேல்	91	எழுந்தமொழி
	உண்டென	161	என்றும் தமிழால்
185	உணர்ச்சிக்	27	என்றும் மது
492	உணர்ச்சித்	269	என்றுமுதற்
141	உணர்ந்தாரை	445	என்றுமுள
399	உணர்ந்தால்	335	என்றென்
76	உணர்வார்	362	என்னவர்
53	உணர்வீர்	183	என்னென்ன
466	உணவொரு	188	என்னை
472	உந்திக்	418	எனைத்தானும்
	உயர்த்துவோம்	67	
10	உயர்திணை	463	ஏழை நிலை
304	உயர்ந்த	428	ஏறுபோல்
43	உயர்வு	97	ஏனென்று
424	உரிமை	302	ஏனோதமிழினம்
365	உருத்துவந்	153	
	உளத்து	150	ஒப்புக்குக்கத்தும்
222	உறையுள்	100	ஒப்புக்குக்கூடி
			ஒலிகூட்ட
87	எங்கும்	435	ஒழிகென
199	எண்ணுக	484	ஒழிந்தது
351	எதற்கும் தமிழ்ச்	363	ஒழுங்குவர
287	எதற்கும் தமிழை	261	ஒளிவாழ்வு
162	எதிர்த்தாள்	274	ஒன்றாக
454	எதிர்ப்புக்	319	ஒன்றிய
134	எமக்குத்	388	ஒன்றோ
320	எமக்கென்ப	2	
92	எம தென்பார்	11	ஓதுவார் ஓர்
99	எமனும்	451	ஓதுவார் பாடும்
	எழுகென்றான்	50	ஓம்பும்
130	எழுத்துத்	156	ஓர்ந்தார்
400	எழுதின்	417	
483			
327			

321
12
57
430
281
476
3
268
1
6
231
468
369
415
202
443
394
115
481
81
37
286
409
14
139
498
35
355
361
182
21
198

கட்கினிய 436
கடன் பழக்கம் 235
கடனுரிமை 160
கடியும் 154
கடிவாய்த்த 490
கண்டபடி-ஊதி 452
கண்டபடி-எழுதும் 293
கண்டுசுவை 383
கதிரொடு 127
கதைநீள 157
கருத்துடை 359
கருதுவார் 310
கல்லாப் 132
கல்வெட்டில் 395
கலங்குதல் 112
கலனும் 59
கலையின்பம் 246
கழிக்கதில் 265
களிமிக்க 71
களிறுபிடி 15
களைக 167
களைகண் 224
கற்புடைமை-கா 177
கற்புடைமை-கை 372
கறக்கும் மது 240
காட்டாக 95
காட்டும் தர 501
காட்டும் திரு 385
காட்டும் பய 370
காடுகாண் 263
காண்போம் 283
காண முடியும் 63
காணல்-கட் 215
காணல்-காசற 151
காந்திசீர் 241
காப்புடைமை 189

காய்ந்த

கீழ்க்கணக்

குடையின்பம்
குணமாகா
குதிக்கும்
குறளை
குறிக்கோள்
குறில்கள்
குறைநிறை
குறைமை

கூத்தும்
கூறிய
கூறுடைக்
கூறுவ
கூனாய்

கேட்கும்

கொடியார்
கொடி வருத்தம்
கொண்டபோர்
கொதிப்பு
கொதிப்புற்ற
கொலையிற்
கொள்கை
கொள்கைப்
கொள்வீர்
கொள்ளுக

சத்திற்
சமமென
சமனிலை
சழக்குகள்

சாயவரு	209	தகரக்
சாயும் நிலை	19	தகைப்பால்
சான்றாக	334	ததைபெருத்
		தடிகொண்
சிதைந்தன	322	தம்மை இக
சிரிக்கும்	123	தமக்கு
சிரித்துக்	289	தமிழ் முதற்
சிலம்பினை	270	தமிழா
சிலவே	108	தமிழிற் சிறந்த
சிற்பத்	253	தமிழின்
சிறந்த தமிழ்	103	தருமென்று
சிறந்த வட	348	தலையார்
சிறந்த வர	303	தவற்றுக்
சிறப்பழிக்க	40	தளிர்த்த
சிறப்பை	459	தனித்தொரு
சிறுமை	340	
சிறுமை பல	143	தாயின்
சினக்கும்	94	
சினத்திற்	438	திக்கு
		திணிக்கும்
சுமந்த	504	திமிராக ஆங்.
சுருண்டு	272	திமிராக வாழ்
		திறமிக்க
சூழ்ந்தவன்	51	திறமை
செப்புதும்	90	தீச்சுவை
செய்தான்	200	
செயலெனெ	292	துடியிடை
செயற்குரிமை	159	துணிந்த
செழியன்	317	துணைத்து
		துணையாகி
சேர்த்துச்	33	துணையென
சேரவிரும்	72	துப்பாக
		துய்க்கு
சொல்லத்	24	துளை துளையா
சொல்லில்	433	துறுகல்

தூக்கிய	125
தூர்ந்த	68
தெம்மாங்கு	140
தெளிந்த ஒலி	164
தெளிந்த மருத்	486
தெளிந்தேம்	381
தெளிமிக்க	84
தேர்த்தொழில்	391
தேர்தற்	191
தேனின்பம்	206
தொக்கு	309
தொகையாக	396
தொட்டக்கால்	378
தொட்டுக்	352
தொட்டுவணங்கி	421
தொடர்ந்தன	325
தொடர்பு	342
தொண்டது	192
தொல்முதற்	404
தொல்லைச்	349
தொல்லொளி	186
தொலைநோக்கு	69
தொழுவாய்	31
தோளும்	412
நகைமுன்	172
நச்சு	324
நசிக்கும்	487
நடக்கும்	220
நடந்தால்	264
நடப்புக்	389
நடப்பு மொழி	486
நடிப்புக் கோர்	13
நம்பற்குரிய	86
நமக்கோர்	257
நமனாக	260
நயங்கண்ட	106
நல்கின்	448
நலங்கூர்	474
நலஞ்சால்	413
நன்று தமிழ்	480
நாடாதும்	23
நிமிர்ந்து	70
நிலத்தோர்	467
நிலம் வாழ்	82
நிலவுரிமை	482
நிலைநூல்	39
நிலைபெற்ற	165
நின்றுமேற்	249
நினைமறித்து	447
நினைவினிய	126
நினைவு	101
நீண்ட	411
நெஞ்சப்புணர்	175
நெல்லிக்	495
நெறியயல்	195
நேர்ந்த	408
நேர்பகை	259
நேர்மாறா	178
நேரசை	120
நேரினிய	204
நொசியாது	212
நொடியை	377

பகட்டு	187
பகுத்தறி	464
பட்டதை	422
பட்டப் பகலில்	30
படிக்க துறை	193
படிக்க முடிந்	148
படிக்க வழி	337
படித்து முழக்கும்	267
படைக்க	469
பண்டைய	488
பண்புடையார்	233
பணிக தமிழ்	360
பதரும் படா	88
பயனாக	109
பயனிலை	405
பரிந்திரப்பன்	238
பரிந்துரைக்க	478
பலநாடு	407
பழம்போலும்	461
பழுக்கா	311
பழுத்த	379
பறைமுதற்	207
பற்றுடையார்	330
பாட்டை	149
பார்க்காதே	20
பாரடா சப்பான்	83
பாராள்	457
பாரிற் கொழுத்த	248
பாரெங்கும்	434
பாவகை	131
பாழ்கண்டு	485
பாழ்நூல்	256
பாழில்	306
பிணவாய்	213
பித்துத்தமிழர்	34
பிரியத்	444
பிளவின்றி	214
பிறந்தார்	41
பிறந்தேம்	244
பின் வாழ்க்கை	227
பின்னாக	136
பின்னுடையார்	201
பீடு நடவாய்	16
புக்கன	323
புகலிடம்	171
புகைகுடி	271
புடை கீழா	496
புடையான	386
புண்பெருக்க	25
புதிர்களுள்	344
புதுக்குதல்	89
புதைத்தோம்	301
புரிந்தே	122
புரியவே	80
புரியாத்	357
புன்ரயில்	96
புற்று	449
புறமதில்	392
பூச்சும்	243
பூத்துமணக்கும்	184
பெட்டகம்	152
பெட்பறார்	179
பெரிதே	251
பெரிய தமிழ்	64
பெருஞ்சமய	116
பெறுக	216

பேச்சுமொழி	44
பேறுபெரி	169
பொய்சொல	426
பொய்யன்று	229
பொய்யில்	366
பொய்யோ	28
பொருதுதான்	78
பொருள் செய்	280
பொருளுட்டம்	441
பொருளென	347
பொலிவார்	254
பொறுத்தனம்	158
பொறுத்து	410
பொறுப்பின்	373
பொறையின்றி	284
பொன்னிற்	102
பொன்னுடையார்	295
போடுவோம்	129
போர்த்தும்பை	142
போராட்டம்	163
போராடி	316
போரிற்	446
போழ்ந்த	432
போற்றற்	36
போற்றிப்	111
போற்றுதல்	8
மகவென்கோ	56
மகனாக	144
மகிழ்ச்சி	242
மகிழ்வு	356
மடித்த நாள்	460
மடிவில்லை	210
மடைமையா	384
மதிப்பிலா	98
மதிப்புக்குரிய	346
மதிப்போம்	9
மதிமகன்	493
மதியிலி	48
மயிர் வளரா	266
மலிந்த	7
மலிவுப்	353
மலிவு விலையில்	440
மலிவு விலைவைத்து	128
மலைப் பேரான்	258
மலை பச்சை	203
மற்ற மொழிகள்	341
மற்றவர்க்கு	245
மற்றும் குமரி	305
மற்றைக்கலை	255
மறந்தனம்	288
மறந்தொழிக	237
மறுக்கும்	473
மறைக்க	42
மறைந்த	437
மாணாக	279
மாலுக்கும்	497
மாறுபாடு	465
மானம்	180
மீட்சி	367
முகமுடையார்	298
முதலாக	46
முயற்சிக்	137
முளையா	402
முறை தமிழ்	47
முறையொடு	174
முறைவைத்து	194
மூடருள்	55

மெய்யென்று 230

மைதொட்டு 294

மொய்யென 376
மொழிப்பறி 506
மொழியயல் 45

யார் யார் 168
யாஞ்சொல் 190

வடுச்சிறிது 176
வடுவாழ் 489
வடுவிற் 232
வயிறுகழுவு 58
வரப்பொழி 223
வரவுக்கு 315
வரியென்னாள் 442
வரிவரி 107
வரிவரியாய் 218
வருவாய்க் 60
வருவாய் வர 479
வரைபடம் 393
வரையறுத்த 234
வலியென் 450
வழக்காட 5
வழக்கு 208
வழிபல 277
வழுத்தும் 173
வளஞ்சால் 354
வளத்துப் 397

வாய்க்கினிய 414
வாய்த்த 350
வாலியென் 406
வாழ்வுக் 336
வாழ்வுத் 475

விடத்துணிக 236
விடுக அயன் 124
விடுக குடி 181
விடு பிழை 219
விதிர்த்து 427
விதியில் 300
விதியென்று 331
விதைக்க 121
விரித்தபாய் 114
விரியும் 110
விரும்புக 226
விரும்பு துறை 61
விலக்கற்க 196
விலங்கும் 49
விழித்து 382
விளக்கு 225
விளம்பரம் 358
விளைநெறி 166
வினவினால் 119

வீணாக 170
வீணாரம் 425
வீம்பு தமி 455
வீறுடை மாதவி 276

வெட்டி 371
வெந்த சினத் 314
வெந்து 211
வெறிப்பட் 423

வேண்டுக 73
வேதப்படிப் 326
வேந்தனும் 273
வைத்தாலும் 502

மூதறிஞர் செம்மல்
வ.சுப. மாணிக்கனார் நூல்கள்

- கம்பர்
- தொல்காப்பியக் கடல்
- திருக்குறட் சுடர்
- சங்கநெறி
- காப்பியப்பார்வை
- இலக்கியச் சாறு
- ஒரு நொடியில்
- திருக்குறள் தெளிவுரை
- மாணிக்கக் குறள்
- நீதி நூல்கள்
- மாணிக்கக் குறள் தெளிவுரை
- மாணிக்கக் குறள் ஓர் அறிமுகம்

Wrapper Printed at Ganesh Printing, Ms-1. Ph ; 561039